மஜ்லிஸ் அன்ஸாருல்லாஹ்வின் வைர விழா வாழ்த்துக்கள்!

# இறைஞானம்


இயற்றியவர்

**ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூது அஹ்மது** (ரலி)

இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ்—அல் முஸ்லிஹுல் மவ்வூது
மஜ்லிஸ் அன்ஸாருல்லாஹ் அமைப்பின் தோற்றுநர்



வெளியிடுவோர்

**மஜ்லிஸ் அன்ஸாருல்லாஹ் - இந்தியா**

# IRFAN-E-ILAHI

*in Tamil*

***By***

**Hadhrat Mirza Basheeruddin Mahmood Ahmad**
**Khalifatul Masih IInd-Muslih-e-Maud[ra]**

This is the English rendering of the lecture delivered by Hadhrat Mirza Bashiruddin Mahmood Ahmad[ra], the Promised son of the Holy founder of the Ahmadiyya Muslim Jama'at Hadhrat Mirza Ghulam Ahmad sahib of Qadian, the Promised Messiah[as] on 16th March 1919, on His Holiness to occasion of Jalsa Salana Qadian. It was the practice of His Holiness to deliver an intellectual Lecture in the second day of Jalsa Salana. Huzur delivered this lecture at the age of 30.

Although Huzur was very much sick while delivering this Lecture, but by the divine support of Allah Almighty, Huzur delivered his Lecture on an important and sensitive topic that is Perception of Allah (Irafan-e-Ilahi)

This Lecture shows a true understanding of the relationship between Allah, the Creator and the Human beings in search of Him. It is replete with points of wisdom on how we can purity our deeds and attain true knowledge about Allah and strive to perceive him with all our efforts. It is a treasure that will benefit all those who search for a living God.

This speech has inspired and motivated every individual towards spiritual development.

Now we are blessed to produce the Tamil rendering of this book.

*Published by*
Majlis Ansarullah Bharat
Aivan-e-Ansar, Qadian-143516, Punjab, India
Email: ansarullahbharat@gmail.com

# இறை ஞானம்

16 மார்ச் 1919 காதியான் ஆண்டு மாநாட்டில் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூது அஹ்மது (ரலி) அவர்கள் ஆற்றிய உரை

**Tamil Version of the Book**

# Irfan-e-Ilahi

**Speech delivered by**

**Hadhrat Mirza Basheeruddeen Mahmood Ahmad Khalifatul Masih II**


Traslated by: Moulavi O.M. Muzzammil Ahmad
First Edition: 2015
Copies: 1000
Published by: Majlis Ansarullah Bharat
Aiwan-e-Ansar, GurdaspurDist
Qadian, Punjab-143 516

Prited at: Fazl-e-Umar Printing Press, Qadian



Note: No part of this Book may be reproduced in any form without prior written permission from Publisher, except for the quotation of brief passages in criticism.



ISBN: 978-93-83882-62-5



Noorul Islam Tool Free No: 1800-3010-2131
Tamil Toll Free No: 1800.425-40000

For further information Plese visit:
www.alislam.org
www. ahmadiyyamuslimjamaat.in/feedback

# முன்னுரை

அல்லாஹ்வின் அருளால் இந்திய மஜ்லிஸ் அன்ஸாருல்லாஹ் வைரவிழா கொண்டாடுவதையொட்டி இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ், முஸ்லிஹ் மவ்வூது சய்யிதுனா ஹஸ்ரத் அக்தஸ் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் ஞானம் நிறைந்த மகத்தான **'இறைஞானம்' (இர்ஃபானே இலாஹி)** என்ற சொற்பொழிவை பல்வேறு மொழிகளில் மொழியாக்கம் செய்யும் நற்பேற்றைப் பெறுகின்றது. அல்ஹம்து லில்லாஹி அலா ஸாலிக். இதன் தமிழாக்கம் வாசகர்களின் கைகளில் தவழ்கின்றது. இதனை மவ்லவி முஸ்ஸம்மில் அஹ்மது சாஹிப் அவர்கள் தமிழாக்கம் செய்துள்ளார்கள். அல்லாஹ் அவர்களுக்கு மகத்தான நற்கூலியை வழங்குவானாக.

இந்த வெளியீட்டை அல்லாஹ் எல்லா வகையிலும் அருளுக்குரியதாக ஆக்குவானாக. நாம் இந்த ஆன்மீக நீரூற்றிலிருந்து உரிய முறையில் பயன்பெற்றவாறு அல்லாஹ்வின் நெருக்கத்திலும், சந்திப்பிலும் முன்னேற்றம் காண்பவர்களாக ஆவோமாக. எந்த நோக்கத்திற்காக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இக்காலத்தில் தோன்றினார்களோ அதனை முழுமைப்படுத்துவதற்காக கலப்பற்ற முயற்சிகள் செய்யும் நற்பேற்றைப் பெறுவோமாக. **ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:**

**''எந்தப் பணிக்காக இறைவன் என்னை அனுப்பியிருக்கிறானோ அது என்னவென்றால், இறைவன் மற்றும் அவனது படைப்பினங்களுக்கு மத்திலுள்ள உறவில் ஏற்பட்டுவிட்ட கறையை நீக்கி மீண்டும் அன்பு மற்றும் கலப்பற்ற தொடர்பை நிலைநாட்ட வேண்டும்....... மேலும் மன இச்சைகள் என்னும் இருள்களில் புதைந்துவிட்ட ஆன்மீகத்தின் முன்மாதிரியைக் காட்ட வேண்டும்.....வழிதவறிச் சென்று விட்ட மக்களை நான் சகிப்புத் தன்மையுடனும், நல்லொழுக்கத்துடனும், மென்மையுடனும் இறைவன் மற்றும் அவனது தூய வழிகாட்டல்களின் பக்கம் ஈர்க்க வேண்டும் என்பதற்காகவும், எனக்கு வழங்கப்பட்ட ஒளியின் மூலமாகமக்களை நேர்வழியின் பக்கம் வழிநடத்த வேண்டும்**

**என்பதற்காகவுமே இறைவன் என்னை உலகத்தில் அனுப்பியிருக்கிறான்.''** *(லெக்சர் லாஹூர் மற்றும் தர்யாக்குல் குலூப் ஆகிய நூல்கள் காண்க).*

இந்த முக்கியமான நோக்கத்தை முன்நிறுத்தியவாறு அறிவிலும் இறைஞானத்திலும் முன்னேற்றமடைகின்ற, ஒப்புக்கொள்ளப்படத் தகுந்த இறைவணக்கங்கள் மற்றும் துஆக்களை செய்கின்ற நல்வாய்ப்பையும், நற்பேற்றையும் அல்லாஹ் நம் அனைவருக்கும் வழங்குவானாக. இர்ஃபானே இலாஹி (இறை ஞானம்) என்ற இந்த நூல் இந்த நோக்கத்தைப் பெறுவதில் எளிமையை உருவாக்குவதற்காக வழிகாட்டும் கோட்பாட்டை எடுத்து வைக்கின்றது. அன்ஸாருல்லாஹ் உறுப்பினர்கள் அனைவரும் அதிகமாக இதைப் படிப்பார்கள் என்றும், இதில் கூறப்பட்ட நுட்பமான விஷயங்களிலிருந்தும், ஞானங்களிலிருந்தும் பயன்பெற்றவாறு இறைநெருக்கத்தில் முன்னேற்றம் அடைபவர்களாக ஆவார்கள் என்றும் அனைவரிடமும் எளியவன் நம்புகின்றேன். அல்லாஹ் நம் அனைவருக்கும் இந்த தூய வழிகாட்டல்களிலிருந்து பயன் பெறுவதற்கான மற்றும் அறிவிலும், இறைஞானத்திலும் முன்னேற்றம் காண்பதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக.

வஸ்ஸலாம்.

எளியவன்

காரி நவாப் அஹ்மது

**சத்ர் இந்திய மஜ்லிஸ் அன்ஸாருல்லாஹ்**

# பொருளடக்கம்


| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | இறைஞானத்தைப் பெறுவதற்கான வழிமுறை | 22 |
| 2. | ஒரு நற்செய்தியுடைய ஆன்மீகக் கனவு | 29 |
| 3. | வழிவகைகளை மேற்கொள்ளாமல் துஆ ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை | 31 |
| 4. | செயல்படாமல் துஆ இரு நிலைகளில் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும் | 32 |
| 5. | வெற்றிக்கு சரியான முயற்சி என்பது நிபந்தனை | 33 |
| 6. | சரியான முயற்சி செய்யும் வழிமுறை | 35 |
| 7. | வெற்றிக்கான இரண்டு வழிமுறைகள் | 36 |
| 8. | இறைஞானம் உள்ளத்துடன் தொடர்புடையது; நாவுடன் அல்ல | 38 |
| 9. | இறை இருப்பை தெரிந்து கொள்ளும் வழிமுறைகள் | 40 |
| 10. | இறைவனுடன் ஒப்புமையை ஏற்படுத்துங்கள் | 41 |
| 11. | இறைபண்பை நம்மிடம் உருவாக்குவதன் வழிமுறை | 43 |
| 12. | முதல் வழிமுறை | 44 |
| 13. | இறைபண்புகளைப் பெறுவதற்கான வழிமுறை | 46 |
| 14. | நன்மை,தீமையை பிரித்தறியும் வழிமுறை | 47 |
| 15. | இறைபண்பை உருவாக்குவதற்கான வழிமுறை | 48 |

| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 16. | பாவம் செய்வதன் மூன்று வகைகள் | 48 |
| 17. | பாவம் செய்வதற்கான 2-ஆவது காரணம் | 50 |
| 18. | பாவம் செய்வதற்கான 3-ஆவது காரணம் | 50 |
| 19. | பௌதீக மருத்துவர்களிடம் ஆன்மீக நோய்களுக்கான மருத்துவம் | 55 |
| 20. | பாவங்களிலிருந்து தப்பிப்பதற்கான வழிமுறை | 56 |
| 21. | பாவமன்னிப்பிற்கான 7 நிபந்தனைகள் | 57 |
| 22. | எண்ணம் என்பதன் உண்மைநிலை | 66 |
| 23. | உள்ளத்தைத் தூய்மைப்படுத்தும் முதல் வழிமுறை | 70 |
| 24. | உள்ளத்தை தூய்மைப்படுத்தும் 2-ஆவது வழிமுறை | 70 |
| 25. | 3-ஆவது வழிமுறை | 72 |
| 26. | 4-ஆவது வழிமுறை | 77 |
| 27. | 5-ஆவது வழிமுறை | 78 |
| 28. | 6-ஆவது வழிமுறை | 80 |
| 29. | கணக்கெடுப்பதன் 2 வகைகள் | 82 |
| 30. | நற்செயல்களின் 4 வகைகள் | 88 |
| 31. | செயல்களைக் கணக்கிட்டுப் பார்ப்பதற்கான எளிய வழிமுறை | 88 |
| 32. | புறம்பேசுதல் என்பதன் இலக்கணம் | 90 |
| 33. | பாவங்கள் பற்றிய இலக்கணத்தை எப்படித் தெரிந்து கொள்வது? | 91 |

| எண் | பொருள் | பக்கம் |
| --- | --- | --- |
| 34. | ஏழாவது வழிமுறை | 93 |
| 35. | எட்டாவது வழிமுறை | 94 |
| 36. | ஒன்பதாவது வழிமுறை | 94 |
| 37. | பத்தாவது வழிமுறை | 96 |
| 38. | அயராது செய்த துஆவினால் கபூலான துஆ | 96 |
| 39. | தற்பெருமைக்கும், நம்பிக்கையிழக்காது இருப்பதற்கும் உள்ள வித்தியாசம் | 101 |
| 40. | பதினொன்றாவது வழிமுறை | 102 |
| 41. | இறைஞானத்தின் படித்தரங்கள் | 105 |

اَشْهَدُ اَنْ لَآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَ اَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَ
رَسُوْلُهٗ ۔ اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيْمِ ۔

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿١﴾ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِينَ ﴿٢﴾ الرَّحْمٰنِ
الرَّحِيْمِ ﴿٣﴾ مَالِكِ يَوْمِ الدِّيْنِ ﴿٤﴾ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِينُ ﴿٥﴾
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيمَ ﴿٦﴾ صِرَاطَ الَّذِينَ أَنْعَمْتَ عَلَيْهِمْ غَيْرِ
الْمَغْضُوبِ عَلَيْهِمْ وَلَا الضَّالِّينَ ﴿٧﴾

சென்ற ஆண்டுகளில் ஆண்டு மாநாட்டின் சம்பவங்களில் எனது பழக்கம் எப்படி இருந்திருக்கின்றதென்றால், ஜமாஅத்தின் பொதுவான சீர்திருத்தத்திற்கு அவசியமான விஷயங்களை முதல் நாளில் கூறுவேன். இரண்டாவது நாள் ஜமாஅத்திற்கு செயல் அளவிலான சீர்திருத்தத்திற்கு உதவக் கூடிய, ஒத்தாசையாக இருக்கக் கூடிய ஞானமுள்ள விஷயங்களைப் பற்றி எடுத்துக் கூறுவதுண்டு. ஆனால் நான் இவ்வாண்டு சில சம்பவங்களின் காரணமாக ஞானத்தின் அடிப்படையிலான ஏதாவதொரு விவகாரத்தைப் பற்றிய கருத்தை இரண்டாவது நாளில் கூறுவதற்குப் பதிலாக முதல் நாளிலேயே கூற எண்ணியுள்ளேன். ஆனால் என்னுடைய இந்த எண்ணம் இறை எண்ணத்துடண் ஒன்று கூட வேண்டும்.முந்தைய ஆண்டுகளில் மாநாட்டின் முதல் நாள் சொற்பொழிவு பல்வேறு விஷயங்கள் தொடர்பாக இருந்தது. இப்போது அது இரண்டாவது நாளில் கூறப்படும். இந்த எண்ணத்தில் அடிப்படையில் இன்று நான் உங்களுக்கு ஓர் அவசியமான விஷயம் பற்றி சிலவற்றைக் கூறுகிறேன்.

ஆனால் இந்த சொற்பொழிவைத் துவக்குவதற்கு முன் நான் ஒன்றைக் கூறிக் கொள்வதை அவசியமானதாகக் கருதுகிறேன். சென்ற நாட்களில் நீண்ட கடுமையாக நோயுற்றிருந்ததன் காரணமாகவும், பிறகு சில நாட்களுக்கு முன் எனக்கு லாஹூர் செல்ல வேண்டியதிருந்தது. அங்கு பல நாட்களாக தொடர்ந்து பல மணி நேரங்கள் மார்க்கம் தொடர்பாக பேச வேண்டியதிருந்தது. இரண்டு சொற்பொழிவும் ஆற்றினேன். அதனால் உடல்நிலை மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. மேலும் இப்போது வரை உடல் பலவீனமாகவே இருக்கிறது. எனவே இதற்கு முன்னர் நான்கு, ஐந்து, ஆறு மணி நேரங்கள் சொற்பொழிவாற்றியதைப் போன்று இன்று இரண்டு மணி நேரம்

கூட ஆற்றும் ஆற்றல் இருக்கிறதா என என்னை நான் கருத முடியவில்லை. இரண்டாவது, எனது குரல் ஒருவேளை அனைவர் வரையிலும் எட்ட முடியாமற் போகலாம் எனக் கருதுகிறேன். அனைவருக்கும் சென்றடைய வேண்டும் என்ற வகையில் நான் அல்லாஹ் எனக்கு வழங்கி இருக்கின்ற ஆற்றலுக்கேற்ப உரத்த குரலில் பேசுவதற்கு நான் முயற்சி செய்வேன். ஆனால் எவருக்காவது சென்றடையவில்லை என்றால் அவர் அதை இறைவனுடைய ஞானத்தின் கீழ் உள்ளதாகக் கருதிக் கொள்ளட்டும். இறைவன், தான் விரும்புபவருக்கு கேட்க வைக்கிறான்; தான் விரும்புபவரை விலக்கி வைக்கிறான். அவனுடைய நாட்டத்திற்கும், திருப்திக்கும் எவரும் போட்டி போட முடியாது. ஒவ்வொரு மனிதனும் தனது விருப்பதை இறைவனது விருப்பத்தின் கீழ் வைக்க வேண்டும். ஆக, இன்றைக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்ற இந்தக் கருத்து பற்றி விளக்கிக் கூறுவதற்கு நான் முயற்சி செய்வேன். அடுத்து, இறைவனின் நாட்டம்.

நான் சென்ற மாநாடுகளில் திக்ரே இலாஹி (இறை தியானம்), ஹகீகத்துர் ருஃயா (ஆன்மீக கனவின் உண்மை நிலை) ஆகியவற்றைப் பற்றி என்னுடைய ஆய்வுகளை எடுத்துக் கூறியிருந்தேன். ஆனால் இன்று நான் எப்படிப்பட்ட முக்கியமான ஒரு கருத்தைப் பற்றிப் பேசவிருக்கிறேன் என்றால் அது பற்றி ஒவ்வொரு மனிதனும் தெரிந்திருப்பது அவசியமானதாகும். அதைப் பற்றி அறியாமல் எவரும் ஈடேற்றத்திற்கான நம்பிக்கையே வைக்க முடியாது என்ற அளவுக்கு அது அவசியமானதாகும். எனது முந்தைய சொற்பொழிவுகளெல்லாம் கிளை போன்றவையாகவும், ஒரு பகுதியாகவும் இருந்தன. ஆனால் இன்றைய சொற்பொழிவு ஒட்டுமொத்தமான, அடிப்படை வகையைச் சேர்ந்ததாகும். ஆனால் இந்த கருத்தை

விளக்கமாக எடுத்துக் கூறுவதற்கு ஆற்றல் இல்லாத நிலையிலும், அப்படிப்பட நேரத்திலும் நான் நிற்கிறேன் என்பதற்காக மிகவும் வருந்துகிறேன். இப்போதும் மக்கள் சந்திப்பதனால் ஏற்பட்ட களைப்பு மற்றும் மாசுகள் ஆகியவற்றின் காரணமாக எனக்கு எந்த அளவுக்கு தலை வலி இருக்கிறதென்றால், மருந்து சாப்பிட்டு வந்திருக்கிறேன். இருந்தாலும் சற்று தலை அசைத்தாலும் தலை வெடித்து விட்டதைப் போன்று உணர்கிறேன். ஆயினும் என்னுடைய பார்வையில் ஒவ்வொரு முஸ்லிமுக்கும் முதலானதும் இறுதியானதுமான இந்தத் தூதுச் செய்தியை (அதாவது இறை ஞானம் பற்றிய செய்தியை) அல்லாஹ் நாடினால், எட்ட வைக்க முயற்சி செய்வேன்.

சகோதரர்களுக்குத் தெரிந்திருப்பது போன்று, சென்ற நாட்களில் நான் மிகவும் கடுமையாக நோயுற்றிருந்தேன். இந்த நோயின்போது எனக்கு ஆறு மணி நேரம் நெஞ்சு பலவீனத்தினால் மயக்கமும் ஏற்பட்டுக்கொண்டிருந்தது. அந்த நிலையில் எனது உள்ளத்தில் ஒரு சிறப்பான தாக்கம் ஏற்பட்டது. அதன் அடிப்படியில் நான் இன்று எனக்கும் உங்களுக்கும் மிக அவசியமான ஒரு விஷயத்தைப் பற்றிக் கூற விரும்புகிறேன். அப்போது அல்லாஹ், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மூலமாக நமக்கு மாபெரும் அருள் செய்திருக்கிறான்; மேலும் ஓர் இருண்ட குழியிலிருந்து வெளியேற்றி ஒளிமயமான கோபுரத்தில் தூக்கி அமர்த்தி விட்டான் என நான் கருதினேன். ஆயினும் அவர்கள் உங்களுக்கு வழங்க விரும்பியிருந்த போதனை, திருக்குர்ஆனில் குறிப்பிடப்பட்டிருக்கின்ற போதனையை உள்வாங்குவதற்கு இன்னும் எவ்வளவோ முயற்சியும் உழைப்பும் செய்ய வேண்டியதுள்ளது. வெளிப்படையில் பார்க்கும்போது எனது இறுதி நேரங்களாகும் எனத் தெரிந்த அந்த நேரத்தில் எனது

உள்ளத்தில், எந்த அந்தஸ்தை தமது ஜமாஅத் அடைய வேண்டுமென ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஆசை கொண்டிருந்தார்களோ அதை நமது ஜமாஅத் இன்னும் அடையவில்லை என்ற ஏக்கம்தான் ஏற்பட்டது. எனவே இறுதி நொடிப்பொழுதாகக் கருதப்பட்ட அந்த நேரத்தில் நான் என் இறைவனிடம், இறைவா! இந்த துன்பத்தை நீக்குவாயாக. எந்த ஒளியையும், இறை ஞானத்தையும் உனது தூய நல்லடியார்கள் பெற்று வந்தார்களோ அதனை நீ நமது ஜமாஅத்திற்கு வழங்குவாயாக என துஆ வேண்டினேன். என் இறைவன் அந்த நேரத்தின் எனது துஆவை ஏற்றுக் கொண்டான். மேலும் உங்களுக்கு உங்களின் கடமைகள் பற்றி கவனமூட்டுவதற்கு எனக்கே அவன் நல்வாய்ப்பு வழங்கி விட்டான். மேலும் எந்த நோக்கத்திற்காக, எந்த குறிக்கோளுக்காக, எந்த இலக்கிற்காக அவன் உங்களைப் படைத்துள்ளான்; மேலும் எதன் பக்கம் இறைதூதர்கள் உங்களை அழைத்துச் செல்ல விரும்பினார்கள் என்பதன் பக்கம் உங்களுக்கு கவனமூட்ட எனக்கு வாய்ப்பளித்திருக்கிறான்.

நான் இன்று எடுத்துக் கூறவிருக்கின்ற இந்தக் கருத்து பற்றி சென்ற ஆண்டில் சில சொற்பொழிவுகளை நான் துவக்கி இருந்தேன். இறைஞானத்தை எப்படிப் பெறுவது என எடுத்துக் கூறுவது அதன் நோக்கமாக இருந்தது. ஆனால் அந்த சொற்பொழிவுகள் இடையிலேயே நின்று விட்டன. நான்கு குத்பாக்கள் நிகழ்த்தப்பட்டன; அதற்குள் உடல் நிலை சரியில்லாமற் போய்விட்டது. மேலும் நான் நீண்ட காலம் காதியானுக்கு வெளியே இருக்க வேண்டியது வந்தது. வெளியிலிருந்து வந்த பிறகு மீண்டும் நோய் ஆரம்பமாகி விட்டது. அதன் காரணத்தால் அந்தக் கட்டுரையை ஒத்திபோட வேண்டியதாயிற்று. முதலில் அந்த கட்டுரையே முழுமையடையாமல் இருந்தது. முழுமை அடைந்திருந்தாலும் மீண்டும் எடுத்துரைக்கக் கூடாது என்பது கட்டாயமில்லை.

ஏனெனில் அதன்படி செயல்பட ஆரம்பிக்கும்போதுதான் மீண்டும் எடுத்துக் கூறும் தேவை இல்லாமற்போகிறது. அது ஆரம்பிக்கப்படாத வரை எடுத்துக் கூறுவது அவசியமாக இருக்கிறது. எனவே மக்கள் செயல்படத் துவங்காத வரை அது பற்றி எடுத்துக் கூறிக் கொண்டிருக்க வேண்டியது அவசியமானதாகும்.

என்னால் இப்போது அதிக நேரம் பேச முடியாது என நான் கூறினேன். ஆனால் சுருக்கமான சொற்களிலேயே நான் கூறிவிட்டால் இறைவன் முன்னிலையில் நான் எனது கடமை(யை நிறைவு செய்து விட்டு அதி)லிருந்து விலகி விடுவேன். மேலும் நான் எனது தூதுச் செய்தியை எட்ட வைத்து விட்டேன் எனக் கூற முடியும். அடுத்து அவர்கள் செயல்படவில்லை என்றால் அது அவர்களுடைய குற்றமாகும்; எனது குற்றமல்ல. எனவே அல்லாஹ் எனக்கு நல்வாய்ப்பு வழங்கினால் இன்று நான் எனது கடமையை நிறைவு செய்து விடுவேன்.

இறை ஞானம் என்பது எப்படிப்பட்ட முக்கியமான, அவசியமான விவகாரம் என்றால், அதன் தேவையிலிருந்து எந்த மனிதனும் தன்னிறைவு பெற்றவனாக முடியாது. இன்னும் கூறுவதென்றால், ஒவ்வொருவருக்கும் அதனுடைய தேவை இருக்கிறது. இறை நம்பிக்கை எனும் ஈமானின் விளைவாக கிடைக்கும் இன்பமும், மகிழ்ச்சியும் எங்களுக்குக் கிடைப்பதில்லை என பலர் முறையிடுகின்றனர். அவர்கள் கூறுகின்றனர்: நாங்கள் தொழுகின்றோம்; நோன்பு நோற்கின்றோம்; ஹஜ் செய்கின்றோம்; ஸகாத் கொடுக்கின்றோம்; சதகா எனும் தான தருமங்கள் கொடுக்கின்றோம்; துஆக்களை செய்கின்றோம். ஆனால் அப்படி இருந்தும் அந்த இன்பத்தையும் மகிழ்ச்சியையும் பெறும் அந்தஸ்தை எங்களால் பெற முடிவதில்லை எனக் கூறுகின்றனர். எனவே எங்களுக்கு இறை

ஞானம் கிடைக்கும் அளவிலான ஏதாவது ஒரு வழிமுறையை கற்றுத் தாருங்கள் என வேண்டுகின்றனர். மனிதனுடைய படைப்பே இதற்காகத்தான் ஏற்பட்டது என்ற அளவுக்கு இது அவசியமானது என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. மற்ற படைப்பினங்களுக்கும் மனிதனுக்குமுள்ள வித்தியாசமே இதுதான். அதாவது **மனிதனுக்கு இறை ஞானத்தைப் பெற்றுக் கொள்வதற்கான ஆற்றல் இருக்கிறது; மற்ற படைப்பினங்களுக்கு அது இல்லை.** எனவே இது மனிதனுக்குக் கிடைக்கவில்லை என்றால், பிறகு அவன் மிருகங்களை விட மோசமானவனாகி விடுவான். ஏனெனில் மிருகங்களுக்கு அதைப் பெற்றுக் கொள்வதற்கான ஆற்றல் கொடுக்கப்படவில்லை; எனவே அவை அதைப் பெற்றுக் கொள்ள முடியாதவையாக இருக்கின்றன. ஆனால் மனிதனுக்கு ஆற்றல் வழங்கப்படுகிறது; ஆயினும் அவன் அதிலிருந்து பலன் பெறுவதில்லை!

ஆக, இறை ஞானம் ஒவ்வொரு மனிதனுக்கும் அவசியமானதாகும். அது இல்லாமல் மனிதன் முழுமையானவனாக ஆக முடியாது. அல்லாஹ்வின் அன்பு உள்ளத்தில் உருவாகி விட வேண்டும்; உடலின் ஒவ்வோர் அணுவிலும் அல்லாஹ் தென்பட வேண்டும் என்ற துடிப்பு நமது ஜமாஅத்திடம் காணப்படுகிறது. ஆனால் இந்த உண்மையான துடிப்பு இருந்தாலும் அது அவர்களுக்கு கிடைப்பதில்லை. அவர்கள் முறையிட்டுக் கொண்டேதான் இருக்கிறார்கள். இறைவன் கிடைக்க வேண்டும் என்பதற்காக பலர் இரவு நேரத்தில் எழுந்து எழுந்து அழுகின்றனர்; மேலும் பகலின் பல நேரத்தை இதிலேயே கழிக்கின்றனர். ஆயினும் அவர்களின் நோக்கம் அவர்களுக்குக் கிடைப்பதில்லை. முயற்சி செய்தும், உழைத்தும் அவர்களுக்கு அவர்களின் நேசத்திற்குரிய (இறை)வன் கிடைப்பதில்லை. அவர்களுக்கு இறை ஞானத்தின்

வாசல் திறக்கப்படுவதில்லை. அவர்களுக்கும் அவர்களுடைய நேசத்திற்குரிய (இறை)வனுக்கும் இடையில் ஒரு சுவர் தடையாகவே நிற்கிறது.

இப்போது கேள்வி என்னவென்றால், இந்தத் தடை விலகுவதற்கு, நோக்கம் கிடைப்பதற்கு என்ன வழிகள், வழிமுறைகள் இருக்கின்றன என்பதாகும். இந்த முயற்சிகளுக்கு, உழைப்புக்குப் பிறகும் எவர்களுக்கு இறைவன் கிடைப்பதில்லையோ அவர்கள் முற்றிலும் நம்பிக்கை இழந்து விடுகிறார்கள். இறைவன் என்று ஒருவன் இல்லவே இல்லை எனக் கருதி விடுகிறார்கள். ஒன்று அவர்கள் இறைவனை சந்திக்க துடித்துக் கொண்டிருந்தனர்; அதற்காக முயற்சி செய்து கொண்டிருந்தனர். அல்லது அவனை முற்றிலும் மறுத்து விடுகின்றனர். இஸ்லாத்தின் போதனையின்படி செயல்பட்டு நீங்கள் இறைவனைப் பெற முடியும் என எங்களிடம் கூறப்பட்டது. நாங்கள் எங்கள் சார்பாக இதன்படி செயல்படுவதில் எந்தக் குறையையும் வைக்கவில்லை. எங்களிடம் எந்த அளவுக்கு ஆற்றல் இருந்ததோ அதற்கேற்ப நாங்கள் முயற்சி செய்தோம். ஆனால் எங்களுக்கு இறைவன் கிடைக்கவில்லை. இதிலிருந்து இறைவன் என்று யாருமே இல்லை; ஏனெனில் அவன் இருக்கிறான் என்றால் அவன் கண்டிப்பாகக் கிடைத்திருப்பான் எனக் கூறுகின்றனர்.

(ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொற்பொழிவாற்றிக் கொண்டிருக்கும்போது ஒருவர் ஒரு தாளில், மஃரிஃபத்தே இலாஹி, இர்ஃபானே இலாஹி (இறைஞானம்) என்பதை விளக்கிக் கூறுமாறு எழுதிக் கொடுத்தார். அப்போது எந்த ஒரு கருத்து பற்றியும் அது என்ன என்பதை எடுத்துக் கூறாத வரை அது முழுமையடைவதில்லை என்பது இந்த நபருக்குத் தெரிய வேண்டும். இறைஞானம் குறித்துக் கூறுவதற்காக நான் நிற்கின்றேன். இறைஞனம்

என்றால் என்ன என்றே கூறாதவரை என்ன விவரிக்க முடியும்? உங்களுக்கு என்ன புரிய வைக்க முடியும்? எனவே ஆறுதலுடன் அமர்ந்திருங்கள் இறை ஞானம் என்றால் என்ன என்பதன் விளக்கம் தானாகவே அடுத்து வரும் என இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறினார்கள்.)

சுருக்கமாக, எப்படியாவது இறை ஞானம் கிடைத்து விட வேண்டும் என பலர் ஆசைப்படுகின்றனர். மேலும் இரவுகளில் விழிக்கின்றனர்; அழுகின்றனர்; துடிக்கின்றனர். பகலில் அவர்களின் நிலை தன் ஒரே மகன் காணாமற்போனதனால் தவிக்கும் தாயைப் போன்று இருக்கிறது. அவர்கள் நெருப்புக்குள் நுழைகின்றனர். ஆயினும் அவர்களுக்கு இறைவனைப் பற்றிய ஞானம், அறிவு கிடைப்பதில்லை. இங்கு எழும் கேள்வி, இந்த அளவுக்கு முயற்சியும் உழைப்பும் செய்த பிறகு இறைவன் கிடைக்கவில்லை என்றால் அதன் பொருள், இறைவனே இல்லை என்பதாகும்; அல்லது அவன் இருக்கிறான் என்றால் அவனைப் பெறுவதற்கென்று ஒரு வழிமுறையும் இல்லை என்பதாகும். ஆனால் இந்த இரண்டு சிந்தனைகளும் அபத்தமானவையும், இரண்டு விஷயங்களும் தவறானவையுமாகும்.

உண்மையில் ஒவ்வொரு பொருளையும் பெறுவதற்கென்றும் அது கிடைப்பதற்கென்றும் குறிப்பிட்ட வழிமுறைகள் இருக்கின்றன. அவற்றை மேற்கொள்ளாத வரை அவை கிடைக்க முடியாது. எந்த வழிமுறைகள் மூலமாக இறைவன் கிடைக்க முடியும் என்பதைப் பற்றி விளக்கமாகக் கூறுவதற்கு முன்னர் இறைஞானம் என்பதற்கான பொருள் என்ன என்பதைப் பற்றிக் கூற விரும்புகிறேன். **எங்களுக்கு இறைஞானம் கிடைப்பதில்லை என பலர் கூறுகின்றனர். ஆனால் இறைஞானம் என்பது என்ன என்பது அவர்களுக்குத்**

**தெரிவதில்லை.** அவர்கள் மூதாதையர்களிடமிருந்து இந்தச் சொல்லைக் கேள்விப்பட்டுள்ளனர். ஆனால் அதன் உண்மையான பொருளையும், கருத்தையும் புரிவதில்லை. எனவே அதன் பொருள் என்ன என்பதைப் பற்றி நான் கூற விரும்புகிறேன்.

இர்ஃபான், மஃரிஃபத் என்பது அரபுச் சொற்களாகும். இது ஏறக்குறைய அறிவு என்பதற்கு சமமானதாகும். ஆயினும் அறிவு என்பதற்கும் இறைஞானம் என்பதற்கும் இடையில் ஒரு வித்தியாசம் இருக்கிறது. அது என்னவென்றால், அறிவு என்பது முயற்சி, சிந்தனை இன்றியும் கிடைத்து விடுகிறது. ஆனால் இறைஞானம் சிந்திப்பதாலும் ஆய்வு செய்வதாலும் கிடைக்க முடியும். இல்ம் (அறிவு) என்பதும் இர்ஃபான் (இறைஞானம்) என்ற பொருளில் பயன்படுத்தப்படுகிறதுதான். ஆயினும் இர்ஃபான் (இறைஞானம்) என்பதில் சிந்தனைக்கும், புரிந்து கொண்டதற்கும் பிறகு கிடைப்பது என்ற கருத்து இருக்கிறது. ஆக இவ்விரண்டிலும் பொதுவானது, சிறப்பானது என்ற தொடர்பு காணப்படுகிறது. இல்ம் (அறிவு) என்பது பொதுவானது. இர்ஃபான் (இறைஞானம்) என்பது சிறப்பானது. எனவேதான் அரபு மொழி வழக்கில் ***அரஃப ரப்பஹூ*** அதாவது மனிதன் தன் இறைவனைப் புரிந்து கொண்டான் எனக் கூறுகிறோம்; ஆனால் ***அரஃப அப்தஹூ*** அதாவது அல்லாஹ் தன் அடியானைப் புரிந்து கொண்டான் எனக் கூறுவதில்லை. மாறாக, இறைவனுக்காக ‘அறிதல்’ என்ற பண்பைத்தான் பயன்படுத்துகிறோம். ஏனெனில் இறைவனுக்கு சிந்திக்க வேண்டிய, யோசிக்க வேண்டிய எந்தத் தேவையுமில்லை. எனவே இறைவனுடைய இல்ம் (அறிவு) பற்றி இர்ஃபான் என்ற சொல் கூறப்பட முடியாது. மாறாக, இது அடியாரின் அறிவு பற்றி மட்டுமே கூறப்படுகிறது.

ஆக, இர்ஃபான் (இறைஞானம்) என்பதன் கருத்தாவது, மனிதன் சிந்தித்து, புரிந்து, உணர்ந்து இறை இருப்பு பற்றிய

அறிவு கிடைப்பது என்பதாகும். மேலும் அவர் தனது இறைவனை அடையாளம் கண்டு கொள்ள வேண்டும். அடையாளம் கண்டு கொள்ளுதல் என்பதன் பொருள், எந்த விஷயங்கள் ஒருவரிடம் குறிப்பாகக் காணப்படுகிறதோ மற்றவர்களை விட்டும் அவை அவரை வேறுபடுத்திக் காட்டக் கூடியவையாக இருக்கின்றனவோ அவற்றின் மூலமாக அவரை அடையாளம் கண்டு கொள்ளுதல் என்பதாகும். உதாரணமாக, ஸைது என்பவர் பக்ர் என்பவரை அடையாளம் கண்டு கொண்டார் என்று கூறப்பட்டால் அதன் பொருள், பக்ர் என்பவரிடம் மட்டும் காணப்படுகின்ற - மற்றவர்களிடம் இல்லாத சிறப்பான விஷயங்கள் மூலமாக அவர் இன்ன நபர் பக்ர் ஆவார் என அவரை அடையாளம் கண்டு கொண்டார் என்று பொருள்.

அவ்வாறே இறைஞானம் என்பதன் பொருள், இறைவனின் என்ன பண்புகளை இறை வேதங்களில் இறையடியார் படித்தாரோ, இறைவன் இப்படிப்பட்ட அருளாளனும், மேன்மேலும் கருணை காட்டுபவனுமாவான், குறைகளை மறைப்பவனும் மன்னிப்பவனும் ஆவான் என அறிந்தாரோ அப்படிப்பட்ட பண்புகளைக் கொண்டவன் அவருக்குக் கிடைத்து விட வேண்டும். மேலும் அவர் (இறைவனின்) அந்தப் பண்புகளைக் கண்டு கொள்ள வேண்டும். அவ்வாறல்லாமல் இறைவன் அருளாளன், கருணையாளன் ஆவான் என மனிதன் தெரிந்து கொள்வதற்குப் பெயர் இர்ஃபான் (இறைஞானம்) அல்ல. ஏனெனில் இதைத்தான் ஒவ்வொரு முஸ்லிமும் அறிந்திருக்கின்றாரே! இதுவே இர்ஃபான் (இறைஞானம்) என்றால் பிறகு வேறோர் இறைஞானத்தைப் பெற வேண்டிய தேவையே இல்லை. திருக்குர்ஆனிலும் ஹதீஸிலும் கூறப்பட்டுள்ள அல்லாஹ்வின் பல்வேறு பண்புகளை அறிந்து ஒவ்வொரு மனிதனும் இறைஞானம் உள்ளவர் என

அழைக்கப்பட முடியும். ஆனால் அப்படி நடப்பதில்லை. இறைவன் *ரப்* (படைத்து காத்தோம்புபவன்) ஆவான் என எல்லா மக்களும் ஒப்புக் கொள்கின்றனர்; இறைவன் கருணையாளன் என அவர்கள் ஏற்றுக் கொள்கின்றனர். இறைவன் கண்ணியமிக்கவன்; பாதுகாவலன்; கண்காணிப்பவன் என அனைவரும் ஏற்றுக் கொள்கின்றனர். ஆனால் அவர்கள் இறைஞானம் பெற்றவர்கள் என்று கூறப்படுவதில்லை. இதிலிருந்து அல்லாஹ்வின் பண்புகளைத் தெரிந்து கொள்வதால் மட்டும் ஒரு மனிதன் இறைஞானம் பெற்றவனாகி விடமாட்டான் எனத் தெரிகிறது. உண்மையில் இறைவனை அடையாளம் கண்டு கொண்டவர்தான் இறைஞானம் பெற்றவராவார். மேலும் அவனை அடையாளம் கண்டு கொள்வது என்பதன் விளக்கம், மற்ற வேறு யாரிடமும் காணப்படாத விஷயங்களை இறைவனிடம் அவர் கண்டு கொள்கிறார். இதற்குரிய உதாரணம், ஒருவர் ஸைது என்பவருடைய உருவம் இப்படிப்பட்டதாகும்; அவருடைய பழக்க வழக்கங்கள் இப்படிப்பட்டவையாகும்; அவருடைய பண்புகள் இப்படிப்பட்டவையாகும்; அவருடைய உயரம் இவ்வளவாகும்; அவர் ஆடைகளை இப்படி அணிகின்றார் என ஒருவர் கேள்விப்பட்டிருக்கும்போது, ஏதாவதோரிடத்தில் அவர் அப்படிப்பட்ட சிறப்புப் பண்புகளைக் கொண்ட மனிதரைக் கண்டால் அந்த சிறப்புத்தன்மைகளை கவனத்தில் வைத்து இவர் ஸைது ஆவார் எனக் கூறினால் அவர் ஸைது என்பவரை அடையாளம் கண்டு கொண்டார் என நாம் கூறுவோம்.

அவ்வாறே இறைஞானம் என்பதன் பொருள், இறைவனுடைய பண்புகளைப் பற்றிய ஞானத்தைத் தெரிந்து கொண்ட பிறகு, இந்தப் பண்புகள் காணப்படுகின்றவர் இன்னவர் ஆவார் எனவும் மனிதனுக்குத் தெரிய வேண்டும். அப்படிப்பட்ட மனிதன் உயிரூட்டும் ஒருவன் இருக்கிறான் என்பதை மட்டும்

பார்ப்பதில்லை. மாறாக, உண்மையில் இவன்தான் உயிரூட்டுபவன் என்பதை கண்டு கொள்கிறார். ஆக, இர்ஃபான் (இறைஞானம்) என்பதன் பொருள், எந்த விஷயங்களை கேள்விப்பட்டிருக்கிறோமோ அவற்றை ஒருவனிடம் கண்டு கொள்ள வேண்டும். மேலும் இவன்தான் இன்னின்ன அந்தப் பண்புகளைக் கொண்டவன் எனத் தெரிய வேண்டும். ஆனால் பலருக்கு இறைஞானம் என்றால் என்ன என்பதே தெரிவதில்லை என்பது வருத்தத்திற்குரியதாகும். மேலும் அவர்கள் கேள்விப்பட்ட சொற்களை முன்னால் வைத்துக் கொண்டு நமக்கு இறைஞானம் கிடைத்து விடட்டும் என அழுது புலம்புகிறார்கள். அவர்களிடம் கேட்கப்பட்டால் 99 சதவீதம் பேர் அல்ல; மாறாக, ஆயிரத்தில் 999 பேர் எதுவும் கூற முடியாது. அவர்களின் உதாரணம் எப்படிப்பட்டதென்றால், இரவு நேர இருட்டில் ஒருவர் கை கால்களை ஆட்டியவாறு எதையோ தேடிக்கொண்டிருக்கிறார். ஆனால், நான் எதை தேடிக்கொண்டிருக்கிறேன் என்பதும் அவருக்குத் தெரியாததாக இருக்கிறது. இப்போது பெயரை மட்டும் கேள்விப்பட்ட அவருக்கு அந்தப் பொருள் கிடைத்து விட்டாலும், அதனிடம் என்ன விஷயங்கள் இருக்கின்றன? அதன் பண்புகள் யாவை? அது எப்படி இருக்கும்? என்பதை அவர் அறியாவிட்டால் அவரால் அதை அடையாளம் கண்டு கொள்ளவே முடியாது. எனவே அவர் அதை தூர எறிந்து விட்டு தனது தேடலை துவங்கி விடுவார்.

உதாரணமாக, ஒருவர் நான் ஸைது என்பவரை சந்திக்க வேண்டும் எனக் கூறுகிறார். ஆனால் அவருக்கு ஸைது எங்கே இருக்கிறார்? அவருடைய உருவம் என்ன? பழக்க வழக்கங்கள் என்ன என்பதே தெரியாதிருந்தால், எங்கேயாவது அவருக்கு ஸைது கிடைத்தாலும் அவர் ஸைது என்பவரை கடந்து சென்று விடுவார்; ஆனாலும் அவர் அவரை அடையாளம் கண்டு

கொள்ள முடியாது. அவ்வாறே எவர்களுக்கு இறைஞானம் என்றால் என்ன என்பதே தெரியாதோ அப்படிப்பட்டவர்கள் இறைஞானம் பெறுவதற்கு, இறைவன் கிடைப்பதற்கு உரிமை பெற்றவர்களே இல்லை. அப்படியே அவர் ஏதாவதொரு வகையில் இறை பண்புகளை கண்டுகொண்டு விட்டாலும் அவருக்கு என்ன தெரிய முடியும்? அவர் அந்த இறைவனை கண்டவாறு அடையாளம் காணாமல் கடந்து சென்று விடுவார். இறைஞானத்தின் உண்மை நிலையை புரிந்து கொள்ளாமல் அதைத் தேடுவதில் ஈடுபடத் துவங்கி விடுபவர்களுக்குரிய உதாரணம் கீழ்வரும் ஒரு மனிதரைப் போன்றதாகும்.

அவரைப் பற்றிக் கூறப்படுகிறதாவது, அவர் வழியில் கடந்து சென்று கொண்டிருக்கும் ஒருவரிடமிருந்து சில கவிதைகளைக் கேட்டார். அதில் ஒரு காதலியைப் பற்றி மிகவும் புகழ்ந்து கூறப்பட்டிருந்தது. முழு உலகமும் அவள் மீது காதல் கொள்ளும் அளவுக்கு அவள் அழகானவள் என அவளைப் பற்றிக் கூறப்பட்டிருந்தது. இதைக் கேட்ட அவர் முழு உலகமும் அவள் மீது காதல் கொள்ளும்போது நானும் ஏன் அவள் மீது காதல் கொள்ளக் கூடாது எனக் கருதினார். எனவே அவரும் அவள் மீது காதல் கொண்டார்; அவளைப் புகழ்ந்து, பிரிவுத் துயரத்தை வெளிப்படுத்தியவாறு கவிதையும் எழுதினார். இவர் ஒரு கல்விக் கூடத்தில் ஆசிரியராகவும் பணியாற்றினார். ஒருநாள் அவருடைய நண்பர் அவரை சந்திக்க கல்விக் கூடம் சென்றார். சென்ற பிறகுதான், அவர் கொஞ்ச காலமாக அங்கு வருவதே இல்லை என்பது நண்பருக்குத் தெரிந்தது. பிறகு அவர் அவருடைய வீட்டிற்கு சென்று பணிப்பெண்ணிடம், உங்களை சந்திக்க ஒருவர் விரும்புகிறார் என உன் எஜமானரிடம் கூறு என்றார். அதற்கு பணிப்பெண் அவர் இப்போதெல்லாம் யாரையும் சந்திப்பதில்லை. அவருக்கு மிகப் பெரிய துக்கம் ஏற்பட்டுள்ளது என்றாள். நண்பரோ, நீ என்னைப் பற்றி அவரிடம்

கூறு; அதற்குப் பிறகும் அவர் சந்திக்க மறுத்தால் நான் திரும்பிச் சென்று விடுகிறேன் என்றார். அவள் உள்ளே சென்று தூதை எட்ட வைத்தாள். அப்போது ஆசிரியர் அவரை உள்ளே அழைத்தார். நண்பர் உள்ளே சென்றபோது அவர் மிகவும் மெலிந்தும் பலவீனமாகவும் இருப்பதைக் கண்டார். என்ன நேர்ந்தது எனக் கேட்டதற்கு, எனக்கு மிகவும் துக்கம் ஏற்பட்டுள்ளது என்றார். அதற்கு நண்பர் ஏன்? உறவினர் யாராவது இறந்து விட்டார்களா? எனக் கேட்டார். அவர் கூறினார்: உலகில் உறவினர்கள் மரணித்து விடுகிறார்கள்தான். பிறகு என்ன நடந்தது என நண்பர் கேட்டதற்கு அவர், எனது காதலி மரணித்து விட்டாள் எனக் கூறினார். அப்போது நண்பர் அவள் யார்? எங்கு இருந்தாள்? அவளுடைய பெயர் என்ன? எனக் கேட்டார். அதற்கு அவர், அவளுடைய பெயர் தெரியாது. அவள் எங்கு இருந்தாள் என்பதும் எனக்குத் தெரியாது. அவளுடைய உருவம் என்ன என்பதும் எனக்குத் தெரியாது என்றார். நண்பர் அவரிடம், உங்களுக்கு அவளுடைய உருவம் கூட தெரியாது என்றால், அவள் மீது ஏன் காதல் கொண்டீர்கள்? எனக் கேட்டார்.

அதற்கு அவர், உண்மை என்னவென்றால், நான் ஒருநாள் பள்ளிவாயிலில் உட்கார்ந்திருந்தபோது ஒருவர் இன்ன பெண்ணின் மீது அனைவரும் காதல் கொண்டு விட்டனர் என கவிதை பாடினார். இதைக் கேட்டு நானும் அவள் மீது காதல் கொண்டு விட்டேன் என்றார். அதற்குப் பிறகு ஒருநாள் நான், உம்மே உமர் (உமரின் தாய்) கழுதையின் மீது ஏறி எங்கோ சென்று கொண்டிருந்தாள்; அவளும் திரும்பவில்லை; அவளுடைய கழுதையும் திரும்பவில்லை என்ற கவிதையை ஒருவர் படிக்கக் கேட்டேன். அப்போது நான் புரிந்து கொண்டேன். இது என்னவோ எனது காதலிதான். அவள் திரும்பி வரவில்லை என்றால் அதன் பொருள் அவள் கண்டிப்பாக மரணித்து விட்டாள். அப்படி இல்லையென்றால் இவ்வளவு நேரம் அவள் அங்கு தங்கியிருப்பதற்கு என்ன காரணம் வந்து

விட்டது? உயிரைக் குடிக்கும் இந்த துயரத்திற்குப் பிறகு நான் எவ்வளவு துக்கத்தை வெளிப்படுத்தினாலும் அது குறைவுதான் என்பது உங்களுக்கே தெரியும் என நண்பரிடம் கூறினார். அப்போது அவர் வெளிப்படையில் தன் நண்பரின் துக்கத்தைப் பற்றியும், உள்ளத்தில் அவருடைய அறிவைப் பற்றியும் வருத்தத்தை வெளிப்படுத்தியவாறு எழுந்தார்.

ஆக, அந்தோ! எங்களுக்கு இறைவன் கிடைப்பதில்லை எனக் கூறுபவர்களும் உலகில் இருக்கின்றனர். ஆனால் இறைவன் என்பவன் யார் என்பதை அவர்கள் அறிவதில்லை. இர்ஃபானே இலாஹி (இறைஞானம்) என்பதன் பொருள் இறைவனை அடையாளம் கண்டு கொள்ளுதல். ஆனால் இதன் பொருள், இறைவனுடைய பண்புகளைப் பற்றி அறிதல் என்பது அல்ல. ஏனெனில் அது திருக்குர்ஆனிலும், ஹதீஸிலும் கூறப்பட்டுள்ளது. இறைஞானம் என்பதன் பொருள் இறை பண்புகளை அறிதல் என்றால் அது முன்னரே தெரிகிறது. மற்றபடி இறைவனைப் பொருத்தவரை அவனைப் பற்றிய ஆழம் வரை இன்று வரை யாரும் அடைய முடியவில்லை; இனி மேலும் அடைய முடியாது. இதிலிருந்து இறைஞானம் என்றால் வேறொரு பொருள் எனத் தெரிகிறது. அது என்னவென்றால், மனிதன் இறைவனுடைய என்ன பண்புகளைக் கேள்விப்பட்டிருக்கிறானோ, தெரிந்திருக்கிறானோ அது எவனிடம் இருக்கிறதோ அதை மனிதன் அறிய வேண்டும். இதுவே இறைஞானத்தைப் பெறுவதற்கான வழிமுறையாகும்! இதற்கே அடுத்து பல்வேறு பெயர்கள் இருக்கின்றன.

## இறைஞானத்தைப் பெறுவதற்கான வழிமுறை

அடுத்து இந்த இறைஞானம் எப்படிக் கிடைக்க முடியும்? அதைப் பெறுவதற்கு என்ன வழிமுறைகள் இருக்கின்றன? எனப் பார்க்க வேண்டும். இதற்கு முதன் முதலில் நான் கூற விரும்புவது என்னவென்றால், சிலர் முயற்சி செய்கின்றனர்; ஆனால்

அவர்களுக்கு இறைஞானம் கிடைப்பதில்லை. அவர்களை விட்டு விட்டு, முயற்சி ஒன்றும் செய்யாமல் எங்களுக்கு இறைவன் கிடைக்க வேண்டும் எனக் கூறுபவர்களைப் பற்றி நான் கொஞ்சம் கூற விரும்புகிறேன். அப்படிப்பட்டவர்களின் செயல்களைப் பார்த்தால், அவர்கள் இறைவனை அடைவதற்காக எந்த முயற்சியும் செய்வதில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது. அவர்களின் நிலை கூட்டத்தில் ஒருவரைப் பற்றி பேச்சு வரும்போது அவரைப் பற்றிய சிந்தனை தோன்றுவதைப் போன்றதாகும். இறைவனைப் பெறுவதற்கான - அவனை அடைவதற்கான பேச்சைக் கேட்கும்போதெல்லாம் நமக்கு இறைவன் கிடைக்கட்டும் என அவர்களும் ஆசைப்படுகின்றனர். ஆனால் அப்படிப்பட்டவர்களுக்கு எந்நிலையிலும் இறைவன் கிடைக்க முடியாது. இறைஞானம் என்பது மிகவும் விலைமதிப்புள்ள ஒன்றாகும். சிறியதிலும் சிறிய பொருள் கூட முயற்சி, உழைப்பு இல்லாமல் கிடைக்க முடியாது என்பதை நாம் உலகில் பார்க்கிறோம். சிறுவர்கள் முட்கள் நிறைந்த இலந்தை மரத்திலிருந்து இலந்தைப் பழங்களை பறித்து சாப்பிடுகின்றனர். இலைந்தப் பழம் என்பது ஒரு சாதாரணமாக இலவசமாக கையில் கிடைக்கக் கூடிய பொருளாகும். காடுகளில் மிக அதிகமாக உருவாகின்றன. ஆனால் அவற்றைப் பெறுவதிலும் கைகளுக்கு காயங்கள் ஏற்படுகின்றன. சில நேரத்தில் ஆடைகள் கிழிந்து விடுகின்றன. ஆக, இலந்தை போன்ற சாதாரண பொருளும் முயற்சி, உழைப்பு இல்லாமல் கிடைக்க முடியாது என்றால், இறைவன் எப்படி முயற்சி, உழைப்பு இல்லாமல் கிடைத்து விட முடியும்? ஈருலகிலும் ஒருவன் இருக்கிறான் என்றால் அவன் இறைவன்தான். ஒன்றுமற்ற, சாதாரண பொருள்களுக்காக முயற்சி செய்ய வேண்டியதிருக்கும்போது எல்லாவற்றையும் படைக்கின்ற இறைவன் அந்தோ! என ஒன்றிரண்டு முறை மூச்சை இழுப்பதனாலும், வருத்தத்தை வெளிப்படுத்துவதனாலும் கிடைப்பது எவ்வாறு சாத்தியமாகும்?

அப்படிப்பட்டவர்களுக்கு இறைவன் ஒருபோதும் கிடைக்கவுமில்லை; கிடைக்கவும் முடியாது; கிடைக்கவும் மாட்டான். ஏனெனில் இறைவனை அடைவதற்கு கடும் முயற்சிகள் தேவைப்படுகின்றன. அவ்வாறல்லாமல், ஒருவர் நாம் இங்கே கை மீது கை வைத்தோம் என்றால் இறைவனின் சந்நிதியை எட்டி விடலாம் என்ற நம்பிக்கையில் பைஅத் செய்கின்றார் என்றால், அது அவருடைய தவறாகும். மேலும் அவர் ஒருபோதும் வெற்றி பெற முடியாது.

உலகில் சில பெரியார்கள் ஒருவர் மீது பார்வை செலுத்தினார்; உடனே அவருடைய எல்லா அழுக்குகளும் விலகி விட்டன. அவர் *குதுப்* எனும் அந்தஸ்தைப் பெற்று விட்டார் என சில அறிவிலிகள் கருதுகின்றனர். ஆனால் இது முற்றிலும் தவறாகும். இறைவனைப் பற்றிய ஞானம் இவ்வளவு எளிதாக இதற்கு முன்பு ஒருபோதும் கிடைத்ததுமில்லை; இனி கிடைக்கவும் முடியாது. இறைஞானம் என்பது எந்த தியாகமும் இல்லாமல், முயற்சியும் இல்லாமல், உழைப்பும் இல்லாமல் ஒருவருக்குக் கிடைத்ததாக இதுவரை ஓர் உதாரணம் கூட கிடைக்கவில்லை.

மிகவும் உயர்ந்த அந்தஸ்தைக் கொண்டவர்கள் நபிமார்கள் ஆவார்கள். வலிமார்கள் (இறை நேசர்கள்) அவர்களை விட குறைந்த அந்தஸ்தைக் கொண்டவர்களாவர். எனவே (வலிமார்களாகிய) அவர்களைப் பற்றி ஸய்யிது அப்துல் காதிர் ஜீலானி (ரஹ்) அவர்கள் ஒரு திருடனைப் பார்த்தார்கள். (அவர் பார்த்த மாத்திரத்தில்)அவன் *குதுப்* ஆகி விட்டான். ஹஸ்ரத் முயீனுத்தீன் சிஷ்தீ (ரஹ்) அவர்களை அவருடைய ஆசிரியர் ஒரே பார்வையில் உயர்ந்த அந்தஸ்து வரை கொண்டு சென்று விட்டார். அதனால் அவருக்கு எல்லாம் கிடைத்து விட்டது எனக் கூறுவது முற்றிலும் தவறாகும். ஏனெனில் எந்த இறைதூதர் (ஸல்) அவர்கள் மூலமாக, அவர்களின் அடிமைத்தனத்தினால் (வலிமார்களாகிய) இவர்களுக்கு எல்லாம் கிடைத்தனவோ அந்த

தூதர் (ஸல்) அவர்களுக்கு இறைவன் எப்படிக் கிடைத்தான்? அது பற்றி திருக்குர்ஆனிலிருந்தும், ஹதீஸிலிருந்தும் தெரிந்து கொள்ள முடியும். அல்லாஹ் திருக்குர்ஆனில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் கூறுகிறான்: ***வவஜதக ழால்லன் ஃபஹதா*** (திருக்குர்ஆன் 93:8). அதாவது நாம் உம்மை எனது அன்பில் எவ்வாறு திழைக்கக் கண்டோம் என்றால் அதன் விளைவாக உமக்கு உம்மைப் பற்றிய எந்தக் கவலையும் இருக்கவில்லை. உம்மைப் பற்றியே அறியாத அளவுக்கு நீர் இறையன்பில் உம்மை மாய்த்துக் கொண்டபோது நாம் உமக்கு நேர்வழி காட்டினோம். ***ழால்லன்*** என்பதன் உண்மையான பொருள், அன்பில் தன்னை மாய்த்துக் கொள்ளுதல் என்பதாகும். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒருபோதும் வழிகேட்டில் இருந்ததில்லை என திருக்குர்ஆன் சாட்சி கூறுகிறது. ***மாழல்ல சாஹிபுக்கும் வமா கவா.*** அதாவது உமது தோழர் தவறிழைக்கவில்லை; வழிகேட்டில் செல்லவுமில்லை. (53:3) மாறாக, ***லகத் கான லகும் ஃபீ ரஸூலில்லாஹி உஸ்வத்துன் ஹஸனா*** எனத் திருக்குர்ஆன் குறிப்பிட்டுள்ளது. (33:22) அவர்களின் ஒவ்வொரு செயலையும் அழகிய முன்மாதிரி எனக் கூறுகிறது. இப்போது மற்ற வசனங்களுக்கேற்ப இங்கு ***ழால்லன்*** என்பதற்கு பொருள் கொடுப்போமாயின் அதன்படி, அல்லாஹ் கூறுகிறான்: நீர் எனது அன்பில் எந்த அளவுக்கு உம்மை மாய்த்துக் கொண்டீர் என்றால், நான் எங்கே சென்று கொண்டிருக்கிறேன் என்பது கூட உமக்குத் தெரியாதிருந்தது. உமக்கு என்னைத் தேடுவதில் தலை கால் புரியவில்லை. உமது எல்லா சிந்தனைகளும், உணர்வுகளும் எனது அன்பில் மூழ்கி விட்டது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அப்படி மூழ்கியிருந்ததை நாம் ஏற்றுக் கொள்ள ஆயத்தமாக இருக்கிறோம். ஆயத்தமாக இருப்பது என்ன? அப்படி கண்டிப்பாக நடந்தது என நாம் கூறுகிறோம். அப்படிப்பட்ட கடுமையான அன்பு உருவானபோது அல்லாஹ் கூறுகிறான்:

***ஃபஹதா*** இதற்குப் பிறகு நாம் உமக்கு நேர்வழி காட்டினோம்.

இப்போது பாருங்கள். இது ஹஸ்ரத் முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் நிலையாக இருந்தது. அவர்களை அடிப்படையாக வைத்து மற்ற நபிமார்களை கணித்துக் கொள்ளுங்கள். ஏனெனில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் எல்லா நபிமார்களின் தலைவரும், அந்த நபிமார்களின் அனைத்து பண்புகளையும் ஒருங்கே கொண்டவர்களும் ஆவார்கள். அன்னாருக்கு இறைஞானத்தைப் பெறுவதற்காக உழைப்பைத் தாங்கிக் கொள்ள வேண்டியது ஏற்பட்டது; அவ்வாறிருக்கும்போது மற்றவர்களுக்கு அப்படியே கிடைத்து விட்டது எனக் கூற முடியாது. ஒருவருக்கு உழைப்பின்றி இது கிடைக்க முடியுமென்றால் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு இது உழைப்பின்றி கண்டிப்பாகக் கிடைத்திருக்கும். ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தம்மை மாய்த்துக் கொண்ட பிறகு இறைவன் அவர்களுக்குக் கிடைத்தான் என்றால், இந்த உம்மத்திலுள்ள வலிமார்களில் ஒருவருக்கு தனது ஒரு பார்வையினாலே சிலரை குதுப்மார்களாக ஆக்கி விடும் ஆற்றல் இருந்தது என்ற கருத்து முற்றிலும் தவறானதாகி விடுகிறது. முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு உழைப்பின்றி இந்த அந்தஸ்து கிடைக்கவில்லை என்றால் மற்றவருக்கு எப்படி கிடைக்க முடியும்? எனவே எவர்கள் இந்த அருட்கொடையைப் பெற விரும்புகிறார்களோ அவர்கள் கடுமையாக உழைக்க வேண்டியது வரும். அது இல்லாமல் ஏதாவது கிடைப்பதென்பது முற்றிலும் சாத்தியமற்றதாகும்.

விந்தைக்குரிய விஷயம் என்னவெனில், உயர்தரமான ஆங்கிலக் கல்வியைக் கற்பதற்கு மாணவர்கள் குறைந்தது 16 ஆண்டுகள் முயற்சி செய்கிறார்கள்; கடுமையாக உழைக்கிறார்கள். ஆனால் இறைஞானத்தை அவர்கள் ஒரே நாளில் பெற்றுக் கொள்ள விரும்புகிறார்கள். இறைஞானம்

என்பது இறைவனுடைய அருள் மற்றும் அவனால் தரப்படும் நல்வாய்ப்பினாலேயே கிடைக்க முடியும் என்பதில் சந்தேகமில்லை. அவ்வாறில்லாமல், உலக பொருள்களைப் பெறுவதற்காக எந்த அளவுக்கு உழைப்பும் நேரமும் செலவாகிறதோ அதே அளவுக்கு உழைப்பும் நேரமும் (இறைஞானத்தைப் பெறுவதற்காகவும்) வைக்கப்பட்டால் கோடிக்கணக்கான ஆண்டுகள் அதற்கு ஆகிவிடும். ஒரு பார்வையிலேயே கிடைத்து விட வேண்டும் என மக்கள் கூறுகின்றனர். ஆனால் நபிமார்கள், இறைநேசர்கள் ஆகியோர் மூலமாக சில ஆண்டுகளில் அல்லது சில மாதங்களில் கிடைத்து விடுகிறது. அதைப் பெறுவதற்கு இதை விட அதிக எளிதானது வேறு என்ன இருக்க முடியும்? என நாம் கூறுகிறோம். மேலும் ஒருவரிடம் எந்த அளவுக்கு தகுதி இருக்கிறதோ, எந்த அளவுக்கு ஒருவர் அதிகமாக உழைப்பாரோ அதே அளவுக்கு அவர் அதை சீக்கிரம் பெற்றுக் கொள்கிறார். எனவே இறைஞானம் அப்படியே கிடைத்து விடுவதில்லை என்பதை நன்றாக நினைவில் வையுங்கள். பலரை நாம் பார்க்கிறோம். இறைவன் தமக்குக் கிடைக்க வேண்டும் என அவர்கள் விரும்புகின்றனர். ஆனால் அத்துடன் உடனே கிடைத்து விட வேண்டும் எனவும் விரும்புகின்றனர்.

நமது ஜமாஅத்தைச் சேர்ந்த மக்கள் மீது அல்லாஹ்வின் அருள் இருக்கிறது; அவர்கள் தனிப்பட்ட வகையினர். அவ்வாறல்லாமல் மற்றவர்களால் இப்படிப்பட்ட சொற்பொழிவுகளைக் கேட்கக் கூட முடியாது. ஒருபுறம் வாயிலிருந்து ஒரு சொல் வெளிவந்ததும் மறுபுறம் இறைஞானியாக ஆகி விட வேண்டும் எனக் கூறுகின்றனர். ஆனால் சொற்பொழிவுகளினால் அல்ல; மாறாக, மாபெரும் உழைப்பினாலும், தனது நஃப்ஸை துண்டு துண்டாக்குவதினாலும், இறைவனின் அன்பில் தன்னை மறந்து விட்ட பிறகும் இந்த அருள் கிடைக்கிறது. மேலும் ஹஸ்ரத்

முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களின் அழகிய முன்மாதிரியின்படியும் நடைமுறையின்படியும் தம்மைத்தாமே இறைவனை அடைவதற்காக மாய்த்துவிடும்போது இது கிடைக்க முடியும். எனவே உங்களில் இறைஞானத்தைப் பெற விரும்புகின்றவரும் விரும்பாதவரும் இருப்பார் என நான் கருதவில்லை. ஏனெனில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஏற்றுக் கொள்பவர் தனக்கு இறைஞானம் கிடைக்க வேண்டும் என்பதற்காகத்தான் ஏற்றுக் கொள்கிறார் - எனவே அவர்கள் இந்த விஷயத்தை நன்றாக மனதில் வைத்துக் கொள்ளட்டும். பிறகு இன்று நான் உங்களுக்குக் கூற விரும்புவதைக் கேளுங்கள். மேலும் அதன்படி செயல்படுவதற்கு முயற்சி செய்யுங்கள்.

இறைஞானத்தைப் பெறுவதற்காக நான் கூறவிருப்பதை இதற்கு முன் நீங்கள் ஒருபோதும் கேட்கவில்லை என நான் கூறவில்லை. இன்னும் கூறுவதென்றால், இதில் பலவற்றை நீங்கள் முன்னர் கேள்விப்பட்டிருப்பீர்கள். **இன்று நான் கொடுக்கும் சொற்பொழிவின் நோக்கம், இறைஞானத்தைப் பெற்றுக் கொள்வதற்குத் தேவையான விஷயங்களை எனக்கு இறைவன் வழங்கிய ஞானத்தின் அடிப்படையில், நீங்கள் அவற்றை நினைவு கூர்ந்து எளிமையாக பயன்படுத்தும் வகையில் உங்களுக்கு முன்னால் எடுத்துக் கூறுவதாகும்.** இறைவன் இந்தக் கருத்து பற்றி சிறப்பான ஞானத்தை எனக்கு வழங்கியுள்ளான். இது எனது சொந்த மேன்மையோ அல்லது சுயமாக முயற்சி செய்து பெற்ற ஞானமோ அல்ல. மேலும் எனது முயற்சிக்கும், உழைப்பிற்கும் இதனுடன் எந்த தொடர்பும் இல்லை. இது இறைவன் என் மீது செய்திருக்கும் மாபெரும் கருணையும், அருளுமாகும். எனக்கு எத்தகைய ஞானம் வழங்கப்பட்டுள்ளதென்றால், இதிலிருந்து பலன் பெறுபவர் மிக விரைவில் தன்னிடத்தில் மாறுதலை உருவாக்கிக் கொள்ள முடியும் என நான் கருதுகிறேன். இந்த ஞானம் பற்றி எனது

ஜமாஅத்திற்கு நான் புரிய வைக்க வேண்டும் என்பது நீண்ட காலமாக எனது விருப்பமாக இருந்தது. ஆனால் இந்த ஞானம் மிக முக்கியமானதாகும். மேலும் இதற்கு பல கிளைகளும் இருக்கின்றன. அவற்றை எடுத்துக் கூறுவதற்கு அதிக நேரம் தேவை. ஆனால் இப்போது அவ்வளவு நேரமும் இல்லை; உடல்நிலையும் நீண்ட நேரம் சொற்பொழிவாற்றும் அளவுக்கு இல்லை. எனவே இப்போது ஒரு கிளையை மட்டும் எடுத்திருக்கிறேன். அதை விளக்கிக் கூறுவதற்கே அதிக நேரம் தேவை. அல்லாஹ் விரும்பினால் மற்ற கிளைகளையும் விளக்கிக் கூறுவேன். ஆனால் அதற்கான வாய்ப்பு கிடைக்குமா கிடைக்காதா என்பதை நான் அறியேன். ஏனெனில் எனது உடல்நிலை தொடர்பாக வேறு சில சகோதரர்களுக்கும் எச்சரிக்கை வகையிலான கனவுகள் வந்திருக்கின்றன. எனவே இப்போது வாய்ப்பு கிடைக்கும் அளவுக்கு ஒரு கிளையைப் பற்றி நான் எடுத்துக் கூறுவேன். மற்றவற்றை இறைவனுடைய விருப்பத்திற்கு விட்டு விடுகிறேன். இறைவன் புறமிருந்து சில நற்செய்திகளும் கிடைத்திருக்கின்றன. அவற்றின் அடிப்படையில் எனக்கு மற்ற கிளைகளைப் பற்றியும் எடுத்துக் கூறுவதற்கு வாய்ப்பு கிடைக்குமா கிடைக்காதா என உறுதியாகக் கூற முடியாதென்றாலும், வாய்ப்பு கிடைக்கும் என்பது எனது கணிப்பாகும்.

## ஒரு நற்செய்தியைக் கொண்ட ஆன்மீகக் கனவு

அந்த நற்செய்திகளில் ஒன்று, நான் பைத்துத் துஆவில் இருந்து கொண்டு தஷஹ்ஹுது நிலையில் இருந்தவாறு இவ்வாறு துஆ செய்யக் கண்டேன்: இறைவா! எனது முடிவு இப்ராஹீம் (அலை) அவர்களுக்கு ஏற்பட்டது போன்ற முடிவாக இருக்கட்டுமாக. பிறகு உணர்வுப்பூர்வமாக எழுந்து நின்றேன். இதே துஆவை செய்து கொண்டிருந்தேன். வாசல் திறந்திருக்கிறது. மேலும் மீர் முஹம்மது இஸ்மாயீல் சாஹிப்

அவர்கள் அங்கு நின்று ஒளியூட்டிக் கொண்டிருக்கிறார்கள். இஸ்மாயீல் என்பதன் பொருள் இறைவன் கேட்டுக் கொண்டான் என்பதாகும். மேலும் இப்ராஹீமின் முடிவு என்பது இப்ராஹீம் (அலை) அவர்களுக்கு ஏற்பட்ட முடிவு என்பதாகும். அதாவது, அவர் இறந்தபோது இறைவன் ஹஸ்ரத் இஸ்ஹாக் (அலை) ஹஸ்ரத் இஸ்மாயீல் (அலை) ஆகிய இருவரை அவருக்கு பிரதிநிதியாக நியமித்தான். இது ஒரு வகையில் நற்செய்தியாகும். இதனால் நீங்கள் மகிழ்ச்சி அடைய வேண்டும்.

**கவனமாகக் கேட்குமாறு வலியுறுத்தல்**

இப்போது நான் எனது அசல் தலைப்பின் பக்கம் வருகிறேன். இறைஞானத்தைப் பெறுவதற்கு கடுமையான முயற்சி தேவை; அது இல்லாமல் கிடைக்க முடியாது. முழுமையான ஞானம் இல்லாமலும் கிடைக்க முடியாது என நான் கூறினேன். எனவே நான் கூறுவதை கவனமாகக் கேளுங்கள். ஏனெனில் கவனமாகக் கேட்காமல் எந்த விஷயமும் நினைவில் இருக்க முடியாது. மேலும் எந்த விஷயம் நினைவிலேயே இல்லையோ அதன்படி செயல்படவும் முடியாது. எனவே இப்போது எவராவது தூங்குகிறார் என்றால் அவர் விழித்தெழட்டும். ஒருவர் கவனமற்றிருக்கிறார் என்றால் எச்சரிக்கையாக இருக்கட்டும்; ஒருவருடைய கவனம் வேறு பக்கம் இருக்கிறதென்றால், அவர் இதன் பக்கம் திரும்பட்டும் என நான் உழைப்புடனும் தூய மனதுடனும் கேட்டுக் கொள்கிறேன். நான் எதைக் கூற ஆரம்பித்திருக்கிறேன் என்றால் அதைக் கேட்பதில் உங்களுக்குத்தான் பயன் உள்ளது. நான் இதற்கு பிரதி பலனாக உங்களிடமிருந்து எதையும் கேட்கவில்லை; எந்த கோரிக்கையையும் வைக்கவில்லை. மாறாக என் மீது இருக்கின்ற கடமையை நிறைவேற்றுவதற்காக நான் எடுத்துக் கூறுகிறேன். மேலும் நீங்கள் இதிலிருந்து பயன் பெறுங்கள். நான் உங்களுக்குக் கூறவிருப்பதன்படி நீங்கள் செயல்பட்டால்

என்னவெல்லாம் உங்களுக்குக் கிடைக்கிறது; அதிலிருந்து நீங்கள் எவ்வாறு இன்பத்தைப் பெறுகிறீர்கள் என்பதைக் காண்பீர்கள். ஆனால் நான் கூறவிருக்கும் விஷயங்களைக் கேட்டு இரவில் செயல்பட்டதும் பகலில் மனிதன் இறைஞானம் பெற்றவனாகிவிடுவதற்கு அது மாய வித்தை அல்ல என்பதை நினைவிற் கொள்ளுங்கள். இறைஞானம் என்பது இவ்வாறு கிடைப்பதில்லை; மாறாக தனது நஃப்ஸை மாய்த்துக் கொள்வதனால் கிடைக்கிறது என்பதை நான் ஆரம்பத்திலேயே கூறி விட்டேன். ஆயினும் இந்த விஷயங்களை நினைவில் வைப்பதனால் கிடைக்கும் பயன் என்னவென்றால், உழைத்தும் இறைஞானம் கிடைக்கவில்லை என மக்கள் முறையிடும் நிலை உங்களுக்கு ஏற்படாது. நீங்கள் இறைவனை திருக்குர்ஆனில் கூறப்பட்ட அதே பண்புகளுக்கேற்ப கண்டு கொள்வீர்கள் - இன்ஷா அல்லாஹ்.

## வழிவகைகளை மேற்கொள்ளாமல் துஆ ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை

நான் கூற விரும்புகின்ற முதல் விஷயம் என்னவென்றால், முயற்சி செய்வது பற்றி குறிப்பான வழிகாட்டல் இருக்கிறது. ஒவ்வொன்றையும் பெறுவதற்கென்று குறிப்பிட்ட வழிமுறைகள் இருக்கின்றன என்பதை நினைவிற் கொள்ள வேண்டும். அந்த வழிமுறைகளை செயல்படுத்தாவிட்டால் அந்தப் பொருள் கிடைக்க முடியாது. துஆவினால் இறைவன் கிடைத்து விடுகிறான் என மக்கள் கூறுகின்றனர். சந்தேகமின்றி துஆ மிகப் பெரிய ஒன்றாகும். ஆனால் அத்துடன் மற்ற சில வழிவகைகளின் தேவையும் இருக்கின்றன. அவை இல்லாத வரை துஆவும் ஒப்புக் கொள்ளப்பட முடியாது. உதாரணமாக, ஒருவர் திருமணம் செய்த பிறகு மனைவியின் பக்கமே செல்லாமல், எனக்கு குழந்தை கிடைக்க வேண்டும் என துஆக்களை செய்து கொண்டிருந்தால் அவருடைய துஆ ஒப்புக்கொள்ளப்பட்டு விடுமா? ஒருபோதும் ஒப்புக் கொள்ளப்படாது.

## ஒரு பெரியவரின் கதை

ஒரு பெரியவரைப் பற்றி எழுதப்பட்டுள்ளது. அவரிடம் ஒருவர் வந்து, இறைவன் எனக்கு மகனை வழங்க தாங்கள் துஆ செய்யுங்கள் எனக் கூறினார். இவ்வாறு கூறியவாறு அவர் திரும்பிச் சென்றார். பெரியவர் அவரிடம், எங்கு செல்கிறீர் எனக் கேட்டார். அவர், எங்கோ வேலை செய்யச் செல்கிறேன் என்றார். அதற்கு அந்தப் பெரியவர், நீர் எங்கோ வேலை செய்யச் செல்கின்றீர் என்றால் எனது துஆ எப்படி ஒப்புக்கொள்ளப்படும்? எனக் கேட்டார். எனவே வழிவகைகளை பயன்படுத்தாதவரை துஆ செய்வதால் மட்டும் எதுவும் ஆகி விடாது. மேலும் உழைப்பின்றி துஆ எந்த பயனையும் தர முடியாது.

## செயல்படாமல் துஆ எப்போது ஒப்புக்கொள்ளப்படும்?

துஆவுடன் செயலும் இருக்கும்போதுதான் அது பயன் தருகிறது. ஆயினும் இரண்டு நிலைகளில் செயல் இல்லாமல் துஆ பயன் தருகிறது. **ஒன்று,** இன்ன வேலைக்காக நீங்கள் துஆ செய்யுங்கள்; ஆனால் செயல்பட வேண்டாம் என இறைவன் புறமிருந்து மனிதனுக்குக் கட்டளை கொடுக்கப்பட வேண்டும். அதாவது அந்த வேலைக்காக வெளிப்படையான வழிவகையை பயன்படுத்த வேண்டாம் என இறைவனிடமிருந்து கட்டளை வர வேண்டும். உதாரணமாக, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு, பிளேக் நோயிலிருந்து தப்பிப்பதற்காக துஆவில் அழுத்தம் கொடுக்க வேண்டும் என்றும் ஊசி போட வேண்டாம் என்றும் கூறப்பட்டது. ***(கிஷ்தி நூஹ் பக்கம் 4 ரூஹானீ கஸாயின் தொகுதி 19 பக்கம் 2)*** ஆக, இந்த ஊசி, பிளேக் நோயிலிருந்து பாதுகாப்பதற்கான மருத்துவமாக இருந்தது; இருக்கிறது. அப்படி இருந்தும் அதைப் போடுவதிலிருந்தும் இறைவன் அவர்களைத் தடுத்து விட்டான். மேலும் துஆ செய்யுமாறு கூறினான். இறைவனின் அருளால் இந்த ஊசி

போடுபவர்களை விட அஹ்மதிய்யா ஜமாஅத்தைச் சேர்ந்தவர்கள் மிகக் குறைவாக இந்த நோயிக்கு இரையானார்கள்.

**இரண்டாவது நிலை,** மனிதன் செயல்படவே முடியாத நிலையில் இருக்கும்போது துஆ மட்டும் செய்தால் அது ஒப்புக்கொள்ளப்படும். உதாரணமாக, ஒருவர் காட்டில் சிறைப்பிடித்து வைக்கப்பட்டிருக்கிறார். அவருடைய கைகள் கால்கள் பிணைக்கப்பட்டுள்ளன. அவர் அப்போது செயல்படவே முடியாது. எனவே அப்போது துஆ செய்வதே போதுமானதாகும். ஆனால் இந்த மாதிரியான தடைகள் இல்லாவிட்டால் அப்போது துஆவுடன் செயலும் இருப்பது அவசியமானதாகும். ஆக, இந்த இரண்டு சந்தர்ப்பங்களில்தான் துஆ செயல் இல்லாமல் ஒப்புக்கொள்ளப்பட முடியும். இல்லையென்றால் ஒப்புக்கொள்ளப்பட முடியாது. பிறகு, துஆ மற்றும் முயற்சியினால் மட்டும் இறைவன் கிடைத்து விட முடியாது. நானே பார்த்திருக்கிறேன். சிலர் மிகவும் முயற்சி செய்கின்றனர். ஆனால் அவர்களுக்கு இறைவன் கிடைக்க முடியாது. இதிலிருந்து இதுவும் போதுமானதன்று எனத் தெரிகின்றது. ஒருவர் இந்த இரண்டு விஷயங்களையும் மேற்கொள்கிறார். அதாவது துஆவும் செய்கிறார்; முயற்சியும் செய்கிறார். பிறகும் இறைவன் ஏன் கிடைப்பதில்லை? என்ற கேள்வி இங்கு எழுகிறது. இதற்குரிய விடை என்னவென்றால், அவருடைய முயற்சி சரியான முயற்சியாக இருப்பதில்லை. அவர் முயற்சி செய்கிறார்; ஆனால் சரியான முயற்சி செய்வதில்லை.

## வெற்றிக்கு சரியான முயற்சி என்பது நிபந்தனையாகும்

வெற்றிக்கு முயற்சி செய்ய வேண்டும்; அதுவும் சரியான முயற்சி செய்ய வேண்டும் என்பது நிபந்தனையாகும். உதாரணமாக, கல்விக்கூடத்திற்கு கல்வி கற்கச் செல்லும் ஒரு மாணவருக்கு நூல்களை வாங்குவதும் அவற்றைப் படிப்பதும் அவசியமானதாகும். ஆனால் அவர் நூல்களைப்

படிக்காவிட்டால், எனக்கு கல்வி கிடைக்க வேண்டும் என நாள் முழுக்க துஆக்களை மட்டும் செய்து கொண்டிருந்தால் அவருக்குக் கல்வி கிடைத்து விடுமா என்ன? ஒருபோதும் கிடைக்காது. அல்லது அவர் பகல் முழுவதும் தலைகீழாகத் தொங்கினாலோ அல்லது தனது உடலில் ஊசியைக் குத்திக் கொண்டாலோ, மேலும் நான் கடுமையாக உழைக்கிறேன்; எனவே தேர்ச்சி பெற்று விடுவேன் எனக் கருதினால் தேர்ச்சி பெற்று விடுவாரா என்ன? ஒருபோதும் கிடையாது.அல்லது ஒருவர் கொல்லர் வேலை கற்றுக் கொள்ள விரும்பி நாள் முழுக்க தொழுது கொண்டிருந்தால், இரவு முழுக்க ***சுப்ஹானல்லாஹி வபிஹம்திஹீ சுப்ஹானல்லாஹில் அழீம்*** என ஓதிக் கொண்டிருந்தால் இதைப் பற்றி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், இரண்டு சொற்கள் ரஹ்மானுக்கு மிகவும் பிடித்தமானவை. நாவில் சொல்வதற்கு மிக எளிதானவை. நற்கூலியில் எடையில் மிக அதிக எடையுள்ளவை. சுப்ஹானல்லாஹி வபிஹம்திஹீ சுப்ஹானல்லாஹில் அழீம் எனக் கூறினார்கள். *(புகாரி கிதாபுத் தவ்ஹீது).* ஆயினும் கொல்லர் தொழிலைக் கற்றுக் கொள்ள விரும்பும் ஒருவர், இந்த இரு சொற்களை ஓதிக் கொண்டிருந்தால் அல்லது கிணறு தோண்டிக்கொண்டிருந்தால் அல்லது சுடும் வெயிலில் ஆடையின்றி புரண்டு கொண்டிருந்தால் அவர் கொல்லர் தொழிலைக் கற்றுக் கொள்ள முடியுமா என்ன? ஒருபோதும் முடியாது. எனவே ஒவ்வொரு வேலையிலும் வெற்றி பெறுவதற்கு (அதற்கென நிர்ணயிக்கப்பட்டுள்ள) சரியான முயற்சியும் துஆவும் செய்ய வேண்டிய தேவை இருக்கிறது. எவர் அப்படி செய்யவில்லையோ அவர் எவ்வளவுதான் துஆ செய்தாலும், எவ்வளவுதான் முயற்சி செய்தாலும், உழைத்தாலும் கடினத்தைத் தாங்கிக் கொண்டாலும் அவர் ஒருபோதும் வெற்றி பெற முடியாது. எனவே வெற்றிக்கு சரியான வழிவகையை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

## இறைஞானத்திற்கான மூன்று வழிமுறைகள்

எனவே நான் இறைஞானத்தைப் பெறுவதற்கான மூன்று வழிமுறைகளைக் கூறுகிறேன். **ஒன்று,** மனிதன் துஆ செய்ய வேண்டும். **இரண்டாவது** முயற்சி செய்ய வேண்டும். **மூன்றாவது** சரியான வழிமுறையில் முயற்சி செய்ய வேண்டும். இதற்குப் பிறகு நான் கூறும் விஷயங்களை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். பிறகு முயற்சி செய்யுங்கள். நான் கூறும் முறையில் முயற்சி செய்தால் உங்களுக்கு கண்டிப்பாக வெற்றி கிடைக்கும் - இன்ஷா அல்லாஹ்.

## சரியான முயற்சி செய்யும் வழிமுறை

ஆயினும் சரியான முயற்சிக்கு இன்னொரு விஷயமும் அவசியமாகும். அது என்னவென்றால், முயற்சி என்பது ஒரு குறிக்கோளில் வெற்றி பெறுவதற்கான எல்லா அம்சங்களையும் சூழ்ந்ததாக இருக்க வேண்டும். உதாரணமாக, நுழைவுத் தேர்வு எழுத விரும்பும் மாணவர் வரலாறு, புவியியல் ஆகியவற்றைப் படிப்பதுடன் கணிதத்தையும் படிக்க வேண்டும். அத்துடன் நுழைவுத் தேர்வுடன் தொடர்புடைய விஷயங்களையும் கற்க வேண்டும். ஒருவர் ஏதாவது பாடத்தை விட்டு விடுவார் என்றால், அதை மனனம் செய்யாவிட்டால் மற்ற பாடங்களில் அவர் எவ்வளவுதான் முயற்சி செய்தாலும் உழைத்தாலும் அவர் ஒருபோதும் வெற்றி பெறமாட்டார். எனவே ஒரு குறிக்கோளை அடைவதற்கு அதன் எல்லா அம்சங்களையும் சூழ்ந்திருப்பது அவசியமாகும்.

## இஸ்லாத்தின் மீது ஆட்சேபணையும் அதற்கான பதிலும்

இஸ்லாத்தில் குறுகிய மனப்பான்மை காணப்படுகிறது என மக்கள் கூறுகின்றனர். ஏனெனில் அது, தன்னைத் தவிர வேறு எந்த மார்க்கமும் உண்மை அல்ல எனக் கூறுகிறது. ஆனால் **எல்லா மார்க்கத்தின்படி செயல்படுபவர்களும் ஈடேற்றம் பெற முடியும் என அது கூறியிருக்க வேண்டும் என**

**ஆட்சேபிக்கின்றனர். இந்த ஆட்சேபணை செய்பவர்கள் இயற்கைச் சட்டத்தைப் பார்ப்பதில்லை என்பது வியற்பிற்குரியதாக இருக்கிறது.** அதன் ஒவ்வொரு செயலிலும் என்ன விளைவு ஏற்படுகிறது? அவர்கள் கூறுகின்றனர்: ஓர் இந்துவிடமும், ஒரு கிறித்தவரிடமும், ஓர் ஆரியரிடமும் இறைவனைப் பற்றிய அன்பு இருக்கும்போது அவர் இறைவனை அடைவதற்கு முயற்சி செய்யும்போது, பிறகு அவர் இறைவனை அடையாதிருப்பதற்கு என்ன காரணம்? எனக் கேட்கின்றனர். நான் கூறுகிறேன்: கொல்லருக்கான வேலையைக் கற்றுக் கொள்வதற்காக வெயிலில் புரண்டு வருபவருக்கு அந்த வேலை தெரியாமற்போவதற்கு என்ன காரணமோ அதே காரணம்தான் இங்கேயுமாகும். அறிவைக் கற்றுக் கொள்வதற்காக தலை கீழாகத் தொங்குவதனால் அறிவு கிடைக்காமற் போவதற்கு என்ன காரணமோ அதே காரணம்தான் இங்கேயுமாகும். ஒரு வேலையை செய்வதற்கென்று சரியான முயற்சி செய்யாத வரை அது கிடைப்பதில்லை என்பதை நாம் அனைவரும் அறிவோம். ஆக, உலக விஷயங்களில் இந்தச் சட்டம் நடைமுறையில் இருக்கும்போது ஆன்மீக விஷயங்களிலும் இந்தச் சட்டம் நடைமுறையில் இல்லாமற்போவதற்கு என்ன காரணம் இருக்க முடியும்? எனவே மார்க்க விஷயங்களிலும் அதற்கென்று நிர்ணயிக்கப்பட்டிருக்கும் நிபந்தனைகளைப் பேணாதவரை வெற்றி கிடைக்க முடியாது.

## வெற்றிக்கான இரண்டு விதிமுறைகள்

ஒரு வேலையில் வெற்றி பெறுவதற்கு இரண்டு வழிமுறைகள் இருக்கின்றன. ஒன்று, சில பொதுப்படையான விதிமுறைகள். அதன் கீழ் சிலர் வேலையைக் கற்றுக் கொள்கின்றனர். உதாரணமாக, கல்வி கற்பதற்காக மாணவர்கள் கல்விக்கூடம் செல்கின்றனர். மேலும் நியமிக்கப்பட்ட பாடத்திட்டத்தைப் படிக்கின்றனர். வெற்றி பெற்று

விடுகின்றனர். மேலும் சில குறிப்பிட்ட நுட்பமான விஷயங்கள் இருக்கின்றன. அவற்றை நினைவில் வைத்துக் கொண்டால் எவற்றிக்காக அந்த நுட்பமான விஷயங்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றனவோ அவை பயனளிக்கின்றன. உதாரணமாக, அல்ஜீப்ரா கணக்கின் ஃபார்முலா இருக்கின்றது. அதை நினைவில் வைத்துக் கொள்வதனால் அல்ஜீப்ராவின் அறிவு கிடைத்து விடுகிறது. அல்லது **Yabnyun** மக்கள் கணக்கிடுவதற்கென்று ஒரு குறிப்பிட்ட வழிமுறையை உருவாக்கினர். அதன் மூலமாக சீக்கிரமாகக் கணக்கிட்டு விடுகின்றனர். எனவே ஒவ்வொரு வேலைக்கென்றும் ஒரு சாதாரண வழிமுறை இருக்கிறது. அதன்படி செயல்படுவதால் வெற்றி கிடைக்க முடியும்.

மேலும் சில குறிப்பிட்ட வழிமுறை இருக்கிறது. அவற்றின் மூலமாக மனிதன் சற்று எளிதான முறையில் சரியான முடிவை அடைகிறான். ஒவ்வொரு விஷயத்திலும் இந்த இரண்டும் இருக்கிறது. அந்த விஷயம் ஆன்மீகமாக இருந்தாலும் சரி; அல்லது பௌதீகமாக இருந்தாலும் சரி. ஆனால் பொதுவான விதிமுறைகள் தெரிந்தால்தான் இந்த நுட்பமான விதிமுறைகள் பயன்தர முடியும் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். அவ்வாறல்லாமல் ஆங்கிலம் இப்படிப் படிக்கப்படுகிறது என்ற நுட்பமான விதிமுறையை மட்டும் கற்றுக் கொள்வதால் அவருக்கு ஆங்கிலம் வந்து விடாது. ஏனெனில் உண்மையில் நுட்பமான முறை என்பது வேலையை சிறியதாக்கவும், சீக்கிரம் செய்யவும் தானே தவிர அதில் வெற்றி பெறுவதற்காக அல்ல.

இப்போது நான் கூறும் விஷயத்தில் பொதுவான விதிமுறைகளைக் கூறுவேன். நுட்பமான விதிமுறைகளைக் கூற மாட்டேன். ஏனெனில் அது ஒரு நிரந்தரமான கருத்தாகும். அதைக் கூறாவிட்டாலும் எந்த குற்றமுமில்லை. ஏனெனில் நுட்பமான விதிமுறைகளினால் பல மணி நேரங்களின் வேலை

சில மணித்துளிகளிலும், ஆண்டுகளின் வேலை மாதங்களிலும் நடக்கலாம் என்பது சரிதான். ஆனால் சரியான விதிமுறைகள் வந்தால்தான் அவற்றிலிருந்து பயன்பெற முடியும். அதற்கு பொதுவான விதிமுறைகள் கற்பது அவசியமாகும். அதன்படி செயல்பட ஆரம்பித்து விட்டால் பிறகு வேலையை சுருக்கமாக்குவதற்காகவும், விளைவு வரை சீக்கிரம் சென்றடைவதற்கும் நுட்பமானவற்றையும் கற்றுக் கொடுக்க வேண்டும். எனவே இது ஒரு தனிப்பட்ட நிரந்தரமான கட்டுரையாகும். எனவே இன்று நான் அதைப் பற்றிக் கூற மாட்டேன். அல்லாஹ் நல்வாய்ப்பு வழங்கினால் பிறகு ஏதாவது ஒரு நேரத்தில் எடுத்துரைப்பேன். இன்று பொதுவான விதிமுறைகளைப் பற்றி எடுத்துக் கூறுவேன்.

## இறைஞானத்திற்கான தொடர்பு உள்ளத்துடன் ஆகும்; நாவுடன் அல்ல

இறைஞானம் என்பதன் உண்மை நிலை சொற்களில் எடுத்துக் கூறும் ஒன்றல்ல என்பதையும் இங்கு நான் கூறுவதை அவசியமானதாகக் கருதுகிறேன். அப்படி இருந்தால் அதை ஒவ்வொருவரின் மூளையிலும் பதிய வைக்க முடியும். மேலும் ஒவ்வொருவராலும் அதனை புரிய முடியும். ஆனால் அப்படி நடப்பதில்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை விட வேறு யாருக்கு மனிதர்களுடன் அன்பும் அநுதாபமும் இருக்க முடியும்? அல்லாஹ் அவர்களைப் பற்றி, ***லஅல்லக பாகிவுந் நஃப்ஸக அன்லா யகூனூ முஃமினீன்*** எனக் கூறுகிறான். அதாவது, எல்லா மக்களும் ஏன் நம்பிக்கையாளர்களாகவில்லை என்பதற்காக நீர் உம்மையே மாய்த்துக் கொள்வீரா? என அல்லாஹ் கேட்கிறான். (26:4) ஆக, மக்களின் மீது இந்த அளவுக்கு அநுதாபம் கொண்டிருந்த முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களைப் பார்த்து அல்லாஹ், இவர்களுக்காக நீர் உம்மை மாய்த்துக் கொள்வீரா? எனக்

கேட்கிறான். அவர்கள் இறைஞானத்தை சொற்களில் கூற முடிந்திருந்தால் அவர்கள் கண்டிப்பாகக் கூறியிருப்பார்கள். ஆனால் அவர்களும் கூறவில்லை. இதிலிருந்து இறைஞானம் என்பதே சொற்களில் கூற முடியாத ஒன்று எனத் தெரிகிறது. அது உள்ளத்துடன் தொடர்புடையதாகும். இறைஞானம் என்பது இறைவனை அடைவதற்குக் கூறப்படும் என நான் கூறியிருந்தேன். ஆனால் அதன் உண்மை நிலையை சொற்களில் கூற முடியாது. அப்படி முடிந்திருந்தால் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) மற்றும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள், அனைவரையும் இறைஞானம் கொண்டவர்களாக ஆக்கியிருப்பார்கள். எனவே நானும் உண்மை நிலையைக் கூற மாட்டேன்; கூறவும் இயலாது. ஆயினும் அதனைப் பெறுவதற்கு என்ன வழிமுறைகள் கூறப்பட்டுள்ளனவோ அவற்றை எடுத்துக் கூறுவேன்.

சீடரின் நிலைமைகள் பற்றி தலைவருக்குத் தெரிய முடியாது; தலைவரின் நிலைமை பற்றி சீடருக்குத் தெரிய முடியாது எனக் கூறப்படுகிறது. இதன் கருத்து, அவர்களின் உள்ளத்தின் நிலைமைகள் பற்றி ஒருவர் மற்றவருக்குத் தெரிய முடியாது. ஒருவருடைய உள்ளத்தின் நிலையை இன்னொருவர் அறிய முடியாது. உண்மையில் இது ஓர் அறிவு சார்ந்த தகுதிகளாகும். அவற்றை சொற்களில் வருணித்துக் கூற முடியாது. எதுவரை என்றால், எவருக்கு இது கிடைக்கின்றதோ அவர் கூட அதை எடுத்துக் கூற முடியாது. ஆயினும் அதைப் பெறுவதற்கான வழிமுறைகள் இருக்கின்றன. அவற்றை எடுத்துக் கூறலாம். மேலும் அவற்றைத்தான் நான் எடுத்துக் கூறுவேன். அடுத்து, அவற்றின்படி செயல்படுவதால் என்ன நிலைமைகள் ஏற்படுகின்றன? என்பதைப் பற்றி எவராலும் இன்று வரை எடுத்துக் கூறவும் முடியவில்லை; என்னாலும் எடுத்துக் கூற முடியாது. இனிப்பு இவ்வாறு ஆயத்தமாகிறது; இவ்வாறு

இருக்கிறது எனக் கூற முடியும்; ஆனால் அதை உண்ணக் கொடுக்காதவரைஅதன் இன்பத்தைப் பற்றிக் கூற முடியாது. அதே போன்று இறைஞானம் என்பது இப்படி இருக்கிறது எனக் கூற முடியும். ஆனால் அதன் நிலைமை என்ன என்பதைப் பற்றிக் கூற முடியாது. ஆயினும் ஒருவர் அதைப் பெற்றுக் கொண்டால் அதன் நிலைமையைப் பற்றி தாமாகவே தெரிந்து விடும்.

## இறை இருப்பைப் பற்றி தெரிந்து கொள்வதற்கான வழிமுறைகள்

இறைஞானத்தைப் பெறுவதற்கு சரியான காரணிகள், வழிமுறைகள் என்ன என்பதைப் பற்றி நான் இப்போது கூறுகிறேன். இறைஞானம் என்பதன் பொருள், எந்த இறைவனைப் பற்றி திருக்குர்ஆனில் நாம் படித்திருக்கின்றோமோ அவனைப் பற்றி தெரிந்து கொள்ளுதல் ஆகும். இது பற்றி நான் ஏற்கனவே கூறியிருக்கிறேன். இறைவனைத் தெரிந்து கொள்வதற்கு என்ன வழிமுறைகள் உள்ளன என நாம் பார்க்க வேண்டும். இது தொடர்பாக நினைவிற்கொள்ள வேண்டியது என்னவென்றால், தெரிந்து கொள்ளுதல் என்பதன் பொருள், மனிதன் இறைவனை மற்ற பொருள்களைப் போன்று முன்னால் கண்டு கொள்வது, தனது பௌதீகமான உறுப்புகளால் தொட்டு உணர்வது என்றால் இறைவனிடம் காணப்படுகின்ற விஷயங்கள் அந்த மனிதனிடமும் காணப்படுவது அவசியமானதாகும். ஏனெனில் நமது பௌதீகமான உடல் உறுப்புகள் எந்த பொருள்களைத் தொடுகின்றனவோ அவையும் பௌதீகமானவையாகவே இருக்கின்றன. பௌதீகமான பொருள்கள் எந்த அளவுக்கு குறைவானவையாக இருக்கின்றனவோ அதே அளவுக்கு குறைவாக உணரப்படுகின்றன. காரணம் என்னவென்றால், இரண்டு பொருள்களுக்கு மத்தியில் இணைப்பு இல்லாதவரை அவை ஒன்றுக்கொன்று தொடர்பு கொள்ள முடியாது.

உதாரணமாக, எருமை மாட்டிற்கும், அறிவுக்கும் இடையில் எந்தத் தொடர்பும் இல்லை. எனவே அதற்கு முன் தத்துவம் எடுத்துரைக்கப்பட்டால் அது ஒருபோதும் புரிந்து கொள்ள முடியாது. அவ்வாறே கிளியிடம் பேச்சில் ஒப்புமை இருக்கிறது; ஆனால் அறிவில் ஒப்புமை இல்லை. எனவே ஓசையை காப்பியடித்து விடுகிறது. ஆனால் எந்த விஷயத்தையும் புரிய முடியாது.

## இறைவனுடன் ஒப்புமையை ஏற்படுத்துங்கள்

இதிலிருந்து தெரிய வருவது என்னவென்றால், இறைஞானத்திற்கு ஒப்புமையும், தொடர்பும் இருக்க வேண்டியது அவசியமாகும். இறைவனுடன் ஒப்புமை ஏற்படும்போதுதான் - இறைவனுடைய பண்புகள் மனிதனுக்குள் வரும்போதுதான் இறைஞானம் கிடைக்க முடியும். நாம் இறைவனைப் போன்று மாறாத வரை நாம் இறைஞானத்தைப் பெற முடியாது என நான் கூற மாட்டேன். ஆயினும், ***தகல்லகூ பிஅக்லாக்கில்லாஹ்*** (அல்லாஹ்வின் பண்புகளை மேற்கொள்ளுங்கள்) என்று ஹஸ்ரத் ரஸூலே கரீம் (ஸல்) அவர்கள் கூறியதைக் கூறுகிறேன்.

### இறைபண்புகளை உங்களிடத்தில் உருவாக்குங்கள்

இதனால்தான் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் உங்களுக்கும் இறைவனுக்குமிடையில் ஒப்புமை ஏற்பட வேண்டும் என்று கூறினார்கள். ஒப்புமை ஏற்பட்டுவிட்டால் பிறகு நீங்கள் இறைவனைக் கண்டு கொள்வீர்கள். நீங்கள் இறைவனைப் போன்று உங்களை ஆக்கிக் கொள்ளுங்கள் என்று கூறவில்லை. மாறாக, உங்கள் பண்புகளை அல்லாஹ்வுடைய பண்புகளைப் போன்று ஆக்கிக் கொள்ளுங்கள் என்றுதான் கூறினார்கள். காரணம் என்னவென்றால் அல்லாஹ்வின் தன்மையை எவராலும் புரிந்து கொள்ளவே முடியாது. புரிய முடியாதென்றால் பிறகு அவனுடைய ஒப்புமையையும்

மேற்கொள்ள முடியாது. எனவே மனிதன் மற்ற பொருள்களைப் பார்ப்பது போன்று அல்லாஹ்வைப் பார்க்க முடியாது. ஆயினும் மனிதனால் அறிய முடிகின்ற இறைவனுடைய பண்புகளை அவர் தன்னிடம் உருவாக்கலாம். இந்த வழிமுறையில் அவர் இறைவனைக் காணவும் முடியும். எனவே ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இறைவனின் பண்புகளை நம்மிடம் உருவாக்குவதன் பக்கம் கவனமூட்டியிருக்கிறார்கள். மேலும் அல்லாஹ்வின் பண்புகள் என்பதன் கருத்து அவனுடைய சிறப்பியல்புகள் என்பதாகும்.

பண்புகள் என்ற சொல் நாவில் வந்ததுமே ஒரு நண்பரின் கனவு நினைவுக்கு வந்து விட்டது. அவர் கூறினார்: தாங்கள் ஆண்டு மாநாட்டில் இறைபண்புகளைப் பற்றி சொற்பொழிவாற்றிக் கொண்டிருப்பதாக நான் கனவில் கண்டேன். எனவே இறைபண்புகள் பற்றி சொற்பொழிவாற்றுங்கள் என்றார். இந்தக் கனவு கூறப்பட்டபோது மாநாட்டிற்காக வேறொரு தலைப்பு நியமிக்கப்பட்டிருந்தது. ஆனால் பண்புகள் என்ற சொல் நாவில் வந்ததுமே அவருடைய கனவு நினைவுக்கு வந்து விட்டது.

ஆக, இறைஞானத்தைப் பெறுவதற்கு அல்லாஹ்வின் பண்புகளை தன்னிடத்தில் உருவாக்குவது அவசியமானதாகும். ஏனெனில் மனிதன் ஒருவகையான *ரப்* (காத்தோம்புபவன்) ஆகாதவரை, ஒருவகையான ***ரஹ்மான்*** (அருள் செய்பவன்) ஆகாத வரை, ***ரஹீம்*** (கருணையாளன்) ஆகாத வரை, ***முஹைமின்*** (பாதுக்காப்பவன்) ஆகாதவரை, ***சத்தார்*** (குறைகளை மறைப்பவன் ) ஆகாத வரை, ***கஃப்பார்*** (மன்னிப்பவன்) ஆகாத வரை மனிதன் அல்லாஹ்வின் பண்பை வெளிப்படுத்துபவனாக மாற முடியாது. மேலும் எந்த அளவுக்கு அல்லாஹ்வின் பண்பு மனிதனிடத்தில் பிரதிபலித்துக் கொண்டிருக்குமோ அதே அளவுக்கு அவர் இறைபண்புகளைக் கண்டு கொண்டே

செல்வார். ஆனால் **மனிதனுடன் தொடர்புடைய இறைவனுடைய எல்லா பண்புகளையும் தன்னிடத்தில் உருவாக்குபவர்தான் முழுமையான மனிதர் ஆவார்; இறைஞானம் பெற்றவராவார்.** இதற்குப் பிறகு இறைவன் கிடைப்பது அவருக்கு எளிதாகி விடும். ஏனெனில் அவருக்கும் இறைவனுக்கும் இடையில் ஒரு தொடர்பு ஏற்பட்டு விடும்.

இப்போது இறைபண்புகளை தன்னிடத்தில் எப்படி உருவாக்குவது என்ற கேள்வி எழுகிறது. ஒருவர் கூறினார்: (உருது கவிதையின் பொருள்)

''தலைவலிக்கு சந்தனத்தை பயனுள்ளது என்று கூறுகிறார்கள். சந்தனக் கட்டையை தேய்ப்பதும் பூசுவதும் ஒரு தலைவலிதானே!''

## நம்மிடத்தில் இறைபண்புகளை உருவாக்குவதற்கான வழிமுறை

இறைஞானத்தைப் பெறுவதற்கு இறைபண்புகளைப் பெற வேண்டும் என்ற நுட்பமான கருத்து தெரிந்து விட்டது. ஆனால் இறைவனுடைய பண்புகளை எப்படிப் பெற முடியும் என்பதும் தெரிய வேண்டுமல்லவா? பிறர் மீது கருணை காட்ட வேண்டும்; கடுமை காட்டக் கூடாது என பலர் நினைக்கின்றனர். ஆனால் அவர்களின் உள்ளத்தில் உள்ள கடுமை அவர்களை அப்படிச் செய்ய அனுமதிப்பதில்லை. அவ்வாறே பலர் மற்றவர்களின் குறைகளை மறைக்க வேண்டும் என விரும்புகின்றனர். ஆனால் நேரம் வரும்போது விஷயம் வாயிலிருந்து வெளியே வந்து விடுகிறது. அவ்வாறே மன்னிக்கும் பண்பை உருவாக்க வேண்டும் என பலர் ஆசைப்படுகின்றனர். ஆனால் அவர்களால் உருவாக்க முடியாது. ஆக, முயற்சி செய்தும், உழைத்தும் இந்தப் பண்பை மக்கள் பெற முடியாதபோது இறைவனுடைய பண்புகள் மனிதனிடமிருந்து வெளிப்படும் அளவுக்கு அவனுடைய செயல்கள் எப்படி ஆக முடியும் என்ற கேள்வி எழுகிறது.

## முதல் வழிமுறை இறைபண்பு பற்றிய அறிவு

இதற்கு முதன் முதலில் தேவைப்படுவது மனிதனுக்கு இறைவனின் பண்பைப் பற்றிய அறிவு இருக்க வேண்டும். இது சாதாரண விஷயம்தானே எனக் கருதி விடாதீர்கள். இது பற்றி எவருக்கும் எந்த அறிவும் இல்லை. ஏனெனில் பலருடைய மூளையில் இறைவனுடைய பண்புகள் பற்றி பதியவில்லை. அப்படி பதிந்திருந்தாலும் அவர்கள் அதனுடைய பொருளைப் புரியவில்லை. உதாரணமாக, முஸ்லிம்களிடம் இறைவனின் பண்புகளை மனனம் செய்யும் பழக்கம் பொதுவாக இருக்கிறது. ஆனால் அதன் பொருள் அவர்களுக்குத் தெரியாது. பொருள் தெரியாதவரை சொல் எந்தத் தாக்கத்தையும் ஏற்படுத்த முடியாது. அதன் மூலமாக செயல்களில் எந்த மாறுதலும் ஏற்பட முடியாது. ஆக, முதலில் பலருக்கு இறைவனின் பண்புகளே நினைவில் இருப்பதில்லை. மேலும் எவர்களுக்கு நினைவில் இருக்கிறதோ அவர்களுக்கு பொருள் தெரிவதில்லை. விஷயம் இத்துடன் முடிந்து விடவில்லை. எவர்களுக்கு பொருள் தெரிகிறதோ அவர்களுக்கு அவர்களின் மூளையில் எந்த தாக்கங்களும் அவற்றால் உருவாவதில்லை. தாக்கம் உருவாகாதவரை சொற்கள் எந்தப் பயனையும் தருவதில்லை. உதாரணமாக, (அரபியில்) ***ஷாத்துன்*** என்பதன் பொருள் ஆடு என்பதாகும். இப்போது ஒருவருக்கு ***ஷாத்துன்*** என்பது ஆட்டிற்குக் கூறப்படும் எனக் கூறினால் அவருக்கு ஆடு என்றால் என்ன என்று தெரியாவிட்டால் அவர் எதையும் புரிய முடியாது. எந்த பொருளினால் மனிதனுடைய சிந்தனையில் அதன் சரியான நிலைமை பற்றி வர முடியாதோ அதைப் பற்றிய பொருள் அவனுக்குத் தெரிவதும் தெரியாமல் இருப்பதும் ஒன்றுதான். எனவே பொருள் தெரிந்தால் மட்டும் போதுமானதன்று. மாறாக, அதன் நிலைமை பற்றி மூளையில் தோன்றுவதும் அவசியமாகும். ஆனால் பெரும்பாலானவர்கள் நிலைமைகள் பற்றி அறியாதவர்களாக இருக்கிறார்கள். உதாரணமாக,

ஒருவரிடம் *ரப்* என்பதன் பொருளைக் கேட்டால், படைத்து காத்தோம்புபவன் என்று கூறி விடுவார். ஆனால் படைத்து காத்தோம்பும் நிலைமை பற்றி அவருடைய உள்ளத்தில் தோன்றாது. அவருடைய உள்ளத்தில் அதன் பொருள் பதியாது. எனவே இறை பண்புகளை அறிதல் என்பதன் பொருள், பெயர் நினைவில் இருக்க வேண்டும் என்பதோ அல்லது பொருள் தெரியும் என்பதோ அல்ல; மாறாக, இறைவனுடைய பண்புகள் தெரிய வேண்டும்; அதன் பொருள் தெரிய வேண்டும். மேலும் எந்த நேரத்தில் அந்தச் சொல் நாவிலிருந்து வெளிவருகிறதோ அல்லது காதில் விழுகிறதோ அப்போது உடனே அதற்கேற்ற நிலைமை உள்ளத்தில் உருவாக வேண்டும். உதாரணமாக, ***ரஹ்மான்*** என்பதன் பொருள், உழைப்பின்றி அருள்பாலிப்பவன் என்பதாகும். இந்தச் சொல் ஒருவருடைய நாவில் வெளிவரும்போது அவருடைய உள்ளத்தில் உழைப்பின்றி வழங்குபவன் என்ற சொற்றொடர் ஏற்கனவே உருவாகியது வெளிப்படுவதாக இருக்கக் கூடாது. மாறாக, அதன் உண்மையான கருத்து, உழைப்பின்றி கிடைக்கும் அல்லாஹ்வின் அருட்கொடைகள் மின்னலைப் போன்று அவருக்கு முன்னால் - ஏன் - மனக் கண்களுக்குக் முன்னால் கடந்து செல்ல வேண்டும். மேலும் அந்தப் பண்பு ஓவிய உலகில் அவருக்கு முன்னால் வர வேண்டும். எவருக்கு இது கிடைக்கவில்லையோ அவர் தாமே சிந்தித்து அதன் முழுமையான நிலைமை உள்ளத்தில் உருவாவதற்காக இந்த விபரங்களை தன் உள்ளத்தில் கொண்டு வர வேண்டும். பலரிடம் இறை பண்புகளின் பொருளைப் பற்றி கேட்டால் அவர்கள் கூறிவிடுவதைப் பார்க்கிறோம். ஆனால் அந்தப் பொருளின் கருத்தைப் பற்றிக் கேட்டால் மவுனமாகி விடுகின்றனர். அவருடைய நிலைமை ஒரு கவிஞரின் கீழ் வரும் கவிதைக்கு தவறான பொருள் கொடுத்தது போன்று இருக்கிறது. கவிதையில் கூறப்பட்ட விஷயம், நாங்களும் நீங்களும், மீர்

சாஹிபும் மற்றவர்களும் அவளுடைய கூந்தலுக்கு கைதியாகி விட்டோம் என்பதாகும். இந்தக் கவிதைக்குப் பொருள் கொடுத்தவர், எங்களையும், உங்களையும், மீர் சாஹிபையும் அனைவரையும் அவளுடைய முடியின் சங்கிலியால் கட்டி சிறைச்சாலைக்கு அனுப்பி விட்டார்கள் எனப் பொருள் கொடுத்தாராம்.

(ஆக, இறைபண்புகளைக் கூறுகின்ற அதே நேரத்தில் அதன் பொருளைப் பற்றிக் கேட்கும்போது தெரியாதவர்களின் நிலை இப்படித்தான் இருக்கிறது என ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது ரலியல்லாஹு அன்ஹு அவர்கள்கூறுகிறார்கள்.)

## உண்மையான இறைபண்புகளைப் பெறுவதற்கான வழிமுறை

எனவே அந்த சொற்களுடன் அந்த சொற்களோடு தொடர்புடைய நிலைமை உருவாகாதவரை வெறும் சொற்களின் பொருள்களைத் தெரிவது போதுமானதன்று. எனவே மனிதன் இறைவனின் ஒவ்வொரு பண்பின் பொருளையும் அறிய வேண்டும். மேலும் அந்தப் பண்பை விளக்க வேண்டும். அப்போது அந்த பண்பின் நிலைமை உள்ளத்தில் படிந்து விடும். உதாரணமாக *ரப்* என்பதற்கு படைப்பவன்; படைத்து முன்னேற்றத்தைக் கொடுப்பவன் என பொருள் கொடுக்கும்போது, அடுத்து முன்னேற்றத்தைக் கொடுத்தல் என்றால் என்ன பொருள்? அவன் எவ்வாறு முன்னேற்றத்தை வழங்குகிறான்? என்னென்ன வழிமுறைகளில் முன்னேற்றத்தை வழங்குகிறான் என்ற விளக்கம் கொடுக்க வேண்டும். இந்தப் பண்பைப் பற்றிய முழுமையான நிலைமை உள்ளத்தில் உருவாகாதவரை அதற்கு விளக்கம் கொடுத்துக் கொண்டே இருக்க வேண்டும். **எனவே தன்னிடத்தில் இறைபண்புகளை உருவாக்க விரும்புகின்றவர் அந்தப் பண்புகளின் கருத்து என்ன என்பதைப் பார்ப்பது அவசியமாகும்.** அதற்குப் பிறகு அவருக்கு

அவற்றைப் பற்றிய உண்மையான அறிவு கிடைக்க முடியும். மேலும் இறைபண்புகளைப் பற்றிய உண்மையான அறிவு கிடைத்து விட்டால் பிறகு தானாகவே நன்மை மற்றும் தீமை பற்றிய அறிவு கிடைத்து விடுகிறது என்பதை நன்றாக நினைவிற் கொள்ளுங்கள். ஏனெனில் அந்தப் பண்புகளை மேற்கொள்ளுதல், அவற்றிற்கேற்ப செயல்படுதல் ஆகியவற்றிக்குப் பெயர்தான் நன்மை என்பதாகும். மேலும் அவற்றை விட்டு விடுதல், அவற்றிற்கு எதிராக செயல்படுதல் ஆகியவற்றிக்குப் பெயர்தான் தீமை ஆகும். திருக்குர்ஆனில் இதுதான் அடிப்படையாகக் கூறப்பட்டுள்ளது. அதாவது உங்கள் செயல்களை இறைவனுடைய பண்புகளுக்கேற்ப அமையுங்கள். மேலும் இறைபண்புகளுக்கு மாற்றமானவற்றிலிருந்து தவிர்ந்து கொள்ளுங்கள். எஞ்சிய எத்தனை நன்மைகள் தீமைகள் இருக்கின்றனவோ அவையனைத்தும் இந்த விளக்கத்தில் விபரத்திலேயே வந்து விடும். பலருக்கு நன்மை என்றால் என்ன? தீமை என்றால் என்ன என்பது தெரிவதில்லை. எனவே அவர்கள் பெரும்பாலான நேரங்களில் தவறுதலாக தீமையை நன்மை எனக் கருதி விடுகிறார்கள்; நன்மையை தீமை எனக் கருதி விடுகிறார்கள். இதற்குக் காரணம் இறைபண்பு எதை நாடுகிறது என்பதை அவர்கள் அறிவதில்லை என்பதேயாகும்.

## நன்மை மற்றும் தீமையை பிரித்தறியும் வழிமுறை

ஆனால் உலகில் இப்படியும் சிலர் இருக்கிறார்கள். அவர்களுக்கு நன்மை தீமை பற்றிய அறிவு இருக்கிறது. கட்டளைகள் என்ன? தடுக்கப்பட்டவை என்ன என்பதை அவர்கள் விபரமாக அறிந்திருந்தும் அதன்படி செயல்பட முடிவதில்லை. அதற்கு என்ன சிகிச்சை? இவர்களுக்கு அவர்களுடைய நஃப்ஸ் தூய்மையடைவதற்கும், அவர்களுக்கு இறைஞானம் கிடைப்பதற்கும் தமது விருப்பத்திற்கேற்ப அல்லாஹ்வால் கூறப்பட்ட செயல்களின்படி

செயல்படுவதற்கும் அவன் தடுத்த விஷயங்களிலிருந்து விலகி இருப்பதற்கான வாய்ப்பு கிடைப்பதற்கும் இவர்கள் என்ன வழிமுறையைக் கையாள்வது? எவர்கள் இறைஞானத்தைப் பெறுவதற்கு முயற்சியே செய்வதில்லையோ அவர்களுக்கு இறைபண்புகளைப் பற்றிய அறிவே இருப்பதில்லை. அவர்களுக்கு இறைபண்புகளைப் பற்றிய அறிவை வழங்குவது அவசியமானதாகும். ஆனால் இறைவனை ஒப்புக்கொள்ளக் கூடியவர்கள், இஸ்லாத்தை பின்பற்றக் கூடியவர்கள் ஆகியோரை முன்னிறுத்தியே நாம் பேசிக்கொண்டிருக்கிறோம். அவர்கள் இறை நெருக்கம் கிடைக்க வேண்டும்; இறை ஞானம் கிடைக்க வேண்டும் என விரும்புகின்றனர். எனவே முதலில் அவர்களுடைய விவகாரங்களைப் பற்றியே சிந்திப்போம். மேலும் அவர்களின் வழியில் என்ன தடைகள் இருக்கின்றன? அவை எவ்வாறு விலக முடியும்? என்பதைப் பற்றி பார்ப்போம்.

## இறைபண்பை உருவாக்குவதற்கான வழிமுறை

நான் முன்னரே குறிப்பிட்டது போன்று, இறைஞானத்தைப் பெறுவதற்கான ஒரே வழிமுறை இறைபண்புகளை தம்மிடத்தில் உருவாக்குவதாகும். மனிதனுடைய உள்ளம் தீமைகளிலிருந்து தூய்மையாகாதவரை மனிதனிடம் இறைபண்புகள் உருவாக முடியாது. எனவே இறைஞானம் கிடைப்பதற்கு முதல் தடை பாவம் செய்வதாகும்.

## பாவம் செய்வதன் மூன்று வகைகள்

பாவங்கள் மூன்று வகையில் நடக்கின்றன. **ஒன்று,** சிலருக்கு சில பாவங்கள் தெரிவதே இல்லை. மேலும் அறியாமையினால் அவர்கள் அதை செய்து விடுகின்றனர். பெரிய பெரிய பாவங்கள் ஒவ்வொருவருக்கும் தெரிகின்றன. திருட்டு, கொள்ளையடித்தல், விபச்சாரம், பொய் ஆகியவை தீமைகள் எனவும் அவற்றிலிருந்து தப்பிக்க வேண்டும் எனவும் ஒவ்வொருவருக்கும் தெரிகிறது. ஆனால் ஒரு வீடு எல்லா

வகையிலும் முழுமையாகாதவரை பாதுகாப்பாக இருக்க முடியாது. ஒருவர் நான்கு சுவர்களை கட்டி விட்டார். மேலே கூரையை அமைக்கவில்லை என்றால் வீடு மழையிலிருந்தும் வெயிலிலிருந்தும் பாதுகாப்பாக இருக்க முடியாது. பாதுகாப்பாகவும், முழுமையாகவும் இருப்பதற்கு கூரையும், கதவுகளும், ஜன்னல்களும் இருப்பது அவசியமானதாகும்.

அதேபோன்று எந்த மனிதனும் தீமைகளின் எல்லா அம்சங்களையும் கவனத்தில் கொள்ளாதவரை அவன் முழுமையான முறையில் தூய உள்ளம் கொண்டவனாக மாற முடியாது. சில தீமைகள் எவ்வளவு நுட்பமானவையாக இருக்கின்றனவென்றால், நுட்பமாக சிந்திக்காதவரை- கடுமையாக முயற்சி செய்யாதவரை - அது பற்றிய அறிவு கிடைக்க முடியாது. ஒவ்வொரு வேலைக்கும் அதைப் பாதுகாப்பதற்கான விஷயங்கள் இருக்கின்றன; இன்னும் சிலவற்றினால் அதன் அழகு நோக்கமாக இருக்கிறது. அழகு தொடர்பான விஷயங்கள் விடுபட்டு விட்டால் பாதிப்பு ஏதுமில்லை. ஆனால் பாதுகாப்பு விஷயம் விடுபட்டு விட்டால் அது முழுமையற்றதாகக் கருதப்படுகிறது.

உதாரணமாக ஒருவர் வீட்டைக் கட்டுகிறார். அதில் அவர் கதவு, ஜன்னல் ஆகியவற்றை வைக்காவிட்டால் அது முழுமையற்றதாக இருக்கும். ஆனால் அவர் தரையை பளிச்சிடாமல் இருந்தால், Plaster (பிளாஸ்திரி) போடாமல் இருந்தால் அழகு இருக்காது; ஆனால் பாதுகாப்பில் எந்தக் குறைபாடும் இருக்காது. எனவே எவருக்கு சில தீமைகள் தெரியவே செய்யாதோ அவர் முழு இரவும் முழு பகலும், தான் வெற்றி பெறுவேன் என நினைத்து முயற்சி செய்தாலும் அவர் கண்டிப்பாக வெற்றி பெற முடியாது. ஏனெனில் இவ்வாறு அவர் எந்த விஷயங்களின் பக்கம் கவனம் செலுத்துவது அவசியமோ அதன் பக்கம் அவர் கவனம் செலுத்த மாட்டார். மேலும்

எவற்றிலிருந்து தப்பிப்பது அவசியமோ அவற்றிலிருந்து அவர் தப்பிக்க முடியாது. ஆக, இப்படிப்பட்ட சூழ்நிலையில் ஒருவர் முழுமையானவராக மாறுவதற்கு முயற்சி செய்வது தவறு தானே தவிர வேறு என்ன? எல்லா அம்சங்களையும் கவனத்தில் கொள்ளாதவரை வெற்றி கிடைக்க முடியாது. எனவே ஒருவர் சில தீமைகளிலிருந்து கவனமற்றிருப்பார் என்றால், அவர் ஒருபோதும் வெற்றி பெற மட்டார். எனவே முதல் விஷயம் மனிதன் தீமைகளைப் பற்றித் தெரிய வேண்டும்.

## பாவம் செய்வதற்கான இரண்டாவது காரணம்

மனிதனுக்கு பாவங்களைப் பற்றிய அறிவு இருக்கிறது; ஆனால் நேரம் வரும்போது அவருக்கு எந்த அளவுக்கு கிளர்ச்சி ஏற்படுகிறதென்றால் அவருக்கு எதுவும் நினைவில் இருப்பதில்லை. மேலும் அவர் பாவம் செய்து விடுகிறார். உதாரணமாக, ஒருவர் பொய் கூறக் கூடாது என்பதை அறிகிறார். ஆனால் நேரம் வரும்போது பொய் கூறி விடுகிறார். அந்த நேரத்தில் பொய் கூறிவிட்டாலும் பிறகு அதற்காக வருத்தப்படவும் செய்கிறார். அவ்வாறே ஏசுவது தீமையானது என்பதை ஒருவர் அறிகிறார். ஆனால் ஏசி விடுகிறார். ஆயினும் பின்னர் தனது இந்த செயலினால் அழுகிறார்.

ஆக, முதலில் இருந்த தடை, தீமை என்றால் என்ன என்பதே அவருக்குத் தெரியாதிருந்தது ஆகும். இரண்டாவது தடை, தீமைகளைப் பற்றிய அறிவு கிடைத்து விடுகிறது. ஆனால் நேரம் வரும்போது எவ்வளவு ஆவேசம் வருகிறதென்றால் அதனால் அவர் ஒரு நொடிப்பொழுதில் அனைத்தையும் மறந்து விடுகிறார். தீமையைச் செய்து விட்ட பிறகு வருத்தத்துடன் கையைப் பிசைகிறார்.

## பாவத்திற்கான மூன்றாவது காரணம்

இது அல்லாமல் பாவத்திற்கான மூன்றாவது காரணம், இன்ன செயல் தீமையானது என மனிதனுக்கு சில நேரத்தில் தெரிகிறது.

மேலும் அதை செய்யும்போது இது தீமையாகும் என்ற நினைவும் அவனுக்கு இருக்கிறது. ஆயினும் அவன் செய்து விடுகிறான். உதாரணமாக, பொய் கூறுவது தீமை என்பது ஒருவருக்குத் தெரியும். பொய் கூற ஆரம்பிக்கும்போதும் இறைவன் கோபமடைவான் என்பதை அறிகிறார். ஆயினும் அவர் பொய் கூறி விடுகிறார். அவ்வாறே புறங்கூறுதல் பற்றி அது தீமை என்பதை அவர் அறிகிறார். இது இறைவனுக்கு வெறுக்கத்தக்கது என்பதும் அவருக்குத் தெரிகிறது. ஆனாலும் நேரம் வரும்போது அவர் நின்றுவிட முடிவதில்லை. அவருடய நஃப்ஸ் தீமையை செய்யக் கட்டாயப்படுத்தி விடுகிறது.

சுருக்கமாக, தீமைகளிலிருந்து தப்பிப்பதற்கு இந்த மூன்று தடைகள் மனிதனுக்கு ஏற்படுகின்றன. இந்த மூன்று தடைகளையும் நீக்குவது மிகவும் அவசியமானதாகும். அப்போதுதான் மனிதன் அடுத்து காலெடுத்து வைக்க முடியும். அவற்றின் மூலமாக இறைஞானம் கிடைப்பது அவனுக்கு சாத்தியமாகும். அந்தத் தடைகளை நீக்குவதற்கான சிகிச்சையைப் பற்றி விளக்கமாகக் கூறுவதற்கு முன், அடிப்படையான ஒரு சிகிச்சையைப் பற்றி கூற விரும்புகிறேன். அது தீமை என்பதே தெரியாத முதல் வகையான மக்களை விட்டு விட்டு மற்ற இரண்டு வகையான மக்களுக்கான சிகிச்சையாகும். **உலகில் இன்று வரை மிகக் குறைவாகவே இது உணரப்பட்டுள்ளது. இன்னும் கூறுவதென்றால், நபிமார்கள் வலிமார்கள் (இறைநேசர்கள்) நீங்கலாக, வேறு யாரும் புரியவே இல்லை என்று என்னால் கூற முடியும்.** பல தீமைகள் ஷரீஅத் விளக்கியவையாக இருக்கின்றன; ஆனால் அவற்றை செய்பவர் ஷரீஅத் அளவிலான பாவியாகி விடுவதில்லை. மாறாக, அவர் ஏதோ பௌதீகமான நோயுள்ளவராக இருக்கிறார். ஒன்று இது மிக விரிவான கருத்தாகும். மேலும் அல்லாஹ் எனக்கு இது பற்றி சிறப்பான அறிவை வழங்கி இருக்கிறான். இது தொடர்பாக நான்

விரிவாக எழுத வேண்டும் என்பது எனது எண்ணமாகும். **இந்த அறிவு முழுமையடையும்போது, தற்போது தம்மை ஆன்மீக நோயுள்ளவர்களாகக் கருதும் உங்களுள் சிலர் பௌதீகமான மருத்துவரிடம் செல்வீர்கள்.** இப்போது பெரும் பெரும் மருத்துவர்களின் கவனம் இதன் பக்கம் திரும்பிக் கொண்டிருக்கிறது. ஆயினும் அவர்களின் ஆய்வுகள் சிறுவர்களின் கல்வியைப் போன்ற நிலையில்தான் இருக்கிறது. ஆனால் இது தொடர்பாக எனக்கு வழங்கப்பட்டுள்ள அறிவு அல்லாஹ்வின் அருளால் இந்த மக்களின் ஆய்வுகளை விட மிகப் பரந்ததாகும். இது எனக்கு முன்னர் வேறு யாருக்கும் வழங்கப்படாத புதிய அறிவு ஒன்றும் இல்லை. இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு - அடியார்களுக்கு வழங்கப்பட்டு வந்திருக்கிறது. பிறகு திருக்குர்ஆனில் கூறப்பட்டிருக்கிறது; ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு கூறப்பட்டிருக்கிறது. அவர்கள் அதன் அடிப்படையை தமது நூல்களில் குறிப்பிட்டும் இருக்கிறார்கள். ஆனால் பொதுவான மக்கள் இதனைப் புரியவில்லை; இதிலிருந்து பயன்பெறவில்லை என்பது வருத்தத்திற்குரியதாகும். இப்போது இறைவன் எனக்கு பரந்த அளவில் இது பற்றிய ஞானத்தை வழங்கி இருக்கிறான். மேலும் நான் இது தொடர்பான ஆய்வுகளை செய்துள்ளேன்.

அதிலிருந்து, ஷரீஅத் வரையறுக்கும் பாவங்களை, இரண்டு வகையாகப் பிரிக்கலாம். **இன்ன வகையான பாவிகள் பௌதீகமான மருத்துவரிடம் செல்ல வேண்டும்; இன்ன வகையான பாவிகள் சான்றோரிடம் செல்ல வேண்டும் என்ற முடிவுக்கு நான் வந்திருக்கிறேன்.** சில மனிதர்கள் தமது உடல் அளவிலான நோயின் காரணமாக ஷரீஅத் வரையறுக்கும் பாவங்களை செய்கின்றனர் என்பது வரை நான் ஆய்வு செய்து விட்டேன். ஆனால் எந்த வகையான பாவிகள் பௌதீகமான

மருத்துவரிடம் செல்ல வேண்டும்; எந்த வகையான பாவிகள் ஆன்மீக மருத்துவரிடம் செல்ல வேண்டும் என்ற விஷயம் ஆய்வு செய்ய வேண்டியது எஞ்சியிருக்கிறது. இது பற்றியும் தீர்ப்பு கிடைத்து விட்டால் ஆய்வுகள் முழுமையான முறையில் எடுத்து வைக்கப்பட முடியும்.

உண்மை என்னவென்றால், உடலுக்கும் ஆன்மாவுக்கும் எப்படிப்பட்ட ஓர் ஆழமான தொடர்பு இருக்கிறதென்றால், ஒன்றுக்கு ஏற்படும் சிறிதினும் சிறிதான விஷயமும் மற்றொன்றின் மீது பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. **ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இது தொடர்பாக மிக விளக்கமாக எழுதியுள்ளார்கள். அவர்கள் கூறினார்கள்: உடலில் நோய் உருவானால் ஆன்மாவிலும் நோய் உருவாகி விடுகிறது.** கடுமையான வேதனையிலும் துன்பத்திலும் மனிதன் முழு நிம்மதியுடன் துஆ செய்ய முடியாது என்பது வெளிப்படையான விஷயமாகும். இப்போது துஆ செய்ய முடியாமற்போவது என்பது ஆன்மாவின் நோயா இல்லையா? கண்டிப்பாக ஆன்மாவின் நோய்தான். ஆனால் இதற்கான மருத்துவம் பௌதீகமான மருத்துவரிடம்தான் இருக்கிறதே தவிர ஆன்மீக மருத்துவரிடம் அல்ல. ஆக, இவை முன்னவர்கள் எழுதிய அதே விஷயங்கள்தான். மேலும் இப்போது இறைவன் எனக்குப் புரிய வைத்திருக்கிறான். உலக கருவூலங்கள் முடிவுக்கு வராததைப் போன்று – இன்னும் கூறுவதென்றால் நாளுக்கு நாள் அதிகமாக வெளிவந்து கொண்டிருப்பதைப் போன்று ஆன்மீகக் கருவூலங்களும் தத்தமது காலத்தில் வெளியாகிக் கொண்டே இருக்கின்றன. இந்த ஞானத்திற்கான வாசலை இறைவன் இக்காலத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மூலமாகத் திறந்துள்ளான். மேலும் அவர்களுக்குப் பிறகு அவர்களின் கலீஃபாக்கள் இதை மேலும் அதிகம் விரிவு படுத்துவார்கள். இதை மேலும்

விரிவுபடுத்துவதற்கு எனக்கு வாய்ப்பு கிடைக்குமா கிடைக்காதா என்பதை நான் அறிய மாட்டேன். இப்போதும் நான் மருந்து சாப்பிட்டு வந்து சொற்பொழிவாற்ற நின்று கொண்டிருக்கிறேன். ஆனால் நான் அதை கண்டிப்பாகக் கூறுவேன். **பல ஆன்மீக நோய்களுக்கான சிகிச்சை பௌதீக மருத்துவர்களால் குணமாக்க முடியும் என்பதை நீங்கள் கவனத்தில் வையுங்கள்.** ஒருவர் திருக்குர்ஆனை ஓதுகின்றார்; புரிகின்றார். பிறகு அதன்படி செயல்படுவதற்கு முழு முயற்சி செய்கிறார். ஆனால் அப்படி இருந்தும் சில தீமைகள் ஏற்பட்டு விடுகின்றன. அவர் தமக்கு ஏதோ உடல் அளவிலான நோயொன்றும் இல்லையே என சந்தேகித்துப் பார்க்க வேண்டும். அது பொதுவாக நரம்பு பலவீனமாக இருக்கும். அவர் தனது உடல் நலம் பற்றி மருத்துவரிடம் ஆலோசனை பெற வேண்டும். நமது நாட்டில் நரம்பு நோய்க்கு மருத்துவம் செய்வதன் பக்கம் மருத்துவர்களுக்கு மிகக் குறைவான கவனம் இருக்கிறது. **ஆனால் பலமுறை பொதுவான நரம்பு பலவீனத்திற்கான மருத்துவத்தினாலும் மனிதன் தனது ஆன்மீகத்திலும் ஒரு முன்னேற்றத்தை உணர்வார் என நான் நம்புகிறேன். மேலும் பாவங்களிலிருந்து தப்பிப்பதற்கான ஆற்றல் அவரிடம் உருவாகி விடும். மேலும் தன்னிடம் தனது உணர்ச்சிகளை கட்டுப்படுத்தி வைக்க முடிவதற்கான தகுதியை அவர் உணர்வார்.** பாவங்களிலிருந்து தப்பிக்க முடியாமற்போவதற்குக் காரணம் எப்போதும் பௌதீகமான நோயின் விளைவுதான் என்பது கண்டிப்பு அல்ல. மாறாக, பொதுவாக அப்படி இருக்கிறது. மேலும் சில நேரத்தில் தண்டனையாகவும் இந்த நிலைமை மனிதனுக்கு ஏற்படுத்தப்படுகின்றது. மேலும் சில நேரத்தில் பழக்கத்தினாலும் இந்த நிலைமை ஏற்படுகிறது. கடைசியாகக் குறிப்பிட்ட இரண்டு நிலைமைகளில் முதல் நிலையிலுள்ளவர்களுக்கான மருத்துவத்தை ஆன்மீக மருத்துவத்தில் திறமை வாய்ந்தவர்கள் மட்டுமே செய்ய முடியும்.

இரண்டாவது குறிப்பிட்டதற்கும் அவர்களே அல்லது நல்லொழுக்கங்களைப் பற்றி அறிந்த திறமை வாய்ந்தவர்களே செய்ய முடியும். எனவே இதை பொதுவிதியாக எடுத்துக் கொள்ளக் கூடாது. ஒருவர் தீமையிலிருந்து தப்பிப்பதற்கு முயற்சி செய்கிறார். ஆனால் நோயின் காரணமாக தப்பிக்க முடியாது என்றால் பிறகு அவருக்கு ஏன் தண்டனை கிடைக்க வேண்டும் என்று எவரேனும் கேள்வி கேட்பாரென்றால், அதற்குரிய விடை, தண்டனை ஏன் கிடைக்குமென்றால் அவர் ஏன் மருத்துவம் செய்யவில்லை? அது அவருடைய குற்றம்தானே தவிர வேறொருவரின் குற்றமன்று.

## பௌதீக மருத்துவர்களிடம் ஆன்மீக நோய்களுக்கான மருத்துவம்

எனக்கு நேரம் கிடைத்தால் நான் இந்த ஆய்வை நிறைவு செய்து விடுவேன். ஆனால் நிறைவு செய்ய முடியவில்லை என்றால் நீங்கள் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்; **ஆன்மீக நோய்களுக்கான சில மருத்துவம் பௌதீக மருத்துவர்கள் மூலமாக நடைபெற முடியும்.** இதை முன்னிறுத்தியவாறு நீங்கள் உங்கள் முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருங்கள். மேலும் உலகில் ஒரு புதிய புரட்சி ஏற்படுவதற்காகவும் உலகம் இன்னொரு காலடி முன்னே எடுத்து வைப்பதற்காகவும் உங்களின் ஆய்வுகளினால் இதன் பக்கம் கவனத்தை திருப்புகின்றவர்களுக்கும், முயற்சி செய்பவர்களுக்கும் உதவிகள் செய்யுங்கள்.

சில ஆன்மீக நோய்கள் எப்படிப்பட்டவை என்றால் அவற்றிக்கு மருத்துவம் பெறுவதற்காக நாம் இறைஞானம் பெற்றவரிடம் அல்லது இறைநேசரிடம் செல்லக் கூடாது. மாறாக, ஏதாவது மருத்துவரைத் தேட வேண்டும் என்பதை நான் தற்போது எடுத்துக் கூறுகிறேன். ஏனெனில் அந்த மாதிரியான நோய்கள் முதுகுத் தண்டிலுள்ள நரம்புகளின் பலவீனத்தினால்

அல்லது குறைபாட்டினால் அல்லது சில குறிப்பிட்ட நோய்களின் காரணமாக ஏற்படுகின்றன. **உதாரணமாக, (சிலர்) விபச்சாரம் செய்வது சில நேரத்தில் ஒழுக்க அல்லது மார்க்க குற்றமாக இருக்காது. மாறாக, மூளையின் குறிப்பிட்ட நோயின் விளைவாக இருக்கும்.** அவ்வாறே சில கொள்ளை, சில திருட்டு, சில பொய் குறிப்பிட்ட குறைபாடுகளின் விளைவாக இருக்கும். இவற்றிற்கு பௌதீகமான மருத்துவத்தின் மூலமாக எவ்வளவு அருமையான முறையில் மருத்துவம் செய்ய முடியுமோ அந்த அளவுக்கு ஆன்மீக முயற்சிகளால் ஏற்பட முடியாது. ஆனால் இன்னும் எனது ஆய்வு முழுமையடையவில்லை; எனவே நான் இந்தக் கருத்து பற்றி விளக்கமாக எடுத்துக் கூற முடியாது. வேறு ஏதாவது நேரத்திற்காக வைத்துக் கொள்கிறேன். எனக்கு அல்லது உங்களில் யாருக்காவது இதை எடுத்துரைக்கும் நல்வாய்ப்பை அல்லாஹ் வழங்குவானாக.

## பாவங்களிலிருந்து தப்பிப்பதற்கான வழிமுறை

பாவங்களுக்கான மருத்துவம் சில நேரத்தில் பௌதீகமான மருத்துவத்தினாலும் செய்யலாம் என்பதை அடிப்படையாகக் கூறிய பிறகு இப்போது நான், தீமைகளிலிருந்தும், தீயவற்றிலிருந்தும் தப்பிப்பதற்காக மேற்கொள்ள முடிகின்ற திட்டங்களை எடுத்துக் கூறுகிறேன். **பாவங்களிலிருந்து தப்பிப்பதற்கான முதல் திட்டம், மனிதன் தனது முந்தைய கணக்கை சரி செய்ய வேண்டும்.** இறைஞானத்தைப் பெற விரும்புகின்ற பலர் இதை கவனத்தில் கொள்வதில்லை; எனவே அவர்கள் வெற்றி பெற முடிவதில்லை. இறைஞானம் கிடைக்க வேண்டும் என அவர்கள் மிகவும் முயற்சி செய்கின்றனர்.ஆனால் கெட்டுப்போன பொருளில் நல்ல பொருளைப் போடும் வழிமுறையை கையாள்கின்றனர். அவர்களுக்குரிய உதாரணம், கெட்டுப்போன பாலில் நல்ல பாலை ஊற்றுபவர்களைப் போன்றதாகும். கெட்டுப்போன பாலில் நல்ல பாலை பத்து

லிட்டர் அளவுக்கு ஊற்றினாலும் அதுவும் கெட்டுப் போய் விடுகிறது. எனவே மக்கள் செய்யும் முதல் தவறு, அவர்கள் ஆரம்ப நிபந்தனையை முழுமை செய்வதில்லை. ஆனால் மனிதன் தனது முதல் கணக்கை சரி செய்ய வேண்டியது அவசியமாகும். பிறகு முன்னால் காலெடுத்து வைக்க வேண்டும். ஏனெனில் குறிப்பேட்டில் முதல் கணக்கே தவறாக இருந்தால் – அதன் மொத்த தொகை சரியாக இல்லையென்றால் பிறகு அதில் அவர் கூட்டுகின்ற எல்லா தொகையும் தவறாகவே இருக்கும். ஆனால் முதல் கூட்டுத் தொகை சரியாக இருந்தால் பிறகு எல்லா கணக்கும் சரியாகி விடும். எனவே இறைவனின் நெருக்கம், ஞானம் கிடைக்க வேண்டுமென்ற ஆசை கொண்டவர் அவருடைய தவறாகி விட்ட முந்தைய கணக்கை சரியாக்கட்டும். மேலும் அதற்குரிய வழிமுறை தவ்பா (பாவமன்னிப்பு) கேட்பதாகும்.

## இறைஞானத்திற்கான முதல் நிபந்தனை பாவமன்னிப்பு தேடுதல் ஆகும்

இறைஞானத்தைப் பெறுவதற்கு இது மிக அவசியமானதாகும். மேலும் அனைத்திலும் முதல் காலடியாகும். இதைப் பற்றி இது ஒரு சாதாரண விஷயம்தானே; நாங்கள் நாள்தோறும் தவ்பா செய்கிறோம் என எவரும் கூறி விட வேண்டாம். இந்த தவ்பா என்பதற்கு நான் கூற வந்த கருத்து நாள்தோறும் செய்கின்ற அந்த தவ்பா அல்ல. மாறாக, வேறு வகைப்பட்டதாகும். இப்போது அதை நான் விளக்கமாக எடுத்துக் கூறுவேன். இறைஞானத்தைப் பெறுவதற்கான முதல் நிபந்தனை தவ்பா ஆகும். ஆனால் நாவினால் தவ்பா எனக் கூறிவிடுவதால் தவ்பா ஆகி விடாது.

## தவ்பாவிற்கான ஏழு அவசியமான விஷயங்கள் பற்றிய குறிப்பு

தவ்பாவிற்கு ஏழு முக்கியமான விஷயங்கள் இருப்பது

அவசியமாகும். அவை இல்லாத வரை தவ்பா முழுமையான தவ்பாவாக இருக்க முடியாது. அந்த விஷயங்கள் இவையாகும்:

1. மனிதன் தனது முந்தைய பாவங்களுக்காக வெட்க உணர்வை ஏற்படுத்த வேண்டும். அது எவ்வாறு என்றால், அவன் முந்தைய பாவங்களை நினைவு கூர்ந்து அவற்றை முன்னால் நிறுத்தி வியர்த்து விறுவிறுக்கும் அளவுக்கு வெட்கப்பட வேண்டும்.

2. **தவ்பாவிற்கான இரண்டாவது அடி** என்னவென்றால், முந்தைய கடமைகள் எந்த அளவுக்கு எஞ்சியிருக்கின்றனவோ அவற்றில் அவர் நிறைவேற்ற முடிந்தவற்றை நிறைவேற்ற வேண்டும். ஆயினும் நிறைவேற்ற முடியாதவை கட்டாயத்திற்குட்பட்டவையயாகும். உதாரணமாக, தொழுகைகளை தொழாதவராக இருந்தார் என்றால், அவற்றை நிறைவேற்ற முடியாது. அவற்றை நிறைவேற்றும்படி ஷரீஅத்தின் கட்டளையும் இல்லை. அவற்றை நிறைவேற்றவும் முடியாது. ஆயினும் ஏதாவது தொழுகைக்கான நேரத்தில் அவருக்கு தவ்பா செய்யும் எண்ணம் தோன்றினால் அவர் அந்தத் தொழுகையை தொழ வேண்டும். அல்லது தகுதி பெற்றவராக இருந்தும் ஹஜ் செய்யவில்லை என்றால் அவர் இப்போது ஹஜ் செய்யட்டும். ஸகாத் கொடுக்கவில்லை என்றால் ஆயுள் முழுக்க உள்ள காலம் போகட்டும்; அந்த ஆண்டு கொடுக்கட்டும். ஆக, மனிதன் முந்தைய பாவங்களுக்காக வெட்கத்தை உருவாக்க வேண்டும். இரண்டாவது, முந்தைய கடமைகளை நிறைவேற்ற முடியுமென்றால் நிறைவேற்றட்டும்.

3. **மூன்றாவது,** முந்தைய பாவங்களை நீக்கட்டும். நீக்குதல் என்றால் ஒருவரை கொலை செய்தார் என்றால் அவரை உயிரூட்டட்டும் அல்லது விபச்சாரம் செய்தார் என்றால் திருப்பிக் கொடுக்கட்டும் என்பது எனது கருத்து அல்ல. மாறாக, எந்தப் பாவங்களை நீக்க முடியுமோ அதைக் நீக்கட்டும். உதாரணமாக,

ஒருவருடைய எருமை மாட்டை திருடி தன் வீட்டில் கட்டிப் போட்டிருக்கிறார் என்றால் அவருக்கு திருப்பிக் கொடுக்கட்டும். தன்னிடம் வைக்காதிருக்கட்டும்.

**4.நான்காவது நிபந்தனை,** ஒருவருக்கு துன்பமிழைத்திருந்தால் அதை நீக்குவதுடன், அவரிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும். இது ஒரு நுட்பமான விஷயமாகும். அடியார்களின் மீது செய்த பாவங்களுக்கு அந்த அடியார்களிடமே மன்னிப்புக் கேட்க வேண்டும் என இறைவன் நிபந்தனை விதித்துள்ளான். அடியார் மன்னித்து விட்டால் பிறகு அல்லாஹ் அந்த விஷயத்தில் பிடிக்க மாட்டான். எவர்களுக்கு துக்கமிழைக்கப்பட்டுள்ளதோ அவர்களிடமிருந்து திருப்தியைப் பெற முடியுமென்றால் பெற்றுக் கொள்ள வேண்டும். ஆயினும் ஒன்றை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். இறைவன் மிகவும் *சத்தார்* (திரையிட்டு மறைப்பவன்) ஆவான். அவன் மனிதனின் மாபெரும் பாவங்களையும் திரையிட்டு வைத்திருக்கிறான். எனவே மனிதன் தன்மீது திரையிட்டு மறைத்தலை தானும் செய்ய வேண்டும். மேலும் இறைவன் மறைத்து வைத்திருக்கின்ற பாவங்களை மனிதன், தானே வெளிப்படுத்திக் கொண்டு திரியக் கூடாது. உதாரணமாக ஒருவரிமிருந்து திருடியிருந்தால் நான் உங்களிடமிருந்து திருடினேன் என தாமாகவே அவரிடம் சென்று கூறக் கூடாது. அவ்வாறு கூறுவதே பாவமாகும். இந்த வழிமுறைப்படி (பாவத்தை) நீக்கக் கூடாது. மாறாக, ஒருவர் இன்னொருவரை அடித்து விட்டால் அதை நீக்க வேண்டும்; தாமே சென்று அவரிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும். எந்த பாவங்களை அல்லாஹ்வே மறைத்திருக்கிறானோ அவற்றை தாமாகவே வெளிப்படுத்தக் கூடாது.

**5. ஐந்தாவது நிபந்தனை,** எவருக்கு நஷ்டமிழைத்தீர்களோ அவருக்கு முடிந்த அளவுக்கு நன்மை செய்ய வேண்டும். எதுவும்

செய்ய முடியாதென்றால் துஆவாவது செய்ய வேண்டும். இறைநேசர்களும் இந்த வழிமுறையை எழுதியிருக்கிறார்கள். ஒருவருடைய செல்வத்தை தகாத முறையில் விழுங்கியிருந்தால் அதைத் திரும்ப செலுத்துவதற்கு ஆற்றல் இல்லை என்றால் இறைவனிடம், இறைவா! அவருடைய செல்வத்தை என்னால் திருப்பிக் கொடுப்பதற்கான ஆற்றல் எனக்கு இல்லை. எனவே நீ உன்னிடமிருந்து அவருக்கு அதை வழங்கி விடுவாயாக என துஆ செய்ய வேண்டும்.

6. **ஆறாவது,** அவர் தன் உள்ளத்தில் இனி பாவம் செய்யாதிருப்பதற்கான உறுதியான உடன்படிக்கை எடுக்க வேண்டும். இனி எந்தப் பாவமும் செய்ய மாட்டேன் என உறுதியான உறுதிமொழி எடுக்க வேண்டும். அதற்குப் பிறகும் கட்டாயத்திற்குள்ளாகி பாவம் செய்கிறார் என்றால் அது வேறு விஷயம். ஆனால் பாவமன்னிப்புத் தேடும்போது இந்த உறுதிமொழி எடுப்பது அவசியமானதாகும். இரவில் பாவம் செய்து விட்டு பகலில் இனி பாவம் செய்ய மாட்டேன் என்று உறுதிமொழி எடுத்துக் கொள்வது என்பது எனது கருத்து அல்ல. மாறாக, மனிதன் உறுதிமொழி எடுக்கும்போது அவனுடைய நிய்யத் (எண்ணம்) தூயதாகவும் கலப்பற்றதாகவும் இருக்க வேண்டும். மேலும் அவர் தன் சார்பாக அதிலிருந்து தப்பிப்பதற்கு தன்னால் இயன்ற அளவுக்கு முழு முயற்சி செய்ய வேண்டும்.

7. **ஏழாவது விஷயம்** என்னவென்றால், மனிதன் தனது மனதை நன்மையின் பக்கம் ஆர்வமூட்டத் துவங்கி விட வேண்டும். மேலும் தனது மனதில் நல்ல விஷயங்களை நுழைப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். மேலும் மனதை நன்மையான வேலைகளுக்காக ஆயத்தம் செய்ய வேண்டும்.

தவ்பா (பாவமன்னிப்பு) க்கு இந்த ஏழு விஷயங்கள் அவசியமானதாகும். இவை இல்லாதவரை தவ்பா

முழுமையடைய முடியாது. இப்போது நீங்கள் இந்த மாதிரியான தவ்பா செய்கின்றீர்களா அல்லது வேறு ஏதுமா என உங்கள் உள்ளத்திடம் கேட்டுப் பாருங்கள். தவ்பாவைப் பற்றி பொதுவாக மக்கள், எதை முன்னிறுத்தி, எந்த விஷயத்திற்காக செய்து கொண்டிருக்கிறோம் என்பதை அறிவதில்லை. மாறாக ஆங்கிலேயர்கள் Beg your parden (உங்களிடம் மன்னிப்பை வேண்டுகிறேன்) எனக் கூறுவது போன்று கூறுகின்றனர். ஆனால் மன்னிப்பை வேண்டுவதற்கான எந்த எண்ணமும் அவர்களிடம் தோன்றுவதில்லை. அவ்வாறே இவர்களின் உள்ளத்திலிருந்து தன்னையுமறியாமல் (தவ்பா என்ற) இந்த சொல் உடனே வெளி வந்து விடுகிறது. அப்படிப்பட்டவர்களின் தவ்பாவை தவ்பா எனக் கூற முடியாது. மேலும் இப்படிப்பட்ட தவ்பா எந்த பயனையும் தரவும் முடியாது. நான் எடுத்துக் கூறிய இந்த விஷயங்களை முன்னிறுத்தியவாறு ஒவ்வொரு மனிதனும் உண்மையான தவ்பா செய்ய வேண்டும். அப்போதுதான் அவருடைய முந்தைய கணக்கு தூய்மையாக முடியும். ஏனெனில் முந்தைய கணக்கு தூய்மையாகாதவரை அடுத்து தூய்மையாக விஷயம் முன்னேறுவதில்லை; முந்தைய குறைபாடுகள் அதிகமாகிக் கொண்டே இருக்கின்றன. எனவே ஒவ்வொரு மனிதனும் முந்தைய கணக்கு தூய்மையாவதற்காக தவ்பா செய்ய வேண்டும்; உண்மையான தவ்பா செய்ய வேண்டும். தவ்பாவிற்காக நான் எடுத்துக் கூறிய வழிமுறைகளின்படி செயல்படுவதனால் முந்தைய கடன் நீங்கி விடுகிறது. ஓர் அணுவளவும் எஞ்சியிருப்பதில்லை. இதற்குப் பிறகு மனிதன் முயற்சி செய்தால் அவன் இறைஞானம் கொண்டவனாக ஆக முடியும்.

முந்தைய கணக்கு தெளிவாகிவிடும்போது வரக் கூடிய கணக்கு சரியாக தொடர முடியும். ஆனால் இங்கு ஒரு கேள்வி எழலாம். அதாவது, ஒரு பக்கம் முந்தைய கணக்கை தீருங்கள் என

நீங்கள் கூறுகிறீர்கள். மறுபக்கம் இனி நன்மைகளை செய்யுங்கள் எனக் கூறுகிறீர்கள். இந்த அளவு பெரிய சுமையை எவ்வாறு தாங்கிக் கொள்ள முடியும்? இது தொடர்பாக நினைவிற் கொள்ள வேண்டியது என்னவெனில், ஆன்மீக விஷயங்கள் அப்படித்தான் இருக்கின்றன. அவற்றில் வெளிப்படையில் பார்க்கும்போது அதிக சுமை இருப்பதாகத் தெரியும். ஆனால் அந்த சுமையிலேயே அதன் வெற்றிக்கான இரகசியமும் இருக்கிறது.

பாருங்கள். ஹஸ்ரத் ரஸூலே கரீம் (ஸல்) அவர்களிடம் ஓர் ஏழை வந்து, தனது ஏழ்மையைப் பற்றிக் கூறினார். அதற்கு அவர்கள் அவருடைய ஏழ்மைக்கு சிகிச்சையாக திருமணம் செய்யுமாறு கூறினார்கள். அவர் திருமணம் செய்து கொண்டார். பிறகு வந்து, தனது ஏழ்மையைப் பற்றிக் கூறினார். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அவரை இன்னொரு திருமணம் செய்யுமாறு கூறினார்கள். அவர் இன்னொரு திருமணம் செய்து கொண்டார். ஆனால் அவர் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் வந்து, ஒருத்திக்கு உணவளிக்க ஒன்றும் இல்லாதிருந்தது; இப்போது நான் இருவருக்கு எப்படி உணவளிப்பேன் என்றார். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், இன்னொரு திருமணம் செய்து கொள்ளுங்கள் என்றார்கள். அவர் இன்னொரு திருமணம் செய்து கொண்டார். சில நாட்களுக்குப் பிறகு அல்லாஹ்வின் தூதர் அவர்களே! தற்போது மரணத்தின் நிலை வரை வந்து விட்டது என்றார். அதற்கு அவர்கள் இன்னொரு திருமணம் செய்து கொள்ளுங்கள் என்று கூறினார்கள். அவர் அதையும் செய்து விட்டார். சிறிது காலத்திற்குப் பிறகு இப்போது கூறுங்கள். உங்களின் நிலைமை என்ன? என ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கேட்டார்கள். அதற்கு அவர் அல்லாஹ்வின் தூதர் அவர்களே! செல்வச் செழிப்புதான் என்றார். ஆக, இவை ஷரீஅத் அளவிலான முடிச்சுகளாகும். அவற்றை ஒவ்வொருவராலும் புரிய முடியாது. ஆனால் நான் அது தொடர்பாக கொஞ்சம் கூறுகிறேன்.

முதலில் நான் கூறியது போன்று, முந்தைய கணக்கை சரி செய்யாதவரை அடுத்து கணக்கு சரியான முறையில் செல்ல முடியாது. பாத்திரத்திலுள்ள கெட்டுப்போன பொருளை அகற்றாதவரை அந்த பாத்திரத்தில் போடப்படும் பொருள் சரியாக இருக்க முடியாது. எனவே முந்தைய கறைகள், குறைபாடுகளை அகற்றுவது அவசியமானதாகும். அப்போதுதான் அதன் பாதிப்பு தொடராது. இரண்டாவது ஒரு புதிய வேலையை செய்யும்போது ஒரு குறிப்பிட்ட உற்சாகம் பிறக்கிறது. அது கொஞ்ச காலத்திற்குப் பிறகு அப்படியே இருப்பதில்லை. எனவே மனிதன், இனி நான் இந்தப் பாவத்தைச் செய்ய மாட்டேன் என உறுதிமொழி எடுக்கும்போது அவருக்கு கடினத்திலும் கடினமான வேலை வந்தாலும் அதை செய்வதற்கு ஆயத்தமாகி விடுவார். (அதாவது பாவத்திலிருந்து விலகுவது அவருக்கு எவ்வளவு கடினமாக இருந்தாலும் அவர் எப்படியாவது முயற்சி செய்து அதிலிருந்து விலகுவார்.) ஆனால் கொஞ்ச காலத்திற்குப் பிறகு அவரிடம் இந்த தைரியமும், வீரமும் இருக்காது. ஆக, விஷயம் புதுமையாக இருக்கும்போது மனிதனிடம் அதிக உற்சாகம் இருக்கிறது. எனவே தவ்பா செய்யும் நேரம் குறிப்பாக வேலை செய்யும் நேரமாக இருக்கிறது.

**சென்ற கால கணக்கு தூய்மையாக இருப்பதும் வருங்காலத்தில் நன்மை செய்வதற்குஅவசியமான விஷயங்களும்**

(மேற்கூறிய) அப்படிப்பட்ட நேரத்தில் முந்தைய கணக்கை தூய்மையாக்கி விட்டால், அத்துடன் வருங்காலத்தில் வேலை செய்வதற்கான ஆற்றலும் உருவாகி விடுகிறது. ஏனெனில் முந்தைய சுமை நீங்கி விட்டால், மனிதன் எளிதாக முன்னேற்றமடைய முடியும். வருங்காலத்தில் கணக்கை தூய்மையாக வைத்திருப்பதற்கும், நன்மைகளில் முன்னேற்றம் அடைவதற்கும் அவசியமான விஷயங்களை இப்போது நான் கூறுகிறேன்.

எதன் மூலமாக இறைஞானத்தைப் பெற முடியுமோ அந்த இறையச்சத்தைப் பெறுவதற்கு முதலாவதான மற்றும் அவசியமான விஷயம், மனிதன் தன் சிந்தனைகளில் தூய்மையை உருவாக்க வேண்டும். அது பற்றி நான் இப்போது விரிவாக எடுத்துக் கூறுவேன். அதிலிருந்து இறையச்சத்தைப் பெறுவதற்கு அது ஒரு வியப்பிற்குரிய திட்டமாகும் எனத் தெரிய வரும். சிந்தனைகளை தூய்மையாக வைத்திருக்க வேண்டும் என்று நான் கூறுவதன் பொருள், தீய எண்ணமே வரக் கூடாது என்பதல்ல. அப்படி இருப்பது பெரும்பாலாருக்கு சாத்தியமில்லாததாகும். எனவே அசுத்தமான எண்ணம் வருகிறதென்றால் அதை உள்ளத்தில் பரவ விடக் கூடாது. உதாரணமாக, ஒருவருடைய உள்ளத்தில் நான் இலஞ்சம் வாங்க வேண்டும் என்ற எண்ணம் எப்போதாவது தோன்றுகிறதென்றால் அவர் அதைப் பற்றி சிந்திக்கவும், திட்டம் தீட்டவும் ஆரம்பித்து விடக் கூடாது. முடிந்த அளவுக்கு சீக்கிரம் அதை உள்ளத்திலிருந்து வெளியேற்றி விட முயற்சி செய்ய வேண்டும். மேலும் அந்த நேரத்தில் அவர் தவறு செய்து விட்டால் வேறு விஷயம்; ஆனால் இவ்வாறு சிந்தனை தோன்றும்போது அதை அப்போது அதை உள்ளத்திலிருந்து வெளியேற்ற முயற்சி செய்ய வேண்டும். அதனால் அதிக பலன் ஏற்படும். ஏனெனில் எவர் நான் இலஞ்சம் வாங்க வேண்டும்; எங்கிருந்து வாங்குவது? எப்படி வாங்குவது? என்ற சிந்தனையிலேயே இருக்கிறாரோ அவரை விட இலஞ்சம் வாங்கும் சிந்தனையை உள்ளத்திலிருந்து வெளியேற்ற முயற்சி செய்து கொண்டிருக்கின்ற - ஆனால் வாய்ப்பு கிடைக்கும்போது இலஞ்சம் வாங்கி விடுகின்றவர் ஆயிரம் மடங்கு சீர்திருத்தத்திற்கு மிக அருகில் இருக்கிறார். காரணம் என்னவென்றால், எந்த சிந்தனை மனிதனின் உள்ளத்தில் எல்லா நேரமும் இருக்கின்றதோ அதற்கு பெரும் தாக்கம் ஏற்படுகிறது. அது உள்ளத்தில் ஆழமாகப் பதிந்து விடுகிறது. பிறகு அதை

அழிப்பது மிகக் கடினமாகி விடுகிறது. ஆனால் எந்த சிந்தனை வெளியேற்றுவதற்கு முயற்சி செய்யப்படுகிறதோ அது (உள்ளத்தில்) பதிய முடியாது. எனவே தீய எண்ணம் உள்ளத்தில் தோன்றும்போது உடனே அதை வெளியேற்றி விடுங்கள். வேறு ஏதாவதொன்றின் பக்கம் கவனம் செலுத்துங்கள்.

கவனத்தை வெளியேற்றுவதால் எந்தப் பயனும் இல்லை எனக் கருதாதீர்கள். ஒரு சிந்தனை எவ்வளவு அதிக நேரம் உள்ளத்தில் இருக்குமோ அதே அளவுக்கு அது ஆழமாகிக் கொண்டே செல்கிறது. உடனே வெளியேற்றி விட்டால் மனிதன் பல தீய விளைவுகளிலிருந்து தப்பிக்கலாம். **உள்ளத்திலிருந்து தீய எண்ணத்தை வெளியேற்றுவது கஷ்டமான வேலை என எவரும் கருத வேண்டாம்.** மாறாக, அது மிக எளிதானதாகும். அது எப்படி என்றால், ஏதாவது தீய எண்ணம் தோன்றும்போது அந்த நேரத்திலேயே ஏதாவது நல்ல வேலையில் ஈடுபட வேண்டும். எவரிடமாவது விவாதம் செய்ய ஆரம்பித்து விட வேண்டும்; அல்லது எவருடனாவது நீண்ட காலமாக சண்டை இருக்குமென்றால் அதைத் தீர்ப்பதில் ஈடுபட வேண்டும். ஏனெனில் இவ்வாறு அவர் பயங்கரமான பாவத்திலிருந்து தப்பித்து விடுவார். எனவே மனிதன் சந்தர்ப்பத்திற்கேற்ப தீமை செய்வதற்கான கட்டாயத்திற்குள்ளானாலும் அந்த சந்தர்ப்பத்திற்கு முன்னாலோ அல்லது பின்னாலோ அந்த தீமையின் எண்ணத்தை அவர் தன் உள்ளத்தில் வர விடக் கூடாது. மேலும் அதை வெளியேற்றிக் கொண்டே இருக்க வேண்டும். இதன் விளைவாக அவருக்கு தனது உள்ளத்தை கட்டுப்படுத்தும் ஆற்றல் கிடைத்து விடும். மேலும் அவர் (தீமையாகிய) அதை விட்டு விடுவதற்கு ஆயத்தமாகி விடுவார்.

## எண்ணம் என்பதன் உண்மை நிலை

எண்ணத்தை ஒரு சாதாரண விஷயமாகக் கருதாதீர்கள். உலகில் எந்த அளவுக்கு வேலைகள் நடக்கின்றனவோ அவை அனைத்தும் எண்ணத்தின் விளைவுகள்தான். உதாரணமாக, ஒருவர் ஈமான் கொள்ளும்போது முதலில் அவருடைய உள்ளத்தில் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதற்கான எண்ணம்தான் உருவாகிறது. இதே போன்று மனிதன் எவ்வளவு வேலைகள் செய்கின்றானோ அவற்றின் துவக்கம் எண்ணித்திலிருந்தே ஆரம்பமாகிறது. எனவே எண்ணம் என்பது ஒன்றுமே அல்ல எனக் கூறாதீர்கள். எண்ணம் என்பது ஓர் உண்மையும், ஒரு சம்பவமும், மிகப் பெரிய மெய்ப்பொருளுமாகும்.

எண்ணம் என்பது தென்படுவதில்லையே! அதற்கு என்ன உண்மை நிலை இருக்க முடியும் எனக் கூறப்படலாம். நாம் கூறுகிறோம்: பெரிய வேலி மரத்தின் (Fence Tree) விதையில் இவ்வளவு பெரிய மரம் எங்கே தென்படுகிறது? பிறகு மனிதன் எப்படிப் பிறக்கிறான் என்று பாருங்கள். உள்ளத்தில் ஓர் எண்ணம் தோன்றுவதால் உருவாகும் உடலுறவிற்கான ஆசையின் விளைவு இல்லையா? எனவே மனித பிறப்பு என்பது எண்ணத்தின் விளைவின் கீழ் இருக்கும்போது, எண்ணம் என்பதன் உண்மை நிலை பற்றி எவர் கேள்வி எழுப்ப முடியும்? உண்மையில் மனிதன் செய்யும் அனைத்து செயல்களையும் எண்ணங்களின் மூலமாகவே செய்கின்றான். எண்ணத்துடன் மற்ற விஷயங்களும் சேரும்போதுதான் வேலை நடக்கிறது; வெறும் எண்ணம் எதையும் செய்து விட முடியாது; எனவே எண்ணம் என்பது ஒன்றுமற்றதாகும் எனக் கூறுவீர்கள் என்றால், நான் கூறுகிறேன்: அப்படி என்றால் எந்த விதையின் மூலமாக வேலி மரம் (Fence Tree) உருவாகிறதோ அதையும்

ஒன்றுமற்றதாகக் கருத வேண்டும். ஏனெனில் விதை, வேலி மரமாகி விடுவதில்லை. மாறாக, பூமியிலிருந்து அது எந்த பொருளை உறுஞ்சுகிறதோ அது வேலி மரமாக மாறுகிறது. இதே நிலைதான் மற்ற மரங்களுக்குமாகும். விதையுடன் மற்ற பொருள்களும் இணையாதவரை அதன் மூலமாக மரம் ஆக முடியாது என்பதனால் ஒருவர் விதையை ஒன்றுமற்றதாகக் கருதுகிறார் என்றால் அவர் எண்ணத்தையும் ஒன்றுமற்றதாகக் கூற முடியும். ஆனால் விதையைப் பற்றி அது ஒன்றுமற்றது என ஒருவரால் கூற முடியாதென்றால் எண்ணத்தைப் பற்றியும் அது ஒன்று மற்றது என எவராலும் கூற முடியாது.

எனவே எண்ணம் (சிந்தனை) என்பது ஒன்றுமற்றதல்ல என்பதை நன்றாக நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். மாறாக, எண்ணம் எல்லா பொருள்களின் அடிப்படையாகும். ஏனெனில் அதிலிருந்தே அடுத்து விளைவுகள் வெளியாகின்றன. இதன் காரணமாகத்தான் அல்லாஹ் ***வயின் துப்தூ மாஃபீ அன்ஃபுஸிக்கும் யுஹாஸிப்க்கும் பிஹில்லாஹ்*** எனக் கூறுகிறான். அதாவது மக்களே! உங்களின் உள்ளத்தில் எந்த எண்ணம் தோன்றினாலும் அதை நீங்கள் செயலில் கொண்டு வந்தாலும் அல்லது மறைத்து வைத்திருந்தாலும் அல்லாஹ் அதற்கு கணக்கெடுப்பான். *(திருக்குர் ஆன் 2:285).* ஒருவருடைய உள்ளத்தில் ஏதாவது எண்ணம் தோன்றி விட்டாலும் அதைப் பற்றி கேள்வி கணக்கு கேட்கப்படும் என்பது இதன் பொருள் அன்று. ஏனெனில் எந்த விஷயத்தில் மனிதனுடைய ஆற்றல் இல்லையோ அது பற்றி கேள்வி கேட்கப்பட மாட்டாது என்றே அல்லாஹ்வும் கூறுகிறான். ஹஸ்ரத் ரஸூலே கரீம் (ஸல்) அவர்களும் கூறுகிறார்கள். உதாரணமாக, ஒருவர் சென்று கொண்டிருக்கும்போதே எங்காவது செல்வத்தைப் பார்க்கிறார். இதை நான் எடுக்க வேண்டும் என்ற எண்ணம் அவருக்குத் தோன்றுகிறது என்றால் இந்த எண்ணம் தோன்றுவதால் அவர் பிடிக்கப்பட மாட்டார்.

ஆயினும் இந்த எண்ணம் தோன்றியதும் நான் எப்படி இந்த செல்வத்தை எடுப்பது? எந்த நேரத்தில் எடுப்பது என சிந்திக்கத் தொடங்கி விட்டால் அவர் இவ்வாறு சிந்திப்பதும், திட்டமிடுவதும் அவர் பிடிக்கப்படுவதற்குக் காரணமாக இருக்கும்.

ஏனெனில் இந்த வசனம் இறங்கியபோது நபித்தோழர்கள் ஹஸ்ரத் ரஸூலே கரீம் (ஸல்) அவர்களிடம் வந்து, அல்லாஹ்வின் தூதர் அவர்களே! சில நேரங்களில் தீய எண்ணங்கள் உள்ளத்தில் தாமாகவே வந்து விடுகின்றன. அதனால் நாங்கள் நாசமாகி விடுவோமா? எனக் கேட்டனர். அதற்கு அவர்கள், ஒரு தீய எண்ணம் உள்ளத்தில் தோன்றும்போது மனிதன் அதன்படி செய்யவில்லை என்றால் அதுவே நன்மையாகி விடுகிறது எனக் கூறினார்கள். *(புகாரி கிதாபுர் ரிகாக். பாபு மன் ஹம்ம பிஹஸனத்தின் அவ் ஸய்யிஅத்தின்)*. எனவே இந்த வசனத்தின் பொருள் என்னவென்றால், எந்த விஷயம் உள்ளத்தில் குடிகொண்டு விடுகிறதோ எதைப்பற்றி மனிதன் சிந்தனை செய்ய ஆரம்பித்து விடுகிறானோ அதற்காக திட்டமிடத் தொடங்கி விடுகிறானோ அது பற்றி கேள்வி கணக்கு இருக்கும். மற்றபடி, நான் திருடுவேன் என்ற எண்ணம் ஒருவருக்கு உருவாகி அவர் அதை உடனே உள்ளத்திலிருந்து நீக்கி விட்டால் அவர் ஒரு நன்மையை செய்கிறார். அவ்வாறே அவருக்கு ஒருவரை கொலை செய்ய வேண்டும் என்ற எண்ணம் தோன்றி – ஆனால் அவர் அதை வெளியேற்றி விட்டால் அவர் நன்மை செய்பவராகக் கருதப்படுவார். அவர் அந்த எண்ணத்தில் நிலைபெற்றிருக்கும்போதுதான் அவர் தண்டனைக்குரியவர் ஆகிறார்.

**செயல்களை சீர்திருத்துவதற்கான மிகப் பெரிய ஏணிப்படி**

எனவே இந்த நுட்பமான கருத்தை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். இது செயல்களை சீர்திருத்துவதற்கு மிகப் பெரிய

ஏணிப்படியாகும். **ஒரு தீய எண்ணம் தோன்றுதல் என்பது உங்களுடைய அதிகாரத்திற்குட்பட்ட விஷயமல்ல என்பது சரிதான். ஆனால் அதை வெளியேற்றுவது உங்களுடைய அதிகாரத்திற்குட்பட்டதாகும்.** எனவே உடனே (உள்ளத்திலிருந்து அதை) வெளியேற்றி விடுங்கள்.

**விந்தையான கதை**

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஒரு கதையைக் கூறி வந்தார்கள். ஒருவர் தோட்டத்திலிருந்து திராட்சைப்பழக் கூடையை எடுத்துக் கொண்டு சென்று கொண்டிருந்தார். அதற்குள் தோட்டக்காரர் வந்து விட்டார். அவர் என்னுடைய தோட்டத்திலிருந்து திராட்சைப் பழங்களை ஏன் எடுத்துச் செல்கின்றீர் எனக் கேட்டார். அதற்கு அவர், முதலில் எனது விஷயத்தைக் கேளுங்கள்; பிறகு என்ன விரும்புகிறீர்களோ செய்து கொள்ளுங்கள் என்றார். என்ன விஷயம் கூறுவீராக என தோட்டக்காரர் கேட்டார். என்னை ஒரு புயல் காற்று தூக்கி இந்தத் தோட்டத்தில் கொண்டு போட்டு விட்டது. தற்செயலாக நான் வந்து விழுந்த இடத்தில் திராட்சை மரங்கள் இருந்தன. அப்படிப்பட்ட நேரத்தில் மனிதன் தன் உயிரைக் காப்பாற்ற முயற்சி செய்கிறான் என்பதை தாங்கள் அறிவீர்கள். நான் இங்குமங்கும் கைகளை அசைக்கத் துவங்கினேன். அப்போது திராட்சைப் பழக் கொடிகளிலிருந்து பழங்கள் விழுந்து விழுந்து அங்கேயே கிடந்த ஒரு கூடையில் ஒன்று சேரத் தொடங்கின. இப்போது கூறுங்கள். இதில் எனது குற்றம் என்ன? என்றார். அதற்கு தோட்டக்காரர் அது என்ன நடந்ததோ சரி. ஆனால் கூடையை உனது தலையில் ஏற்றிக் கொண்டு உனது வீட்டிற்கு செல்லும்படி உன்னிடம் யார் கூறினார் எனக் கேட்டார். அதற்கு அவர் நானும் அதைப் பற்றித்தான், இதை யார் என்னிடம் சொன்னது என யோசித்துக் கொண்டே வந்து கொண்டிருக்கிறேன் என்றார்.

இவ்வாறே தீய எண்ணத்திற்கு தனது உள்ளத்தில் இடமளித்து அதில் நிலைத்து நிற்பவரின் நிலையுமாகும். ஏனெனில் அவர் தீய எண்ணத்தை உள்ளத்தில் கொண்டு வருவதில் குற்றவாளி இல்லை. ஆனால் அவர் அதை உள்ளத்தில் நிலைபெறச் செய்வதில் குற்றவாளியாவார். சந்தேகமின்றி, தீய எண்ணம் அவருடைய உள்ளத்தில் ஏன் தோன்றியது என அவர் கேட்கப்பட மாட்டார். ஆனால் அவர் அந்த தீய எண்ணத்தை உள்ளத்தில் ஏன் வைத்தார்? என அவர் கண்டிப்பாகக் கேட்கப்படுவார். மேலும் அவருக்கு தண்டனை வழங்கப்படும். அவர் ஏன் அந்த எண்ணத்தை உள்ளத்தில் கொண்டு வந்தார் என்பதற்காக அல்ல; மாறாக, அவர் அதை உள்ளத்தில் ஏன் வைத்தார் என்பதற்காக தண்டனை வழங்கப்படும். அது மனிதனுடைய அதிகாரத்திற்குட்பட்ட விஷயமாகும். அவன் தீய எண்ணங்களை உள்ளத்திலிருந்து வெளியேற்றுவது அவனுடைய அதிகாரத்திற்கு அப்பாற்பட்ட விஷயமன்று.

## உள்ளத்தைத் தூய்மைப்படுத்துவதற்கான முதல் வழிமுறை

சுருக்கமாக, உள்ளத்தைத் தூய்மைப்படுத்துவதற்கு முதல் விஷயம், தீய மற்றும் அசுத்தமான சிந்தனைகளை உள்ளத்திலிருந்து அகற்றிக் கொண்டிருக்க வேண்டும்.

## இரண்டாவது வழிமுறை

தூய்மையாக்குவதற்கு - இன்னும் கூறுவதென்றால், ஒவ்வொரு வேலையும் வெற்றி பெறுவதற்கு இரண்டாவது வழிமுறையாக திருக்குர்ஆனில் இவ்வாறு கூறப்பட்டிருக்கிறது: ***வலய்ஸல் பிர்ரு பிஅன் தஃதுல் புயூத்த மின் ழுஹூரிஹா . வலாகின்னல் பிர்ர மனித்தகா. வஃதுல் புயூத்த மின் அப்வாபிஹா. வத்தக்குல்லாஹ லஅல்லக்கும் துஃப்லிஹூன்.*** அதாவது நீங்கள் கஷ்டத்தை உருவாக்கிக் கொள்வதும், ஏறிக்குதித்து வீட்டிற்குள் நுழைவதும் நன்மை அல்ல. மாறாக, நன்மை என்பது

இறையச்சத்தினால் உருவாகிறது. எனவே எந்த வேலைகளைச் செய்வதற்கென்று என்ன வழிமுறைகள் நியமிக்கப்பட்டுள்ளனவோ அவற்றை மேற்கொள்ளுங்கள். மேலும் நீங்கள் வெற்றி பெறுவதற்காக இறையச்சத்தை மேற்கொள்ளுங்கள். (2:190). இந்த வசனத்தில், வெற்றிக்கு, அந்த நோக்கத்திற்காக அல்லாஹ் நியமித்துள்ள சரியான வழிமுறைகளை பயன்படுத்துவது மிகவும் அவசியமானதாகும் எனக் கூறப்பட்டிருக்கிறது. **இறைஞானத்தைப் பெறுவதற்கான சரியான வழிமுறை உள்ளத்தைத் தூய்மைப்படுத்துவதாகும்.** மேலும் முந்தைய தீமைகளிலிருந்து விலகி, பிறகு நன்மைகளை மேற்கொள்ளாதவரை உள்ளம் தூய்மையடைய முடியாது. எனவே இறைவன் வெறுக்கும் செயல்களைப் பற்றியும், அவன் விரும்பும் செயல்களைப் பற்றியும் முழுமையான அறிவைப் பெறுவது மிக அவசியமானதாகும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தாம் ஓதி வந்த திருக்குர்ஆன் பிரதியில் கட்டளைகள், தடைகள் பற்றிய அட்டவணையை உருவாக்கி வைத்திருந்தார்கள். இதிலிருந்து அவர்களுக்கு அல்லாஹ் கூறிய கட்டளைகளைப் பேணுவதிலும் அவன் தடுத்த விஷயங்களிலிருந்து விலகியிருப்பதிலும் எந்த அளவுக்கு அக்கறை இருந்தது எனத் தெரிய முடிகிறது. எனவே தூய்மையடைவதற்கு இந்த விஷயங்களைப் பற்றி அறிந்திருப்பது மிக அவசியமானதாகும். மேலும் இவை தெரிய வந்து விட்டால் பிறகு மிக எளிதாகி விடுகிறது. ஏனெனில் மனிதன் அறியாமை எனும் இருளிலிருந்து வெளியேறி அறிவுடைமை எனும் ஒளியின் பக்கம் வந்து விடுகிறான். கட்டளைகள், தடைகள் பற்றிய அறிவு கிடைத்து விட்டால் பிறகு அதன்படி செயல்பட முயற்சி செய்ய வேண்டும். ஏனெனில் சரியான வழிமுறைகள் தெரிந்து விட்ட பிறகு அவற்றின்படி முயற்சி செய்வதே வெற்றிக்கான ஒரே

இரகசியமாகும். ஆனால் செயல்படுவதில் ஏதாவது தவறு ஏற்பட்டு விட்டால் அல்லது முழுமையாக செயல்பட முடியாவிட்டாலும் முயற்சியை கைவிடக் கூடாது. மாறாக, முயற்சியை தொடர வேண்டும். அது அவருடைய வருங்கால முன்னேற்றத்திற்குக் காரணமாக அமையும். ஆயினும் எந்த செயல்கள் இன்றி ஈமான் முழுமையடையவே முடியாதோ அவற்றில் எதையும் விட்டு விடக் கூடாது. எல்லாவற்றின்படியும் செயல்படுவதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

## இறைபண்புகளைப் பெறுவதற்கான மூன்றாவது வழிமுறை

தன்னிடத்தில் இறைபண்புகளை வெளிப்பட வைப்பதற்கான மூன்றாவது வழிமுறை, எந்த செயல்களை செய்வதனால் அல்லது செய்யாமல் இருப்பதனால் தூய்மை ஏற்பட முடியுமோ அவற்றை மனிதன் உள்ளத்தில் கொண்டு வர வேண்டும். மேலும் அவற்றை மீண்டும் மீண்டும் நினைவூட்டிக் கொண்டேயிருக்க வேண்டும். ஏனெனில் எந்த விஷயங்கள் மீண்டும் மீண்டும் நினைவூட்டப்படுகின்றனவோ அவை உள்ளத்தில் ஆழப்பதிந்து விடுகின்றன. நான் இது குறித்து உதாரணம் காட்டி விளக்குகிறேன். உதாரணமாக, ஒருவருக்கு சீக்கிரம் கோபம் வந்து விடுகிறது. அவர் ஓய்வு நேரத்தில் இருக்கும்போது, எனக்கு வெகு சீக்கிரம் கோபம் வந்து விடுகிறது; மேலும் இது தீயசெயலாகும்; எனது ஆன்மீக முன்னேற்றத்திற்கு இது தடையாகும் என சிந்திக்க வேண்டும். எனவே இனி நான் ஒருபோதும் அப்படிப்பட்ட செயலைச் செய்யவே மாட்டேன் என உறுதிமொழி எடுக்க வேண்டும். மேலும் உள்ளத்தில் பதிந்து விடும் அளவுக்கு - அந்த நோயிலிருந்து தப்பித்து விடும் அளவுக்கு அவர் அந்த விஷயத்தை மீண்டும் மீண்டும் உள்ளத்தில் கொண்டு வர வேண்டும்.

நான் இந்த வேலையைச் செய்ய மாட்டேன் அல்லது

செய்வேன் என்ற இந்த விஷயம் அவருக்கு நினைவில் இல்லை என்றால், அவ்வாறு அவர் வெற்றி பெற முடியவில்லை என்றால், அவருக்கு இன்னொரு வழிமுறை இருக்கிறது. அவர் அதை பயன்படுத்த வேண்டும். அது என்னவென்றால், ஒரு செயலை நீண்ட காலம் செய்வது என்பதால் மனிதனுடைய இயல்பு அச்சமடைந்து விடுகிறது. எனவே நீண்ட காலத்திற்காக உறுதிமொழி எடுப்பதற்கு பதிலாக இந்த (நல்ல) செயலை நான் இன்று கண்டிப்பாக செய்வேன்; அல்லது இந்த (தீய) செயலை நான் இன்று முற்றிலும் செய்ய மாட்டேன் என்று உறுதிமொழி எடுக்க வேண்டும். அந்த நாளில் அவருடைய உள்ளம் அதிலிருந்து விலகி இருக்கும். ஏனெனில் நான் எனது விஷயத்தில் ஒரு நாள் கூட நிலைத்திருக்க முடியாதா என அவருடைய உள்ளம் அவரை பழித்துரைக்கும். அடுத்த நாளுக்கு முன்னர் அவர் இன்னொரு நாளுக்காக உறுதிமொழி எடுக்க வேண்டும். இவ்வாறு அவர் உள்ளத்தை வெற்றி கொள்ளும் வரை உறுதிமொழி எடுத்துக் கொண்டே செல்ல வேண்டும்.

எனவே ஒரு தீமையான பழக்கத்தை விட்டு விடுவதற்கு இவ்வாறு தனது உள்ளத்தை எதிர்த்துப் போட்டி போட வேண்டும். அவ்வாறல்லாமல் ஒரேயடியாக சுமையை சுமத்தி விடக் கூடாது. இவ்வாறு வெற்றி கிடைப்பதென்பது கடினமாகி விடுகிறது.கொஞ்சம் கொஞ்சமாக முன்னேறுவது, தொடர்ந்து செய்து கொண்டிருப்பது ஆகியவற்றால்தான் எளிதாக வெற்றி கிடைக்க முடியும். எனவே ஒருமுறை உங்கள் உள்ளத்தால் ஒரு நல்ல செயலை செய்ய வையுங்கள்; பிறகு அடுத்த நேரம் அதிலேயே அதை ஈடுபடுத்துங்கள். இவ்வாறு பலமுறை செய்யுங்கள். இவ்விதமாக அதற்கு பழக்கம் ஏற்பட்டு விடும்.

**மனிதனுடைய உள்ளம் உண்மையில் ஒரு குழந்தையைப் போன்று இருக்கிறது.** எனவே அதனுடன் குழந்தைகளுடன் நடந்து கொள்வது போன்று நடந்து கொள்ள வேண்டும்.

பள்ளிக்கூடங்களில் குழந்தைகளுக்கு பாடம் புகட்டுவதற்காக மேற்கொள்ளப்படும் அதே வழிமுறையை உள்ளத்திற்கு ஆன்மீக போதனை வழங்கும்போதும் மேற்கொள்ள வேண்டும். அதாவது அவர்களுக்கு முதலில் சின்ன பாடங்கள் கற்றுக் கொடுக்கப்படுகின்றன. பிறகு படிப்படியாக அதிகமாக்கிக் கொண்டே செல்கின்றனர்.

மீண்டும் மீண்டும் எடுத்துரைப்பதும் தூய்மையைப் பெறுவதற்கான வழிமுறையில் ஒன்றாகும். இதுவும் திருக்குர்ஆனிலிருந்து நிரூபணமாகின்றது. நம்பிக்கை கொண்டவர்கள் இறையச்சத்தை மேற்கொண்டு நற்செயல்களை செய்யும் நிலையில் அவர்கள் உண்பவற்றில் அவர்கள் மீது எந்தக் குற்றமுமில்லை. அதாவது அவர்கள் முதலில் எத்தகைய இறையச்சத்தை உருவாக்க வேண்டுமென்றால், அதன் விளைவாக இறைநம்பிக்கையும், நற்செயல்களும் உருவாக வேண்டும். மீண்டும் இறையச்சத்தை மேற்கொள்ள வேண்டும். மீண்டும் ஈமான் கொள்ள வேண்டும். பிறகு இறையச்சத்தை மேற்கொள்ள வேண்டும். பிறகு நன்மை செய்பவர்களாக மாறி விட வேண்டும். மேலும் அல்லாஹ் நன்மை செய்பவர்களை நேசிக்கிறான். ***(காண்க: திருக்குர் ஆன் 5:94)***

இந்த வசனத்தில் அல்லாஹ் மூன்று முறை இறையச்சத்தை மேற்கொள்ளுமாறு கட்டளையிட்டுள்ளான். மேலும் மூன்று முறையுமே இறையச்சத்தின் தனித்தனி விளைவுகளையும் குறிப்பிட்டுள்ளான். முதல் இறையச்சத்துடன், அதை மேற்கொள்வதால் ஈமான், நற்செயல்கள் கிடைக்க வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது. இந்த நற்செயல்கள் என்பதன் கருத்து, எல்லா நிபந்தனைகளுடனும் செய்யும் அதே நற்செயல்கள்தான். மேலும் ஈமான் தூய்மையானதாக இருக்க வேண்டும். பிறகு, இறையச்சத்தை மேற்கொள்ளுங்கள் என்று கூறுகிறான். அத்துடன் ***ஆமனூ*** (நம்பிக்கை கொள்ளுங்கள்) என்பதை

மட்டுமே வைத்திருக்கிறான்.வெளிப்படையில் பார்க்கும்போது இது ஆட்சேபனைக்குரியதாக உள்ளது. இது வியப்பிற்குரிய விஷயமாக உள்ளதே! முதலில், இறையச்சத்தின் விளைவாக, ஈமானையும், நற்செயல்களையும் கூறியிருந்தான். இரண்டாம் முறை இறையச்சத்தைப் பற்றிக் கூறும்போது ஈமானையே அதன் விளைவு எனக் கூறுகின்றான். இதற்குரிய விடையை நன்றாக நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். ஒரு ஈமான் எப்படிப்பட்டதாக இருக்கிறதென்றால் அதன் கட்டாய விளைவு நற்செயல்களாக இருப்பதில்லை. மேலும் இன்னொரு ஈமான் எப்படிப்பட்டதாக இருக்கிறதென்றால் அதன் கட்டாய விளைவு நற்செயல்களாக இருக்கின்றது.

முதலில் கூறியது எப்படிப்பட்ட ஈமான் என்றால் அதன் கட்டாய விளைவு நற்செயல்களாக இருப்பதில்லை. அதனுடன் நற்செயல்களும் கண்டிப்பாக இணைந்திருக்கும் அளவுக்கு அது உறுதியானதாக இருப்பதில்லை. எனவே அத்துடன் (நற்செயல் என்ற) அதைப் பற்றியும் கட்டயையிட்டு விட்டான்.

ஆனால் இரண்டாம் முறையாக எந்த ஈமானைப் பற்றி கூறப்பட்டுள்ளதோ அது முன்னரை விட உறுதிமிக்கதாகும். அதன் காரணமாக நற்செயல்கள் அத்துடன் நடந்து கொண்டே செல்கின்றன. எனவே அ(ந்)த (ஈமா)னுடன் நற்செயல்களைப் பற்றிக் குறிப்பிடவில்லை.

அடுத்து மூன்றாம் முறையாகக் கூறுகிறான்: பிறகு இறையச்சத்தை மேற்கொள்ளுங்கள்; அதன் மூலமாக நன்மை செய்பவர்கள் ஆகிவிடுங்கள். இதில் சுட்டிக்காட்டி இருப்பது என்னவென்றால், அடிக்கடி செயல்படுவதால் மனிதனுடைய ஈமானில் சிறப்பான முன்னேற்றம் கிடைக்கிறது. மேலும் அவன் ஒவ்வொரு முறையும் முன்னால் காலெடுத்து வைக்கிறான்.

இந்த வசனத்தில் ***இஹ்ஸான்*** என்ற சொல் உள்ளது. இதன் பொருளை ஹஸ்ரத் ரஸூலே கரீம் (ஸல்) அவர்கள்

குறிப்பிட்டுள்ளார்கள். அது என்னவென்றால் ***இஹ்ஸான்*** என்பது, அல்லாஹ்வை நீர் பார்த்துக் கொண்டிருக்கிறீர் என்ற அளவுக்கு இறைவணக்கம் செய்ய வேண்டும்; இந்த நிலை உருவாகவில்லை என்றால், பிறகு அல்லாஹ் உம்மைப் பார்த்துக் கொண்டிருக்கிறான் என்ற நம்பிக்கையாவது குறைந்த பட்சம் உமக்கு இருக்க வேண்டும்.*(புகாரி கிதாபுல் ஈமான்).* மேலும் இதற்குப் பெயர்தான் இறைஞானம்.

ஆக, இந்த வசனத்திலிருந்து ஒரு செயலை தொடர்ந்து செய்வது எவ்வளவு அவசியமானது; எவ்வாறு அது ஒவ்வொரு முறையும் முன்னரை விட பெரிய விளைவை ஏற்படுத்துகிறது எனத் தெரிகிறது. ஏனெனில் அல்லாஹ் கூறுகிறான்: ஒரு மனிதன் இறையச்சத்தை மேற்கொள்ளும்போது அவருக்கு ஈமான் கிடைக்கிறது. மேலும் நற்செயலுக்கான நல்வாய்ப்பு கிடைக்கிறது. பிறகு அவர் மீண்டும் இறையச்சத்தை மேற்கொள்ளும்போது அவருடைய ஈமானில் மேலும் முன்னேற்றம் ஏற்படுகிறது. நற்செயல்கள் அவருடைய ஈமானின் ஓர் அங்கமாக ஆகிவிடும் அளவுக்கு அவர் உறுதியாகி விடுகிறார். மேலும் அவரிடமிருந்து தானாகவே நன்மைகள் வெளிவரத் தொடங்கி விடுகின்றன. பிறகு அவர் இறையச்சத்தை மேற்கொள்ளும்போது மேலும் அதிக முன்னேற்றம் கிடைக்கிறது. மேலும் ***முஹ்ஸின்*** (நன்மை செய்பவர்) என்ற அந்தஸ்து அவருக்குக் கிடைத்து விடுகிறது. அதன் விளக்கமாக அல்லாஹ்வே இவ்வாறு கூறிவிட்டான்: அவர் இறைவனுடைய அன்பிற்குரியவராக மாறி விடுகிறார். மேலும் அன்பிற்குரியவனிடம் யார் தன்னை மறைப்பார்? அவர் இறைவனைக் கண்டு கொள்கிறார் என ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தெளிவான சொற்களில் கூறி விட்டார்கள். **மேலும் இதன் பெயரே இர்ஃபானே இலாஹி எனும் இறைஞானமாகும்.**

## நான்காவது விஷயம்

செயல்களில் நிரந்தரத்தை மேற்கொள்ள வேண்டும். ஏனெனில் ''மரணம் ஏற்படும் வரை அதாவது நீங்கள் இந்த உலகத்திலிருந்து பிரிக்கப்படும் வரை உமது இறைவனை வணங்குவீராக" என அல்லாஹ் கூறுகிறான். *(திருக்குர்ஆன் 15:100).* எங்களுக்கு இறைவன் கிடைத்து விட்டான்; எனவே எதுவரை கப்பலிலேயே அமர்ந்து கொண்டு அவனைத் தேடிக் கொண்டிருப்பது எனக் கூறுபவர்கள் பொய்யர்கள் ஆவர். தொழுகை, நோன்பு, ஹஜ், ஸகாத் ஆகியவை இறைவன் வரை சென்றடைய வைக்கும் கப்பலாகும். எனவே இறைவன் வரை சென்றடைந்த பிறகும் கப்பலிலேயே அமர்ந்திருப்பது அறிவீனம் என அவர்கள் கூறுகின்றனர். செயல்கள் இறைவன் வரை சென்றடைய வைக்கும் கப்பலாகும் என்பது ஏமாற்றுகின்ற, பொய்யான சில சூஃபிகளின் பேச்சுகளாகும். நாம் எப்போதாவது ஒரு நேரத்தில் இறைவனை அடைவோமா மாட்டோமா? அவ்வாறு அடைந்து விடும்போது அதன் தேவை எஞ்சியிருப்பதில்லை என அவர்கள் கூறுகின்றனர். ஆனால் இது முற்றிலும் தவறான விஷயமாகும்; பொய்யாகும். காரணம் என்னவென்றால், எந்த இறைவனை நாம் அடையவிருக்கின்றோமோ அவன் எல்லையற்றவன். (எனவே அவனை அடைவதற்கான நமது செயல்களும் எல்லைக்குட்பட்டவையாக இருக்க முடியாது.) மேலும் நாம், ஒருபோதும் முடிவுறாத ஒரு நதியில் சென்று கொண்டிருக்கிறோம். நமது உதாரணம், நதியின் ஓர் எல்லையிலிருந்து அதன் அடுத்த எல்லை வரை செல்ல நோக்கம் கொண்டிருக்கும் ஒரு மனிதரைப் போன்றதாகும்.நதியின் ஓர் ஓரத்திலிருந்து இன்னொரு ஓரம் வரை செல்பவரைப் போன்றதல்ல.

எனவே இறைவன் எல்லைக்குட்பட்டவன் அல்லன். எனவே

அவன் வரை சென்றடைவதற்கான நமது செயல்களும் எல்லைக்குட்பட்டவையாக இருக்கக் கூடாது. அவன் எல்லைக்குட்பட்டவனாக இருந்தால் நமது தொழுகை, நமது நோன்பு, நமது ஸகாத், நமது ஹஜ் ஆகிய அனைத்தும் எல்லைக்குட்பட்டவையாக இருந்திருக்கும். ஆனால் இறைவன் எல்லைக்குட்பட்டவனாக இல்லாதிருக்கும்போது செயல்கள் எப்படி எல்லைக்குட்பட்டவையாக இருக்க முடியும்? நமக்கு நமது செயல்களின் காரணமாக நேற்று எவ்வளவு நற்கூலி கிடைத்ததோ அதை விட அதிகமாக இன்று நற்கூலி கிடைக்கும். நாளை அதை விட அதிகமாக நற்கூலி கிடைக்கும். இவ்வாறு ஒவ்வொரு நாளும் இதில் முன்னேற்றம் கிடைத்துக் கொண்டே இருக்கும்.

எனவே இறைவணக்கங்களை நிரந்தமாக கடைபிடிக்க வேண்டும். கொஞ்ச காலம் செய்து விட்டு, பிறகு விட்டு விடுவது என்று இருக்கக் கூடாது. அவ்வாறு செய்வதால் முன்னர் கிடைத்ததற்கும் எந்த பயனும் ஏற்படாது. அல்லாஹ் கூறுகின்றான்: தான் நூற்ற நூல் வலுவடைந்த பின்னர் அதை வெட்டி துண்டு துண்டாக்கிய பெண்ணைப் போன்று நீங்கள் ஆகி விடாதீர்கள். *(திருக்குர் ஆன் 16:93)*

## ஐந்தாவது விஷயம்

பல விஷயங்களை மனிதன் ஆசிரியர் இன்றி புரிய முடியாது. அவருக்கு அதைப் புரிய வைக்கக்கூடிய ஓர் ஆசிரியர் கிடைக்க வேண்டும். இறைவனும் (இதையே) கூறுகிறான்: நம்பிக்கை கொண்டவர்களே! அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். மேலும் உண்மையாளர்களுடன் இருங்கள். *(திருக்குர் ஆன் 9:119)* உறுதித்தன்மை கிடைப்பதற்காக அவர்களின் கூட்டங்களில் இருங்கள். ஆக, முழுமையான ஆசிரியரால் மனிதன் பயன்பெறுவது மிகவும் அவசியமானதாகும். முஜத்திதுகள் (மார்க்க சீர்திருத்தவாதிகள்),வலிமார்கள்,(இறைநேசர்கள்)

முழுமையான இறைநம்பிக்கையாளர்கள் எல்லா காலத்திலும் தொடர்ந்து இருந்து வருகின்றனர். மேலும் அவர்கள் இல்லாமற் போய்விடும்போது இறைவன் ஒரு நபியை அனுப்புகிறான். எனவே அவரிடமிருந்து பயன்பெற வேண்டும். ஏனெனில் ஒரு மாணவர் தானாகவே நூல்களைப் படிக்க முடியாது; அவருக்கு ஆசிரியரின் தேவை இருக்கிறது. அவ்வாறே ஆன்மீக படித்தரங்களும் தானாகவே கிடைத்து விட முடியாது. அவற்றிற்கும் ஆசிரியர் தேவைப்படுகிறார். எனவே இறைவன் திருக்குர்ஆனில் கூறுகிறான்: ***வஅதல்லாஹுல்லதீன ஆமனூ மின்கும் வஅமிலுஸ் ஸாலிஹாத்தி லயஸ்தக்லிஃபன்னஹும் ஃபில் அர்ழி கமஸ்தக்லஃபல்லதீன மின் கப்லிஹிம்*** *(24:56).* அதாவது முஹம்மதிய்ய உம்மத்தில் எப்போதும் கலீஃபாக்களை அனுப்பிக் கொண்டிருப்போம். அடுத்து அவர்கள் எப்படி இருப்பார்கள் எனக் கூறவில்லை. மாறாக முந்தைய சமுதாயங்களில் தோன்றியது போன்று இந்த உம்மத்திலும் தோன்றுவார்கள். முன்னர் அரசியல் அளவிலும் இருந்தனர். அரசியல் அல்லாமலும் இருந்தனர். அவ்வாறே இந்த உம்மத்திலும் இருப்பார்கள். ஏன்? ஏனெனில் ***வலயுமக்கினன்ன லஹும் தீனஹுமுல்ல திர்தழா லஹும். வலயுபத்திலன்னஹும் மின் பஅதி கவ்ஃபிஹிம் அம்னா*** *(24:56).* அவர்கள் மூலமாக மார்க்கம் நிலை பெற வேண்டும். மேலும் அவர்கள் மக்களை சீர்திருத்த வேண்டும். மேலும் அவர்கள் மக்களுக்கு ஆசிரியர்களாக இருக்க வேண்டும்.

ஆக, இறைவனும் ஆசிரியர் இருப்பதை அவசியமானதாகக் குறிப்பிடுகிறான். இதிலிருந்து அவர் இல்லாமல் வேலை நடக்காது எனத் தெரிகிறது. மனிதன் ஆசிரியர் இல்லாமல் பல ஆண்டுகளாக தெரிந்து கொள்ளும் பல விஷயங்களை அவன் ஆசிரியர் மூலமாக சில மணித்துளிகளில் கற்றுக் கொள்ளலாம். கல்வியைக் கற்றுக் கொள்ள ஆரம்பிக்கும்போதே மாணவன் அகராதிகளைப் புரட்ட ஆரம்பித்தால் - அவற்றின் மூலமாக

கல்வியைக் கற்றுக் கொள்ள விரும்பினால் ஆசிரியர் மூலமாக சில நாட்களில் கற்றும் கொள்ளும் விஷயங்களை பல ஆண்டுகளாக அவர் தனியாகப் படித்தாலும் அதைக் கற்றுக் கொள்ள முடியாது. இங்கேயே (இந்த மாநாட்டிலேயே) பார்த்துக் கொள்ளுங்கள். இப்போது நான் சொற்பொழிவாற்றிக் கொண்டிருக்கிறேன். இவற்றைத் தெரிந்து கொள்வதற்கு நீங்களாகவே முயற்சி செய்திருந்தால் அதற்குப் பல ஆண்டுகள் தேவைப்பட்டிருக்கும். ஆனால் பல ஆண்டுகளாக மிகக் கடினமாகத் தெரிய முடியும் விஷயங்களை நீங்கள் இப்போது சில மணி நேரங்களில் கற்றுக் கொண்டு விட்டீர்கள். ஆக, ஆசிரியர் இருப்பது மிகவும் அவசியமானதாகும். மேலும் உங்களுக்கு நாம் ஆசிரியரைத் தந்து கொண்டிருப்போம் என அல்லாஹ் உங்களிடம் வாக்குறுதி வழங்கி இருக்கிறான். மேலும் உங்களுக்கு அந்த ஆசிரியரைத் தேட வேண்டிய தேவையும் இல்லை. ஏனெனில் உங்களுக்காக இறைவனே ஆசிரியரைத் தேர்தெடுத்து நிறுத்தும் அப்படிப்பட்ட கட்டமைப்பான இயக்கத்தில் நீங்கள் இருக்கிறீர்கள். எனவே மற்றவர்களுக்கு இருக்கின்ற கஷ்டங்கள் உங்களுக்கு இல்லை. எனவே நீங்கள் கண்டிப்பாக பயன்பெற வேண்டும்.

## ஆறாவது விஷயம்

எதன் மூலமாக மனிதன் அதிக பயன் பெற முடியுமோ அது கணக்கிட்டுப் பார்ப்பதாகும். இதன் மூலமாக மனிதன் பயன்பெற்றால் அவனுக்கு மிக சீக்கிரமாக உள்ளத்தின் தூய்மை கிடைத்து விடுகிறது. ஆனால் இதன் விபரம் உங்கள் மூளையில் இருக்கும் அதுவல்ல. மாறாக, நான் கூறப்போவதாகும். அதிலிருந்து கணக்கிட்டுப் பார்த்தல் என்றால் என்ன? அதில் என்ன கஷ்டங்கள் வருகின்றன. மேலும் அவை எவ்வாறு நீங்க முடியும்? மேலும் எவ்வாறு நீக்க வேண்டும்? என்பது தெரிய வரும்.

அல்லாஹ் கூறுகிறான்: ***யவ்ம யப்அஸுஹுமுல்லாஹு ஜமீஅன். ஃபயுனப்பிவுஹும் பிமா அமிலூ. அஹ்ஸாஹுல்லாஹு வனஸூஹு. வல்லாஹு அலா குல்லி ஷய்யின் ஷஹீது** (58:7)* அதாவது அல்லாஹ் அவர்கள் அனைவரையும் ஒன்று திரட்டி எழுப்பும் நாளில், அவர்கள் செய்ததைப் பற்றி அவர்களுக்கு அவன் அறிவிப்பான். அல்லாஹ் அதன் கணக்கை வைத்துள்ளான். ஆனால் எவர்களுக்கு அவற்றை நினைவில் வைத்திருப்பது கடமையாக இருந்ததோ அவர்கள் அவற்றை மறந்து விட்டனர். அல்லாஹ் எல்லாவற்றிற்கும் சாட்சியாவான்.

ஆக, எவர்கள் கணக்கை ஒப்படைக்க வேண்டியதிருந்ததோ அவர்களுக்குத்தான் நினைவில் வைக்க வேண்டிய தேவை இருந்தது. ஆனால் அவர்கள் மறந்து கொண்டே சென்றனர்; அல்லாஹ் எண்ணிக் கொண்டே சென்றான். மேலும் இது வினோதமான விஷயமாக இருக்கிறது. அறிவுடைமைக்குப் புறம்பானதாக இருக்கிறது. எனவே கணக்கிட்டுக் கொண்டிருப்பது அவசியமாகும் என்பது இந்த வசனத்திலிருந்து தெரிகிறது. **அடியார் தனது செயல்களைக் கணக்கிட்டுக் கொண்டு வந்திருப்பது அவருக்கு அவசியமானதாக இருந்தது. ஏனெனில் அவர் மறுமையில் கணக்கு கொடுக்க வேண்டியதிருந்தது.** அவர் தனது செயல்களை தனக்கு முன்னால் வைத்திருக்க வேண்டும். ஆனால் அவர் அவ்வாறு செய்யவில்லை. ஆக, கணக்கிட்டுக் கொண்டிருப்பதும் திருக்குர்ஆனிலிருந்து நிரூபணமாகின்றது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் புகழ்பெற்ற ஒரு கூற்று இருக்கிறது; அது தவறுதலாக ஹதீஸ் என கருதப்படுகிறது. அது என்னவென்றால், ***ஹாஸிபூ அன்ஃபுஸக்கும் கப்ல அன் துஹாஸபூ.** (திர்மிதி. அப்வாபு சிஃபத்தில் கியாமா).* உங்களைப் பற்றி கணக்கெடுக்கப்படுவதற்கு முன்னர் நீங்கள் உங்களைப் பற்றி கணக்கெடுத்துக் கொள்ளுங்கள்.

## கணக்கெடுப்பதன் இரண்டு வகைகள்

கணக்கெடுப்பது இரண்டு வகைப்படும் என்பதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். இவ்விரண்டிற்கும் இடையில் வித்தியாசம் இருக்கிறது. இதைப் புரியாததன் காரணமாக பலருக்கு கணக்கெடுப்பது என்பதையே புரிய முடியாது போயிற்று; மற்றவர்களுக்கு இதன் பக்கம் கவனமூட்ட முடியவில்லை. நீங்கள் இந்த இரண்டு வகைகளையும் நன்றாக நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். **கணக்கெடுப்பின் ஒரு வகை குறிப்பிட்ட ஒரு பகுதியைப் பற்றியதாகும். இன்னொன்று, ஒட்டு மொத்தமானதாகும்.** இவற்றில் வித்தியாசம் காணாததன் காரணமாக பொது மக்கள் (செயல்களைப் பற்றிய) கணக்கெடுப்பு என்பதை புரிய முடியாது. ஒன்று, ஒவ்வொரு (தனி) செயலுடன் தொடர்புடையதாகும். இரண்டாவது வகை, அனைத்து செயல்களுடன் தொடர்புடையதாகும். முதல் வகை செயல்களை சரி செய்கிறது. இரண்டாவது வகை அவற்றை கூர்மையாக்குகிறது. மக்கள் இவ்விரண்டையும் ஒன்று சேர்த்து விட்டனர். அல்லது இன்னொன்றை மட்டும் கூறினர். ஆனால் எதனால் பயன் கிடைக்க முடியுமோ அந்த உண்மையான கணக்கெடுப்பு என்பது இரண்டு வகையிலும் கணக்கெடுப்பதுதான்.

### கணக்கெடுத்தலின் மூன்று கிளைப் பிரிவுகள்

இப்போது நான் இந்த இரண்டு வகைகளின் விபரத்தைக் கூறுகிறேன். பகுதிகளைப் பற்றிய முதல் வகை. இதற்கு மூன்று கிளைப் பிரிவுகள் இருக்கின்றன. **ஒன்று,** ஆரம்ப கணக்கெடுப்பு. **இரண்டு,** நடுத்தர கணக்கெடுப்பு. **மூன்று,** இறுதி கணக்கெடுப்பு.

**ஆரம்ப கணக்கெடுப்பு:** ஒவ்வொரு மனிதனும் ஏதாவதொரு வேலையை செய்ய ஆரம்பிக்கும்போது அதை ஆரம்பிப்பதற்கு

முன் தனது உள்ளத்தைக் கணக்கிட வேண்டும். மேலும் அதனிடம் இரண்டு கேள்விகளைக் கேட்க வேண்டும். 1. அந்த வேலையைச் செய்வதன் நோக்கம் என்ன? 2. அவர் அந்த வேலையை யாருக்காகச் செய்யத் துவங்கியிருக்கிறார்? முதல் கேள்வியினால் அவருக்குக் கிடைக்கும் பயன் என்னவென்றால், அந்த வேலை தீயதாக இருந்தால் அது பற்றி அவருக்குத் தெரிந்து விடும். ஏனெனில் நன்மை, தீமை என்பது நோக்கங்களுடன் தொடர்புடையவையாக இருக்கின்றன. அவருடைய உள்ளம் அவருடைய கேள்விக்கு பதில் கொடுக்கும்போது அந்த வேலையின் தீமை அவருக்கு வெளிப்பட்டு விடும். அப்போது அவருடைய உள்ளத்தில் தானாகவே வெட்க உணர்வு ஏற்பட்டு விடும். மேலும் உள்ளத்தின் ஆவேசம் தணிந்து விடும். ஏனெனில் வெட்கப்படுவதனால் - நாணம் கொள்வதனால் உள்ளத்தின் ஆவேசம் தணிந்து விடுகிறது. உதாரணமாக, திருட்டு இருக்கிறது. அதைச் செய்வதற்கான எண்ணம் எழும்போது அவர் தன்னிடம், நான் ஏன் இதைச் செய்ய ஆரம்பித்திருக்கிறேன்? எனக் கேட்டால், செல்வத்தைப் பெறுவதற்காக என அது பதில் கூறும். அப்போது, செல்வத்தைப் பெறுவதற்காக அல்லாஹ் வேறு வழிமுறையை உருவாக்கவில்லையா? நான் அடுத்தவரின் செல்வத்தைத் தேவையில்லாமல் திருடுகிறேனே! இன்னொருவர் என்னிடம் அப்படி நடந்து கொண்டால் நான் அதை எப்படி வெறுப்பேன்? என்ற கேள்வியை அவர் (தன்னிடம்) கேட்கலாம். அப்போது அவருடைய உள்ளம் வாயடைத்துப் போய் விடும். மேலும் அவர் திருடுவதிலிருந்து விலகி விடுவார்.

ஆக, இது எந்தவொரு வேலையைச் செய்யும்போதும் உள்ளத்தில் கேட்க வேண்டிய முதல் கேள்வியாகும். ஆயினும் சில நேரத்தில் ஒரு செயலைப் பற்றி உள்ளத்திடம் கேள்வி கேட்கப்படும்போது இது நன்மை என அது பதில் கூறும். ஆனால்

அது பற்றி பரிசீலித்துப் பார்த்தால் பிடிபடுவார். மேலும் வெட்கப்படுவார். அப்போது பல பாவங்கள் முதல் கேள்வியிலேயே விலகி விடும். மேலும் பல பாவங்கள் இரண்டாவது கேள்வியிலும் மூன்றாவது கேள்வியிலும் விலகி விடும். ஆனால் சில நேரத்தில் இப்படியும் நடக்கலாம். அதாவது, இந்தக் கணக்கெடுப்புக்குப் பிறகு அவர் செய்யத் துவங்கி இருக்கும் வேலை நன்மை எனவும், அவருக்கும் மற்றவர்களுக்கும் நன்மை பயக்கக் கூடியது எனவும் அவருக்கு தெரியும். அப்போதும் அவர் இந்தக் கணக்கெடுப்பை விட்டு விடக் கூடாது. மாறாக, முதல் கணக்கெடுப்பின் இரண்டாவது பகுதியை பயன்படுத்த வேண்டும். அது என்னவென்றால்:

2. அவர் தன் உள்ளத்திடம், இந்த வேலையை நான் யாருக்காகச் செய்கிறேன்? எனக் கேட்க வேண்டும். இந்த கேள்விக்கான பதிலின் மூலமாக, வெளிப்படையில் நன்மையாகத் தெரிந்த பல விஷயங்கள் உண்மையில் தீமைகளாக இருந்தன என அவருக்குத் தெரிய வரும். உதாரணமாக, தொழும்போது அல்லது சதகா (தருமம்) கொடுக்கும்போது அல்லது நன்மை செய்யும்போது முதல் கணக்கெடுப்பின் விடையாக இந்த எல்லா வேலைகளும் பயனுள்ளவை என அவருடைய உள்ளம் முதலில் நிரூபிக்கும். ஆனால் அவர் காட்டுவதற்காகவும் புகழ்ந்துரைக்க வேண்டும் என்பதற்காகவும் இந்த வேலையைச் செய்திருந்தால், நான் இந்த வேலையை யாருக்காக செய்தேன் என்ற இரண்டாவது கேள்விக்கான விடையில், உள்ளம் எந்த நன்மை எனும் ஆடையை அந்தப் பணிகளுக்கு அணிவித்திருந்ததோ அது கழன்று விடும்; மேலும் அந்த நன்மையும் தீமையாகவே இருந்தது என்பது அவருக்குத் தெரிந்து விடும். அப்போது அவர் தனது எண்ணத்தை உடனே மாற்றியவாறு அந்த வேலையை இறைவனுக்காக அல்லது மனித இனத்தின் பயனுக்காக அந்த

வேலையை செய்ய எண்ணம் கொண்டு விடுவார். மேலும் தீமையை நன்மையாக மாற்றி விடுவார்.

**இந்த ஆரம்ப கணக்கெடுப்புக்குப் பிறகு வேலையை ஆரம்பிக்கும்போது இரண்டாவது கணக்கெடுப்பு வருகிறது.** அந்தக் கணக்கெடுப்புக்கு அதிக பயன் இருக்கிறது. இந்தக் கணக்கெடுப்புக்கான வழிமுறை என்ன வென்றால், ஒவ்வொரு வேலைக்கு இடையிலும் நான் இந்த வேலையை எப்படிச் செய்கிறேன் என ஒவ்வொருவரும் தனது உள்ளத்திடம் கேட்க வேண்டும். அதாவது அதை முழுமைப்படுத்துவதற்கு என்ன வழிமுறைகளை பயன்படுத்துகிறேன் எனக் கேட்க வேண்டும். இந்தக் கணக்கெடுப்பின் தேவை ஏன் இருக்கிறதென்றால், ஒரு மனிதன் பலமுறை நல்ல வேலையை செய்கின்றான்; நல்ல எண்ணத்துடனேயே செய்கின்றான். ஆனால் அவற்றை நிறைவேற்றுவதற்கு எப்படிப்பட்ட வழிமுறையைக் கையாள்கிறான் என்றால் அவை சரியானவையாக இருப்பதில்லை. அல்லது அந்த நல்ல வேலையை முழுமை செய்வதற்கு எந்த நிபந்தனைகள் அவசியமோ அவற்றை அவன் நிறைவேற்றுவதில்லை. எனவே ஒவ்வொரு வேலைக்கு இடையிலும் நீ எவ்வாறு இந்த வேலையை செய்து கொண்டிருக்கிறாய் என ஒருவர் தன் உள்ளத்திடம் கேட்பாரென்றால் அந்தக் கேள்விக்கான பதிலின் மூலம் அவருடைய செயல் முறையில் ஏதாவது தவறு இருந்தாலும் அது நீங்கி விடும்.

அதற்குப் பிறகு **மூன்றாவது மற்றும் இறுதி கணக்கெடுப்பாகும்.** அது ஒரு வேலையை முடித்த பிறகு செய்யப்படுகிறது. அது எப்படி என்றால், இந்த வேலைக்கான தாக்கம் தன்னுடைய உள்ளத்தில் என்ன ஏற்பட்டது என அவர் தனது உள்ளத்திடம் கேட்க வேண்டும். இந்தக் கேள்வி ஏன் தேவைப்படுகிறதென்றால், சில நேரத்தில் மனிதன் நன்மை

செய்கின்றான்; நல்ல வழிமுறைகளில் செய்கின்றான். ஆனால் அதை செய்து முடித்த பிறகு அவனிடம் ஆணவமும், அகங்காரமும் வந்து விடுகிறது. மேலும் அவன் நாசமாகி விடுகிறான். எனவே நன்மை செய்த பிறகு அதன் மூலம் என்ன தாக்கம் ஏற்பட்டிருக்கிறது என அவர் தனது உள்ளத்தை சீர்தூக்கிப் பார்க்கும்போது அதனால் பெருமை, அகங்காரத்தின் அறிகுறி ஏதும் ஏற்பட்டிருந்தால் அது வளர்ந்து மரமாவதற்குள் அவர் அதை அடையாளம் கண்டு கொள்வார். அவர் தனது உள்ளத்தை பழித்துரைப்பார். மேலும் தனது செயல்கள் வீணாவதிலிருந்து காப்பாற்றி விடுவார். அவருடைய செயல்கள் அவருடைய உள்ளத்தில் மேலும் அதிகமாக பணிவையும், தன்னடக்கத்தையும் உருவாக்கி இருக்கிறது என அவர் பார்ப்பார் என்றால் முந்தைய செயலின் நல்ல தாக்கத்தைப் பார்த்து மேலும் அதிகமாக நன்மைகளின் பக்கம் விருப்பம் கொள்வார். அவற்றின் பக்கம் மேலும் அதிகமாக ஆர்வத்துடன் காலை முன்னெடுத்து வைப்பார்.

சுருக்கமாக, கணக்கெடுப்பு மூன்று வகைப்படும். முதல் கணக்கெடுப்பு, ஒரு செயலைச் செய்வதற்கான எண்ணம் தோன்றும்போது நான் இந்த வேலையை எந்த நோக்கத்திற்காக, யாருக்காகச் செய்கின்றேன்? என்ற கேள்வியைக் கேட்க வேண்டும். இது ஆரம்ப கணக்கெடுப்பு ஆகும். இரண்டாவது கணக்கெடுப்பு, வேலையைத் துவக்கிய பிறகு நான் இந்த வேலையை எப்படிச் செய்கிறேன்? எனக் கேள்வி கேட்க வேண்டும். இது நடுவிலுள்ள கணக்கெடுப்பு ஆகும். மூன்றாவது கணக்கெடுப்பு, வேலையை செய்து முடித்த பிறகு அவர் உள்ளத்திடம் உன் மீது இதன் தாக்கம் என்ன ஏற்பட்டுள்ளது எனக் கேட்க வேண்டும். இந்தக் கணக்கெடுப்பு இறுதியானதாகும். மனிதன் இந்தக் கேள்விகளின்படி செயல்படத் துவங்கி விட்டால் சிறிது காலத்திற்குப் பிறகு

அவனுக்கு, ஒவ்வொரு செயலின்போதும் உள்ளத்திடம் கேள்வி எழுந்து கொண்டே செல்லும் பழக்கம் ஏற்பட்டு விடும். மேலும் இது செயல்களின் பகுதி சார்ந்த கணக்கெடுப்பு தொடர்பானதாகும்.

இரண்டாவது வகையான கணக்கெடுப்பு ஒட்டு மொத்தமான கணக்கெடுப்பாகும். அனைத்து செயல்களைப் பற்றியும் ஒட்டு மொத்தமாக கணக்கெடுப்பது மிகவும் கடினமானதாகும். ஏனெனில் மனிதனுக்கு தனது செயல்கள் மறந்து விடுகின்றன. மேலும் இந்தக் கணக்கெடுப்பு எல்லா செயல்களின் மீதும் சூழ்ந்திருக்கும் அளவுக்கு பரந்தது. எனவே பல செயல்கள் விடுபட்டு விடும். மனிதனுடைய பார்வை எந்த அளவுக்கு பலவீனமானது என்பதை இறைவனும் கூறுகிறான்: ***லகத் குன்த்த ஃபீ கஃஃப்லத்தின் மின் ஹாஸா. ஃபகஷஃஃப்னா அன்க கிதாஅக. ஃபபஸருகல் யவ்ம ஹதீத்.*** நீ இந்த நாள் குறித்து கவனமற்றிருந்தாய். இப்போது நாம் உன் திரையை உன்னை விட்டு அகற்றி விட்டோம். இன்று உன் பார்வை மிக்க கூர்மையானதாக இருக்கின்றது. *(திருக்குர்ஆன் 50:23)* அதாவது உலகில் உனக்கு இந்த விஷயங்களெல்லாம் மறந்து போயிருந்தன. இப்போது உனக்கு நன்றாக நினைவுக்கு வந்து விட்டன. எனவே மனிதன் எல்லா செயல்களையும் எளிதாகக் கணக்கெடுக்கும் ஒரு வழிமுறையைப் பற்றி சிந்திக்க வேண்டும். மேலும் எந்த செயலும் அவனிடமிருந்து விடுபட்டு விடக் கூடாது. எனவே இயல்பான முதல் வழிமுறை என்னவென்றால், செயல்களை வகைப்படுத்தி விடவேண்டும். உதாரணமாக, நன்மைகளை இப்படி வகைப்படுத்தலாம்: **ஒன்று,** இறைவனைப் பற்றியவை; **இரண்டாவது** தன்னைப் பற்றியவை. **மூன்றாவது** மற்ற படைப்பினங்களைப் பற்றியவை. அவ்வாறே தீமைகளைப் பற்றியும் வகைப்படுத்தலாம். இந்த வகைப்படுத்துதலை வைத்து கணக்கெடுக்கும்போது பல விஷயங்கள் நினைவுக்கு வந்து விடும்.

## நற்செயல்களின் நான்கு வகைகள்

செயல்களை இன்னும் பல வகைகளாகப் பிரிக்கலாம். உதாரணமாக, நற்செயல்கள் நான்கு வகைப்படும். **ஒன்று,** தனக்கும் மற்றவர்களுக்கும் பயன்படுகின்றவை. ஆனால் சில நேரத்தில் மனிதன் பிடிவாதத்தினால் அவற்றை செய்வதில்லை. எனவே இந்தக் கோணத்தில் தன்னிடம் அப்படிப்பட்ட நன்மை ஏதும் விடுபட்டு விடவில்லையே என மனிதன் சிந்திக்க வேண்டும். **இரண்டாவது,** தனக்கு பயன் இல்லாவிட்டாலும் மற்றவர்களுக்கு பயன் இருக்கும் செயல்கள். **மூன்றாவது,** ஒரு மனிதன் செய்வதால் அவருக்கு பயனோ நஷ்டமோ ஏற்படுவதில்லை; ஆனால் மற்றவர்களுக்கு நஷ்டம் ஏற்படும் செயல்கள். **நான்காவது** எப்படிப்பட்ட செயல்கள் என்றால், அவற்றால் தனக்கு நஷ்டம் ஏற்படுகிறது. ஆனால் மற்றவர்களுக்கு பயன் கிடைக்கிறது. இந்த செயல்களை மனிதன் தனித்தனியாக வகைப்படுத்திப் பார்த்தால் அவனுக்கு கணக்கிட்டுப் பார்ப்பது மிகவும் எளிதாக இருக்கும். அவ்வாறே தடுக்கப்பட்டவை குறித்தும் கணக்கிட்டுப் பார்க்க முடியும்.

## செயல்களை கணக்கிட்டுப் பார்ப்பதற்கான எளிய வழிமுறை

இவ்வாறு வகைப்படுத்துவதால் கிடைக்கும் மகத்தான பயன் என்னவென்றால், மனிதனுக்கு செயல்களின் வேர் மற்றும் கிளை பற்றித் தெரிந்து விடும். மேலும் ஏதாவதொரு செயலில் குறைபாடு ஏற்பட்டால் எளிதாக அதை சீர்திருத்த முடியும். ஆனால் இவ்விதமாக கணக்கிட்டுப் பார்ப்பதற்கும் எல்லாரிடத்திலும் ஆற்றல் இருப்பதில்லை. எனவே எளிதான வழிமுறையைக் கூறுகிறேன். அது என்னவென்றால், மனிதன் ஓராண்டிற்குப் பிறகு, ஆறு மாதங்களுக்குப் பிறகு, நான்கு மாதங்களுக்குப் பிறகு, ஒரு மாதத்திற்குப் பிறகு தனது

செயல்களைக் கணக்கிடுவதற்கு பதிலாக எவ்வாறு செய்ய வேண்டுமென்றால் அவர் திருக்குர்ஆனிலுள்ள கட்டளைகள், தடுக்கப்பட்டவை ஆகியவற்றை அடையாளமிட வேண்டும். பிறகு நாள்தோறும் ஒரு ருகூ, இரண்டு, மூன்று அல்லது எவ்வளவு ஓத முடியுமோ ஓத உறுதி மொழி எடுக்க வேண்டும். ஓதும்போது கிளியைப் போன்று ஓதக் கூடாது; மாறாக, கட்டளைகள், தடுக்கப்பட்டவை ஆகியவற்றைப் பற்றி சிந்திக்க வேண்டும் என்பதில் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். மேலும் நாள்தோறும் ஓதும்போது எந்தக் கட்டளையைப் பற்றி வருகிறதோ அது பற்றி நான் இந்த வேலையை செய்கிறேனா என சிந்திக்க வேண்டும். மேலும் எந்தத் தடையைப் பற்றி வருகிறதோ அங்கு நான் இதிலிருந்து விலகி இருக்கிறேனா என சிந்திக்க வேண்டும். இவ்வாறு எளிதாக கணக்கெடுப்பு நடந்து விடும்.

பாருங்கள். ஒருவர் ஒரு வீட்டைக் கட்டும்போது கட்டடப் பொறியாளரை அழைத்து அல்லது அது பற்றி தெரிந்தவரை அழைத்து எதுவும் விட்டு விடக் கூடாது என்பதற்காகவும், வீடு முழுமையடையாமற் போய்விடக் கூடாதே என்பதற்காகவும் கணக்கிடுமாறு கூறுகிறார். **அவ்வாறே ஆன்மீக கட்டடத்தை எழுப்புவதற்கான பொறியாளர் திருக்குர்ஆன் ஆகும்.** நமக்கு ஈமானை முழுமை செய்வதற்கு என்ன பொருள்கள் தேவை என அதனிடம் கேட்க வேண்டும். அதற்கான வழிமுறை என்னவென்றால், நாம் திருக்குர்ஆனைப் படித்துக் கொண்டு செல்லும்போது கட்டளைகள், தவிர்க்குமாறு வரும் விஷயங்கள் ஆகியவை வரும்போது இதன்படியே நமது செயல்கள் இருக்கின்றனவா என நாம் கவனித்துக் கொண்டே செல்ல வேண்டும். இது எத்தகைய வழிமுறை என்றால் எவர் முயற்சி செய்தாலும் அவர் இதை செய்ய முடியும். ஆயினும் இதில் ஓர் எச்சரிக்கையும் அவசியமாகும். அது என்னவென்றால், இந்த விஷயத்தில் உள்ளத்தின் விஷயத்தை ஏற்றுக் கொள்ளக் கூடாது.

## புறம்பேசுதல் என்பதன் உண்மை நிலை

உதாரணமாக, புறம்பேசுதல் இருக்கிறது. இது பற்றி அவருடைய உள்ளம், நான் ஒருபோதும் புறம்பேசியதே இல்லை எனக் கூறுகிறதென்றால், அதை அவர் ஏற்றுக் கொள்ளக் கூடாது. மாறாக, அவர் முதலில் தனது உள்ளத்தை சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். அதற்குப் பிறகும் இந்தக் குற்றத்தை அவர் செய்யவில்லை எனத் தெரிய வந்தால், **அடுத்து புறம்பேசுதல் என்றால் என்ன என புறம்பேசுதலுக்கு அவர் இலக்கணம் தேட வேண்டும்.** பல முறை இலக்கணம் தேடும்போது புறம்பேசுதல் என்றால் என்ன என்பதை அவர் நன்றாகப் புரிந்திருக்கவில்லை என்பது தெரிய வரும். எனவே நாம் ஒருபோதும் புறம்பேசியதே இல்லை எனக் கருதியிருந்தோம் என்பது புரிய வரும். பலர் பிறருடைய தீமைகளைக் கூறுகின்றனர். ஏன் புறங்கூறுகிறீர்கள் என அவர்களுக்குப் புரிய வைக்கப்பட்டால் நாங்கள் பொய்யையா கூறினோம் என்கின்றனர். இதிலிருந்து புறங்கூறுதல் என்றால் என்ன என்பதே அவர்களுக்குத் தெரியவில்லை எனத் தெரிகிறது. ஒருவரைப் பற்றி சம்பவத்திற்கு மாற்றமான ஒரு விஷயம் கூறப்பட்டால் அது புறம்பேசுதல் ஆகும் என அவர்கள் கருதுகின்றனர். ஆனால் சம்பவத்திற்கு மாற்றமான விஷயத்தைக் கூறுவது பொய் எனப்படுகிறது. புறம்பேசுதல் (ஒருவரைப் பற்றிய) உண்மையை இல்லாத நேரத்தில் பின்னால் கூறுவதற்குக் கூறப்படும்.

இப்போது ஒருவருக்குப் பின்னால் சம்பவத்திற்கு மாற்றமான விஷயத்தைக் கூறுவது புறம்பேசுதல் என ஒருவர் அதற்கு இலக்கணமாகப் புரிந்து வைத்திருந்தால் அவர் புறம்பேசாதீர்கள் எனப் படிக்கும்போது நான் புறம்பேசுவதில்லையே எனக் கருதுவார். ஆனால் புறம்பேசுதல் என்பதற்கான சரியான இலக்கணத்தை அவர் தன் உள்ளத்தில் பதிய வைப்பார் என்றால்

- பொய்யுடன் அதை ஒப்பிட்டுப் பார்ப்பார் என்றால் நான் புறம்பேசும் குற்றத்தை செய்கிறேன் என்பது அவருக்குத் தெரிந்து விடும்.

சிலர் நாங்கள் இந்த விஷயத்தை அவருடைய முகத்திற்கு முன்னாலும் கூறுவதற்கு ஆயத்தமாக இருக்கிறோம் என்று கூறுகின்றனர். ஆக, **எந்த விஷயத்தை முகத்திற்கு முன்னால் கூற முடியாதோ அதுதான் புறம்பேசுதல் என அவர்கள் புறம்பேசுதலுக்கு இலக்கணம் கொடுக்கின்றனர்.** எவர் தனது சகோதரரின் குறையை அவருக்குப் பின்னால் கூறி விட்டு பிறகு அவருக்கு முன்னாலும் கூற ஆயத்தமாகி விடுகிறாரோ அவர் இரண்டு பாவங்களை செய்கிறார். ஒன்று, புறம்பேசியதற்கு. இரண்டாவது உள்ளத்தை துக்கப்படுத்தியதற்கு. ஒருவருடைய குறையை இறைவன் மறைத்திருக்கும்போது அதை பகிரங்கப்படுத்துவது பாவமாகும். எவர் அடுத்தவரின் குறையை மறைக்கிறாரோ அவருடைய குறையை அல்லாஹ் மறைக்கிறான் என ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறியிருக்கிறார்கள். ***(திர்மிதி அப்வாபுல் பிர்ரி வஸ்ஸிலா).*** ஆனால் பெரும்பாலானவர்கள் புறம்பேசுதல் என்பதன் இலக்கணம் தெரியாததன் காரணமாக இதைச் செய்கின்றனர்.

## பல்வேறு வகையான பாவங்கள் பற்றிய இலக்கணத்தை எப்படித் தெரிந்து கொள்வது?

பல்வேறு பாவங்கள், தீமைகள் பற்றிய இலக்கணங்களை எப்படித் தெரிந்து கொள்வது என்ற கேள்வி எழலாம். அதற்கு முதல் நிலை நான் முதலில் கூறியது போன்று ஆசிரியரிடமிருந்து கற்றுக் கொள்ளுங்கள். ஆனால் ஆசிரியரிடமிருந்தும் எல்லா கிளை விஷயங்களும் தெரிந்து விட முடியாது. எனவே ஒரு விதிமுறையைக் கூறுகிறேன். அது என்னவென்றால் இறைவன் மனிதனிடம் தன்மான இயல்பை வைத்துள்ளான். அவன் ஒரு செயலை, தான் செய்து விடுவான்; ஆனால் அதே செயலை

அவனுக்கு முன்னால் ஒருவர் செய்கிறார் என்றால் அவனுக்கு தன்மானம் வந்து விடுகிறது. அவர் அதை மிகவும் வெறுக்கிறார். ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கூறிவந்தார்கள்: நான் ஒரு திருடனிடம் உனக்கு திருடுவது தீயதாகத் தெரியவில்லையா? எனக் கேட்டேன். அதற்கு அவர் ஏன் தீயதாகத் தெரிய வேண்டும்? நாங்கள் உழைத்து, கஷ்டப்பட்டு சம்பாதிக்கின்றோம் என்றார். மேலும் மாபெரும் துன்பங்களைத் தாங்கிக் கொள்கிறோம்; சும்மாவா எங்கிருந்தாவது கொண்டு வந்து விடுகிறோம்? என்றார். (அதாவது உழைத்துதான் கொண்டு வருகிறோம் என்றார்). ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கூறினார்கள்: இதற்குப் பிறகு நான் அவரிடம் வேறு சில பேச்சுகளைப் பேசினேன். சிறிது நேரத்திற்குப் பிறகு அவரிடம், நீங்கள் செல்வத்தை ஒருவருக்கொருவர் எப்படி பங்கிட்டுக் கொள்கிறீர்கள்? எனக் கேட்டேன். அவர் கூறினார்: ஒரு பொற் கொல்லர் எங்களுடன் இருக்கிறார். நாங்கள் எல்லா நகைகளையும் அவரிடம் கொடுத்து விடுகிறோம். பிறகு அவர் அதை உருக்கி தங்கம், வெள்ளி எதுவாக இருந்தாலும் நகையாக்கி விடுகிறார். பிறகு நியமிக்கப்பட்ட பங்கிற்கேற்ப நாங்கள் பங்கிட்டுக் கொள்கிறோம் என்றார். அப்போது நான், அவர் அதிலிருந்து கொஞ்சம் தன்னிடம் வைத்துக் கொண்டால் என்ன செய்வீர்கள்? என அவரிடம் கேட்டேன். அதற்கு அவர் அந்தக் கொடிய திருடனின் தலையை வெட்டி விடமாட்டோமா? தங்கம் அவருடைய அப்பாவின் சொத்தா என்ன? அவர் அதை தன்னிடம் வைத்துக் கொள்வதற்கு? எனக் கூறினார்.

இந்த உதாரணத்திலிருந்து மனிதன் எவ்வாறு தனது செயல்களை வேறு கோணத்தில் பார்க்கிறான்; மற்றவர்களின் செயல்களை வேறொரு கோணத்தில் பார்க்கிறான் எனத் தெரிகிறது. எனவே **பாவம் என்பதற்கு தனது மனதை**

**முன்னிறுத்தி இலக்கணம் கொடுக்கக் கூடாது. மாறாக, மற்றவர்களின் செயல்களை முன்னிறுத்தி கொடுக்க வேண்டும்.** அப்போது மனிதன் சின்னச் சின்ன குற்றங்களையும் உணர்ந்து விடுவான். பிறகு இந்தக் குற்றத்திற்கான இலக்கணத்தை தானாகவே கொடுக்கக் கூடாது. மாறாக, மற்றவர்களைப் பார்த்து இலக்கணத்தைப் புரிய வேண்டும். மற்றவர்கள் செய்யப் பார்த்து அந்த இலக்கணத்தை தனக்குப் பொருத்திப் பார்ப்பாரென்றால், அவர் பல செயல்களை, தாமே மிக மகிழ்ச்சியுடன் செய்து வந்தார் என்பதையும் – ஆனால் மற்றவர்கள் விஷயத்தில் தாம் செய்யும் அ(தே செயலான)து அவர்களுக்கு பெரிய பாவம் என்று கருதி வந்தார் என்பதையும் அவர் தெரிந்து கொள்வார். இது பாவத்தின் இலக்கணத்தைத் தெரிந்து கொள்வதற்கு எளிதான, உயர்ந்த வழிமுறையாகும். இதை பயன்படுத்துவதால் மிகக் குறைந்த தவறு ஏற்பட சாத்தியக்கூறு எஞ்சியிருக்கிறது.

## ஏழாவது விஷயம்

உள்ளத்தை தூய்மைப்படுத்துவதற்கு அவசியமான ஏழாவது விஷயம், மனிதன் அறிந்து கொண்ட கட்டளைகள், விலக்கப்பட்டவை பற்றி சிந்திக்கும் பழக்கத்தை ஏற்படுத்த வேண்டும். தீய எண்ணங்களை உள்ளத்திலிருந்து வெளியேற்ற வேண்டும் என நான் முதலில் கூறியிருந்தேன். ஏனெனில் அவை உள்ளத்தில் படிவதால் நஷ்டம் ஏற்படுகிறது. ஆனால் கட்டளைகள், விலக்கப்பட்டவை ஆகியவற்றை உள்ளத்தில் படிய வைக்க வேண்டும் என நான் இப்போது கூறுகிறேன். ஏனெனில், அவற்றைப் படிய வைப்பதால் பயன் இருக்கிறது. உதாரணமாக, தொழுகையின் அருள்கள் மற்றும் பயன்கள் பற்றி சிந்திக்க வேண்டும். நோன்பு, பிற நற்செயல்கள் பற்றிய உண்மை நிலை மற்றும் பயன்கள் பற்றி பார்க்க வேண்டும். அவ்வாறே பொய், நம்பிக்கை துரோகம், கட்டுப்படாமை, தீமை ஆகியவற்றின் உண்மை நிலை மற்றும் அவற்றின் விளைவுகள்

பற்றி சிந்திக்க வேண்டும். ஏனெனில் உண்மை நிலையைக் கண்டு கொள்வதன் மூலமாகவும் மனிதனுடைய உள்ளத்தில் ஒன்றைப் பற்றிய அன்பு அல்லது வெறுப்பு உருவாகிறது. இது பற்றி திருக்குர்ஆனில் இவ்வாறு வருகிறது: ***லஹும் குலூபுன் லாயஃப்கஹூன பிஹா வலஹும் அஃயுனுன் லா யுப்ஸிரூன பிஹா வலஹும் ஆஸானுன் லாயஸ்மவூன பிஹா.*** அதாவது அவர்களுக்கு உள்ளங்கள் இருக்கின்றன; ஆனால் அவர்கள் அவற்றால் புரிந்து கொள்வதில்லை; அவர்களுக்குக் கண்கள் இருந்தும் அவற்றால் அவர்கள் பார்ப்பதில்லை; அவர்களுக்குக் காதுகள் இருந்தும் அவற்றால் அவர்கள் கேட்பதில்லை. (7:180). இதன் கருத்து, உள்ளம் என்னும் காதுகளால் பயன்பெறாதவரை, உள்ளம் என்னும் கண்களால் பயன்பெறாதவரை வெற்றி கிடைக்க முடியாது.

## எட்டாவது விஷயம்

மனிதனிடம் ஒப்புக் கொள்ளும் தன்மை இருக்க வேண்டும். ஒரு விஷயத்தைக் கேட்டு விட்டு அதன்படி செயல்பட முயற்சி செய்யாமல் இருத்தல் என்பது இருக்கக் கூடாது. மாறாக, எப்போது ஒரு விஷயம் கூறப்படுமோ அதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும்; அதன்படி செயல்படுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். இந்த நுண்ணிய கருத்தின் பக்கமும் மேற்கண்ட வசனத்தில் இறைவன் சுட்டிக்காட்டியிருக்கிறான். எவர்கள் கேட்டும் கேட்காததைப் போன்றும், பார்த்தும் பார்க்காததைப் போன்றும் சென்று விடுகிறார்களோ அவர்கள் முன்னேற்றம் காண்பது சாத்தியமற்றதாகும்.

## ஒன்பதாவது விஷயம்

ஏதாவது தவறு ஏற்படும்போது எச்சரிக்கப்பட்டால் சகித்துக் கொள்ள வேண்டும். பலருக்கு அவர்களின் தவறுகள் கூறப்படும்போது கோபப்படுவதால் அவர்கள் தங்களை சீர்திருத்தம் செய்ய முடியாது. அவர்கள் தம்மை

சீர்திருத்துவதில்லை. ஆனால் அப்படிச் செய்யக் கூடாது. தவறு பற்றி எச்சரித்துக் கூறப்படும்போது அதை தாங்கிக் கொள்ள வேண்டும். அல்லாஹ் இவ்வாறு கூறுகிறான்: ***வயிஸா கீல லஹுத்த கில்லாஹ அகஸத்ஹுல் இஸ்ஸத்து பில் இஸ்மி ஃபஹஸ்புஹு ஜஹன்னம். வலபிஃஸல் மிஹாது.*** *(2:207)* அதாவது சிலர் இருக்கின்றனர். அவர்களிடம் இறையச்சத்தை மேற்கொள்ளுங்கள் எனக் கூறப்பட்டால், அவர்களுக்கு அறிவுரையைக் கேட்பதனால் தன்மானம் எழுகிறது. மேலும் அறிவுரையை தனது கண்ணியக் குறைவாகக் கருதி பைத்தியமாகி அதிலிருந்து பயன் பெறுவதற்கு பதிலாக அறிவுரை கூறுபவரை எதிர்க்க ஆரம்பித்து விடுகின்றனர். அப்படிப்பட்டவர்களின் தங்குமிடம் நரகமாகும். ஏனெனில் அவர்கள் அறிவுரை கூறுபவர்களுக்கு நன்றியுள்ளவர்களாக இருப்பதற்கு பதிலாக நேர்மாறாக அவர்களுடன் சண்டையிடுகின்றனர். இதிலிருந்து, எவரிடம் ஒருவர் தவறு அல்லது குறைபாட்டைக் கண்டாலும் கடைவீதியில் நின்று கொண்டு அவருக்கு எச்சரிக்கத் துவங்கி விட வேண்டும்; அதற்கான உரிமை ஒவ்வொருவருக்கும் இருக்கிறது என எவரும் கருதி விட வேண்டாம். **புரிய வைப்பதென்பது எப்போதும் தனிமையில் இருக்க வேண்டும்.** மேலும் புரிய வைப்பவர் தனது தகுதியையும் கவனத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். எதிரான விளைவு ஏதும் ஏற்படாமல் இருப்பதற்காக, **எவருக்கு அவர் புரிய வைக்க விரும்புகிறாரோ அதற்கான தகுதியும் தன்னிடம் இருக்கிறதா? இல்லையா? எனப் பார்க்க வேண்டும்.** எனவே தவறு செய்பவர்கள் (அதை பிறர் சுட்டிக்காட்டும்போது) சகித்துக் கொள்ளும் தன்மையை உருவாக்க வேண்டும்; புரிய வைப்பவரின் விஷயத்தை அமைதியான உள்ளத்துடன் கேட்க வேண்டும் என்று இருக்கின்ற அதே நேரத்தில் புரிய வைப்பவரும் எச்சரிக்கையுடன் நடந்து கொள்ள வேண்டும் என்பதும் அவசியமானதாகும். மக்களில், தான் விரும்பியவரை அவமானப்படுத்த ஆரம்பித்து விடக் கூடாது.

## பத்தாவது விஷயம்

அது என்னவென்றால், அவநம்பிக்கை கொண்டுவிடக் கூடாது; அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வைக்க வேண்டும். சிலர் இருக்கின்றனர். உழைத்து உழைத்து அந்த உழைப்பிற்கான கனிகள் கிடைக்கவிருக்கின்ற நேரத்தில் நம்பிக்கையிழந்து விடுகின்றனர்.

### ஒரு பெரியவரின் சம்பவம்

ஒரு பெரியவரின் சம்பவம் இவ்வாறு எழுதப்பட்டிருக்கிறது: அவர் நாள்தோறும் இரவில் எழுந்து சில விஷயங்களைப் பற்றி துஆ கேட்டு வந்தார். தற்செயலாக அவருடைய சீடர் ஒருமுறை அவரை சந்திப்பதற்காக வந்தார். மேலும் மூன்று, நான்கு நாள் அவருடன் தங்கினார். அவர் இரவில் தொழுகைக்காக எழும்போது சீடரும் கண் விழித்துக் கொண்டார். அவரும் தனியாக இறைவணக்கத்தில் ஈடுபட்டார். பீர் சாஹிப் துஆ செய்து முடித்ததும் நீர் எவ்வளவு மன்றாடினாலும் உமது துஆ ஒப்புக்கொள்ளப்பட மாட்டாது என்ற குரல் வந்தது. இந்த ஓசை இல்ஹாமிய (இறையறிவிப்பு) ஓசையாக இருந்தாலும் அது அந்த முரீதுக்கும் (சீடருக்கும்) கேட்டது. முரீது உள்ளத்தில் ஆச்சரியப்பட்டாலும் பீருக்கு முன்னால் மரியாதைக்காக மவுனமாக இருந்தார். பிறகு மறுநாள் அந்தப் பெரியவர் எழுந்தார். துஆவில் ஈடுபட்டார். அப்போதும் அந்தக் குரல் வந்தது; அதை முரீதும் கேட்டார். ஆயினும் மவுனமாக இருந்தார். மூன்றாவது நாளும் அந்தப் பெரியவர் எழுந்தார். அதே போன்று துஆவிலும் இறைவணக்கத்திலும் ஈடுபட்டார். பிறகும் அதே பதில்தான் வந்தது. அதை முரீதும் கேட்டார். அப்போது முரீதால் சகித்துக் கொள்ள முடியவில்லை. அவர் பீர் சாஹிபிடம், ஒரு நாள் ஆனது; இரண்டு நாள் ஆனது; மூன்று நாட்களாக உங்களுக்கு இந்த ஓசைதான் வந்து கொண்டிருக்கிறது. நீங்களும் (துஆவை)

நிறுத்தவில்லையே! எனக் கேட்டார். அப்போது அந்தப் பெரியவர், அறிவிலியே! நீ இவ்வளவு சீக்கிரம் பதற்றமடைந்து விட்டாயா? எனக்கு இந்த ஓசை 20 ஆண்டுகளாக வந்து கொண்டிருக்கிறது. ஆனால் நான் சோம்பேறித்தனம் காட்டுவதில்லை. ஏனெனில் துஆ இறைவணக்கமாகும்; மேலும் இறைவணக்கம் செய்வது அடியாரின் வேலையாகும். இறைவன் வணக்கத்திற்குரியவனாவான். துஆவை ஏற்றுக் கொள்வதும் மறுப்பதும் அவன் வேலையாகும்; அவன் அவன் வேலையைச் செய்து கொண்டிருக்கிறான்; நான் என் வேலையைச் செய்து கொண்டிருக்கிறேன். இடையில் பதற்றமடைவதற்கு நீ யார்? எனக் கூறினார். அப்போது அந்த முரீது மவுனமாகி விட்டார். மறுநாள் அந்தப் பெரியவர் துஆ செய்வதற்காக எழுந்தபோது, **இந்த 20 ஆண்டுகளில் நீர் செய்த அனைத்து துஆக்களும் ஒப்புக்கொள்ளப்பட்டு விட்டன;** ஏனெனில் நீர் சோதனையில் வெற்றி பெற்று விட்டீர் என இறையறிவிப்பு வந்தது. அப்போது அந்தப் பெரியவர் முரீதிடம், பார்த்தாயா? நான் உன் அறிவுரைப்படி நடந்திருந்தால் எவ்வளவு நஷ்டத்திற்குள்ளாகியிருப்பேன்? என்றார். மேலும் நான் இறைவன் மீது நம்பிக்கை வைத்திருந்தேன். இறுதியில் எனக்கு அவனுடைய நெருக்கம் கிடைத்து விட்டது எனக் கூறினார்.

**துஆவில் உறுதியுடன் நிலைபெற்றிருப்பது அவசியம்**

இப்போது பாருங்கள். அந்தப் பெரியவர் முரீதின் விஷயத்தைக் கேட்டிருந்தால், அவருடைய எல்லா துஆக்களும் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு இன்னும் கொஞ்ச காலமே எஞ்சியிருந்த நேரத்தில் அவர் துஆவைக் கைவிடுவது எவ்வளவு அபாயகரமானதாக இருந்திருக்கும்! அவருடைய அனைத்து உழைப்பும் வீணாகி இருக்கும். எனவே நம்பிக்கையாளர் ஒருபோதும் நம்பிக்கை இழந்து விடக் கூடாது. தைரியத்துடன் காலை முன்னெடுத்தே வைத்துக் கொண்டிருக்க வேண்டும்.

மேலும் தனது தோல்வியினால் வேலையை விட்டு விடக் கூடாது. ஆயினும் எனது தோல்விக்கு என்ன காரணங்கள்? என சந்தேகமின்றி சிந்திக்கட்டும். ஏதாவது காரணம் தெரிந்தால் அதை நீக்குவதற்கு முயற்சி செய்ய வேண்டும். ஆனால் இறைவனின் அருள் பற்றி ஒருபோதும் நம்பிக்கையிழந்து விடக் கூடாது. சிலர் எங்கள் செயல்களுக்கு எந்த விளைவும் ஏற்படுவதில்லை என நினைத்து விட்டு விடுகிறார்கள். அவர்களுக்கு நான் கூறுவது என்னவென்றால், விளைவு ஒன்றும் ஏற்படவில்லையென்றாலும் நீங்கள் உங்களது வேலையை செய்து கொண்டே செல்லுங்கள். இறுதியில் நீங்கள் கண்டிப்பாக வெற்றி பெறுவீர்கள். நம்பிக்கை கொண்டவர் அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வைத்து எவ்வாறு வெற்றி பெறுகிறார் என்பதை அல்லாஹ் எவ்வாறு குறிப்பிடுகிறான் எனப் பாருங்கள். ***அல்லதீன கால லஹுமுன்னாஸு இன்னன்னாஸ கத் ஜமவூலக்கும் ஃபக்ஷவ்ஹும் ஃபஸாதஹும் ஈமானன். வகாலூ ஹஸ்புனல்லாஹு வனிஃமல் வகீல்.*** ''எதிரிகள் அவர்களிடம் வந்து, உங்களுக்கு எதிராக மக்கள் (படையைத்) திரட்டியுள்ளனர். எனவே நீங்கள் அவர்களுக்கு அஞ்சுங்கள் என்று கூறினர். ஆனால், இது அவர்களின் நம்பிக்கையை மேலும் வளரச் செய்தது. மேலும் இறைவனே எங்களுக்குப் போதுமானவன்; அவன் மிகவும் பாதுகாவலன் என்றும் அவர்கள் கூறினர்.''(3:174)

அதாவது முஸ்லிம்களிடம் வெற்றி பற்றிய அந்த முன்னறிவிப்புகள் எங்கே சென்றன? இப்போது முழு உலகமும் உங்களுக்கு எதிராக ஆகி விட்டது. எனவே நீங்கள் அவர்களுக்கு அஞ்சுங்கள் என மக்கள் கூறியபோது இந்தக் கூற்றினால் அவர்கள், ஈமானில் மேலும் முன்னேறிச் சென்றனர். ஏனெனில் எதிரிகள் அவர்களை மிகவும் வலுவாகத் தாக்குவர்; அவர்களை அழிக்க நாடுவர்; ஆயினும் நம்பிக்கையாளர்கள் வெற்றி பெறுவர் என்ற செய்தியையும்தான் அவர்கள் பெற்றிருந்தனர். எனவே

அவர்கள் எச்சரிப்பவர்களிடம், எங்களை எதிர்ப்பவர்களை எதிர்க்க விடுங்கள். எங்களுக்கு அல்லாஹ்வே போதுமானவன். மேலும் அவன் மிகவும் அருமையான பாதுகாவலன். அவன் மீது நம்பிக்கை வைத்திருக்கும்போது மற்றவர்களைப் பற்றி என்ன பொருட்படுத்த வேண்டியதிருக்கிறது என்று பதில் கூறினர்.

இந்த வசனத்திலிருந்து, எந்த அளவுக்கு எதிர்ப்பு கடுமையானதாக இருக்கிறதோ அந்த அளவுக்கு உறுதியுடன் நம்பிக்கையாளர் நிற்க வேண்டும் என்ற முடிவைப் பெறுகிறோம். பாருங்கள். பௌதீகமான நோயாளி இவ்வாறு மருத்துவம் செய்வதில்லை. ஒரு மருத்துவத்தால் அவருக்கு நலம் கிடைக்கவில்லை என்றால் மருத்துவம் செய்வதையே விட்டுவிடுவதில்லை. மாறாக, தொடர்ந்து மருத்துவம் செய்து கொண்டிருக்கிறார். அவருக்கு சிகிச்சை கிடைக்கும் வரை அல்லது மரணம் ஏற்படும் வரை அதை செய்து கொண்டே இருக்கிறார். அவ்வாறே ஆன்மீக நோயாளிகளும் செய்ய வேண்டும். பெரிய நோய் என்றால் அதை நீக்குவதற்கு முன்னரை விட அதிகமான முயற்சி செய்ய வேண்டும். முயற்சியில் வெற்றி பெற்று விட்டால் எல்லாம் கிடைத்து விட்டது. முயற்சி செய்து செய்து மரணித்து விட்டாலும் இறைவன் அந்த முயற்சிக்கு பிரதிபலனாக கொஞ்சம் கண்டும் காணாது விட்டு விடுவான். ஆனால் முயற்சியையே விட்டு விட்டால் அந்த நிலைமையில் மரணித்தால் தண்டனையைத் தவிர வேறு என்ன கிடைக்க முடியும்?

எனவே மனிதன் முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டே இருக்க வேண்டும். ஒருபோதும் நம்பிக்கையிழந்து அதை விட்டு விடக் கூடாது. சில மாணவர்கள் தனது உறுதியாக நிலைத்திருக்கும் தன்மையினால் வெற்றி பெறுவதை பள்ளிக் கூடங்களிலும், கல்லூரிகளிலும் பார்க்க முடியும். நான் **ஓர் இந்துவைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன். அவர் ஏழு ஆண்டுகள் தொடர்ந்து**

**தேர்வில் தவறிவிட்டார். இறுதியாக அவர் தேர்வு எழுதும்போது அவரது மகனும் அந்தத் தேர்வில் கலந்து கொண்டான். ஆயினும் அவர் அதனால் வெட்கப்படவில்லை; அவரும் தேர்வில் கலந்து கொண்டார். இறுதியில் அவர் வெற்றி பெற்று விட்டார்.** எனவே பதற்றமடையக் கூடாது. தனது நஃப்ஸை குறைத்து மதிப்பிடவோ அல்லது ஒன்றுமற்றதாகக் கருதுவதோ கூடாது. நான் தற்பெருமைக்கான போதனை வழங்கவில்லை; மாறாக, நிரந்தரமாக நிலைத்திருக்க வேண்டும் என்பதற்கான போதனை வழங்கிக் கொண்டிருக்கிறேன். நாம் இந்த வேலையைச் செய்ய முடியாது அல்லது நம்மால் இது முடியாது என நீங்கள் கூறாதீர்கள். மாறாக, அல்லாஹ் நமக்கும் எல்லா ஆற்றல்களையும் வழங்கி இருக்கிறான் எனக் கூற வேண்டும். அல்லாஹ் நம்பிக்கையாளரின் மகத்துவமாக இவ்வாறு கூறுகிறான்: ***மினல் முஃமினீன ரிஜாலுன் சதகூ மாஆஹதுல்லாஹ அலைஹி. ஃபமின்ஹும் மன் கழா நஹ்பஹூ. வமின்ஹும் மன் யன்தழிரு. (33.24)*** நம்பிக்கையாளர்களில் சிலர் தமது கடமைகளை நிறைவேற்றி விட்டனர்; மேலும் சிலர் சந்தர்ப்பம் கிடைத்தால் நிறைவெற்றி விடுவதற்கு ஆயத்தமாக இருக்கின்றனர். ஹதீஸில் வருகிறது: ஒரு சஹாபி, அந்தோ! நானும் பத்ர் போரில் இருந்திருந்தால் மிக நன்றாகப் போரிட்டிருப்பேன் என ஒரு சந்தர்ப்பத்தில் கூறினார். (இந்த சஹாபி அனஸ் பின் நழ்ர் என்பவராவார். புகாரி கிதாபுல் மகாஸி பாபுகஸ்வ உஹது காண்க).

ஆக, இந்த மாதிரியான விஷயங்கள் உள்ளத்திலிருந்து வெளியேறும்போது - அது உண்மையான ஆசையாகவும் இருக்கும்போது அது தற்பெருமை என அழைக்கப்பட மாட்டாது. மாறாக, அது பதுங்கி இருக்கும் நெருப்பிலிருந்து வெளிவரும் புகையைப் போன்றதாகும். இந்த சஹாபியின் விவகாரமும் அத்தகையதாகத்தான் இருந்தது. அவர் உஹது போரில் கலந்து

கொண்டார். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஷஹீதாகி விட்டார்கள் என பரவலாகப் பேசப்பட்டது; இந்தச் செய்தி ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு எட்டியபோது அவர்கள் பதற்றமடைந்தவாறு உட்கார்ந்து விட்டார்கள். அப்போது அதே சஹாபி (அனஸ் பின் நழ்ர்) வந்து, என்ன விஷயம் எனக் கேட்டார். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு அருகில் இன்னொரு சஹாபியும் தலைகுனிந்தவாறு அமர்ந்திருந்தார். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஷஹீதாகி விட்டார்கள் என அவரிடம் கூறினர். அப்போது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஷஹீதாகி விட்டார்கள் என்றால் இனி நாம் இந்த உலகில் இருந்து என்ன செய்யப் போகிறோம்? எனக் கூறியவாறு அந்த சஹாபி எதிரிகளைத் தாக்கினார். போரிட்டவாறு ஷஹீதாகி விட்டார். அவருடைய உடல் கிடைத்தபோது அவரது உடலில் 70 காயங்கள் பட்டிருந்தன. *(சீரத் இப்னு ஹிஷாம் அரபி தொகுதி 2 பக்கம் 85)*

## தற்பெருமைக்கும் நம்பிக்கையிழக்காதிருத்தல் என்பதற்கும் உள்ள வித்தியாசம்

எனவே தன் மீது ஒருபோதும் தவறான எண்ணம் கொள்ளக் கூடாது என்பது ஒரு முக்கியமான கருத்தாகும். **மற்றவர்களின் மீது தவறான எண்ணம் கொள்வது தீயதாக இருப்பதைப் போன்றே தன் மீது தவறான எண்ணம் கொள்வதும் நல்லதல்ல. இன்னும் கூறுவதென்றால் பாவமாகும்.** எனவே அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வைத்தவாறு, நாம் ஷய்த்தானை நம் மீது மேலோங்க விடமாட்டோம் என உள்ளத்தில் கருதிக் கொள்ள வேண்டும். அவநம்பிக்கை கொள்ளாதிருத்தல் மற்றும் தனது உள்ளத்தின் மீது தவறான எண்ணம் கொள்ளாதிருத்தல் ஆகியவற்றிற்கும் தற்பெருமை, ஆணவம் என்பதற்கும் இடையிலுள்ள வித்தியாசம் என்னவென்றால், முதலில் குறிப்பிட்டது எப்போதும் வருங்கால சம்பவங்களுடன் தொடர்புடையதாகும். பின்னால் குறிப்பிட்டது பொதுவாக

முந்தைய பணிகளைப் பற்றியதாக இருக்கிறது. தன்னலம் கொண்ட, ஆணவம் கொண்ட மனிதன் வேலை செய்யும்போது வெகு சீக்கிரம் பதற்றமடைந்து விடுகிறான். ஆனால் வேலை நடந்து விட்டால் பெருமை கொள்கிறான். இறைவன் மீது நம்பிக்கை வைப்பவர் – தன் உள்ளத்தின் மீது தவறான எண்ணம் கொள்ளாத மனிதர் ஒரு வேலை செய்து முடியாத வரை தனது நம்பிக்கையை பற்றிப் பிடித்து வைக்கிறார். அது நடந்து விடும்போது அது பற்றி பேசுவதும் இல்லை.

## பதினொன்றாவது விஷயம்

சிலர் சில பாவங்களை மிகப் பெரியவையாகக் குறிப்பிட்டு விடுகின்றனர். மேலும் சிலவற்றை சிறியவையாகக் குறிப்பிட்டு விடுகின்றனர். மேலும் அவற்றிலிருந்து தப்பிப்பதற்கு அதிக எச்சரிக்கையாக இருப்பதில்லை. **எந்தவொரு பாவமும் சிறியது பெரியது என்று இல்லை எனத் திருக்குர்ஆனிலிருந்து தெரிய வருகிறது.** திருக்குர்ஆனின்படி சிறிய பாவம் என்பது மனித சிந்தனையில் தோன்றி அதை அவன் செய்யாததேயாகும். எதை அவன் செய்து விடுகிறானோ அது பெரும் பாவமாகும். (பாவங்களாகிய) இவற்றைப் பற்றி சகீரா (சிறியவை) (கபீரா) பெரியவை ஆகிய சொல்வழக்குகளை மக்கள் தாமாகவே உருவாக்கி வைத்துள்ளனர். திருக்குர்ஆனில் இந்த பொருளில் எங்கேயுமே எந்தக் குறிப்பும் இல்லை. எனவே எந்தப் பாவத்தையும் சிறியது எனக் கருதக் கூடாது. ஏனெனில் சிறியதாகக் கருதி மனிதன் அதைப் பொருட்படுத்துவதில்லை.

ஒரு சம்பவம் கூறப்படுகிறது. ஒருவன் தன்னை மிகப் பெரிய வீரம் மிக்கவனாகக் கருதினான். அவன் பச்சை குத்துபவனிடம் சென்று என்னுடைய கையில் சிங்கத்தின் உருவத்தைப் பச்சை குத்து என்றான். அவன் பச்சை குத்த ஆரம்பித்தபோது அவனுக்கு வலி ஏற்பட்டது. அவன், என்ன உருவாக்கிக் கொண்டிருக்கிறாய்? எனக் கேட்டான். பச்சைக் குத்துபவன்,

சிங்கத்தின் வலது காதை உருவாக்குகிறேன் என்றான். அதற்கு அவன் காதை உருவாக்காவிட்டால் சிங்கம் இருக்குமா இருக்காதா? எனக் கேட்டான். இருக்கும் என பச்சைக் குத்துபவன் கூறினான். அப்போது அதை விடு; அடுத்து குத்து என்றான். அவன் அடுத்து குத்த ஆரம்பித்தான். வலி எடுத்தபோது இப்போது என்ன குத்த ஆரம்பித்திருக்கிறாய் எனக் கேட்டான். இடது காதை பச்சைக் குத்த ஆரம்பித்திருக்கிறேன் என்றான். அப்போது அவன் இது இல்லாவிட்டால் சிங்கம் சிங்கமாக இருக்காதா என்ன? எனக் கேட்டான். சிங்கம் இருக்கும் என பச்சை குத்துபவன் கூறினான். அதற்கு அவன் அப்போது அதை விட்டு விடு. அடுத்து குத்து என்றான். இவ்வாறு ஒவ்வொரு முறையும் அவன் கூறிக் கொண்டே சென்றான். கடைசியில் பச்சைக் குத்துபவன், இப்போது சிங்கத்தின் எந்தப் பகுதியும் எஞ்சியிருக்கவில்லை. சென்று வாருங்கள் எனக் கூறி அனுப்பி விட்டான்.

இந்த நிலையில்தான் சிலருடைய செயல்களின் நிலையும் இருக்கிறது. அவர்கள் ஒவ்வொரு விஷயத்தையும் சாதாரணமானது என நினைத்து விட்டு விடுகின்றனர். அதனால் பின்னால் எதுவும் எஞ்சியிருப்பதில்லை. ஆனால் அப்படிச் செய்யக் கூடாது. முதலில் நான் கூறியது போன்று (பாவத்தில்) சிறியது என்று எதுவுமில்லை. இரண்டாவது, ஒரு செயல் இன்னொன்றைத் தூண்டுகிறது என்பதையும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். **ஒரு தீமை இன்னொரு தீமைக்குக் காரணமாக அமைவதைப் போன்றே ஒரு நன்மை இன்னொரு நன்மையைத் தூண்டுகிறது.** எனவே எந்த நன்மையையும், தீமையையும் சிறியதாகக் கருதக் கூடாது.

ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: அவர்கள் ஒருமுறை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்குப் பிறகு ஈமான் கொண்டவர்களை நோக்கி கூறினார்கள்: இன்று நீங்கள் சில தீமைகளை செய்கின்றீர்கள்; அவற்றை சிறியவை எனக்

கருதுகிறீர்கள். ஆனால் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் காலத்தின் அவற்றை செய்வது மரணமாகக் கருதப்பட்டது. அவ்வாறே ஹதீலிருந்து நிரூபணமாகின்றது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கபருஸ்தானை கடந்து சென்று கொண்டிருந்தபோது, இந்த இரண்டு கபர்வாசிகளுக்கும் சிறிய பாவங்களின் காரணமாக தண்டனை கிடைத்துக் கொண்டிருக்கிறது. ஆனால் உண்மையில் அவை பெரியவையாக இருந்தன என்றார்கள். எப்படி சிறியவை என்றால் அவர்கள் அவற்றிலிருந்து எளிதாக தப்பித்திருக்கலாம். மேலும் எப்படி பெரியவை என்றால் அவை நரகத்தின் பக்கம் இழுத்துச் செல்லுவதற்குக் காரணமாகி விட்டன. இவ்விருவரில் ஒருவர் சிறுநீர் கழித்த பிறகு அதன் கடைசி துளியிலிருந்து எச்சரிக்கையாக இல்லாமலிருந்தார். (அதாவது சுத்தம் செய்யாமல் இருந்தார்). இரண்டாமவர் புறம் பேசுபவராக இருந்தார்.*(திர்மிதி .அப்வாபுத் தஹாரத்).*

ஆக, எந்த விஷயமும் சிறியதாக இருப்பதில்லை.மாறாக, சிறியது பெரியது என்பது ஒப்புமைப்படுத்திப் பார்ப்பதன் மூலமாக ஏற்பட முடியும். ஒரு மனிதன் செய்கின்ற, செய்ய முடிகின்ற ஒரு விஷயம் – அது எவ்வளவு கடினமானதாகவும் பெரியதாகவும் இருந்தாலும் அது அவருக்கு சிறியதாகும். ஆனால் எது அவருக்கு செய்ய முடியாதோ அல்லது செய்வதில்லையோ அது எவ்வளவுதான் சாதாரணமானதாக இருந்தாலும் அது அவருக்குப் பெரியதாகும். உதாரணமாக, ஒருவர் தொழுகிறார்; நோன்பு வைக்கிறார்; ஸகாத் கொடுக்கிறார். ஹஜ் செய்கிறார். ஆனால் ஏசுவதிலிருந்து விலகுவதில்லை. அவர் ஏன் இதிலிருந்து விலகுவதில்லை? என நாம் கேட்கும்போது அவரால் விலக முடிவதில்லை எனக் கூறப்படும். அப்போது அந்த வேலையே அவருக்கு பெரிய வேலையாகும்.

எனவே எந்தத் தீமையில் ஒருவர் சிக்கியிருக்கிறாரோ அவர்

அதை விட்டு விடுவதில்லையோ அதுவே அவருக்கு (பாவத்தில்) பெரியது ஆகும். மேலும் எந்த நன்மையை மனிதன் மேற்கொள்வதில்லையோ அதுவே அவருக்கு மிகப் பெரியது ஆகும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் எழுதியிருக்கிறார்கள்: எதை மனிதன் இயல்பாகவே செய்ய முடியுமோ அதற்கு அவனுக்கு நற்கூலி கிடைப்பதில்லை. எதற்கு எதிராக செயல்படுவதற்கு உள்ளம் கூறுகின்றதோ - எதற்கு எதிராக செயல்படுவதற்கு ஆற்றலையும் கொண்டிருக்கிறாரோ அப்படியிருந்தும் மனிதன் அதிலிருந்து தப்பிக்கும்போது நற்கூலி கிடைக்கிறது. உதாரணமாக, காம உணர்வே இல்லாத ஒருவர் நான் விபச்சாரம் செய்வதில்லை எனக் கூறினால் அது அவருக்கு நன்மை அல்ல. ஆயினும் அவர் புறப்பேசுவதை விட்டு விட்டால் அது அவருக்கு நன்மையாகும். அவ்வாறே எவரிடம் ஒரு தீமை காணப்படுகிறதோ அதை அவர் விட்டு விடுவது நன்மையாகும். ஏனெனில் அதுவே அவருக்கு பெரும் பாவமாகும்.

## இறைஞானத்தின் படித்தரங்கள்

இறைஞானம் எவ்வாறு உருவாக முடியும் என்பதைப் பற்றி சுருக்கமாகக் கூறியிருக்கிறேன். நீங்கள் இந்த விஷயங்களின்படி செயல்படுவீர்கள் என்றால் மிக அதிகமாக பயன்பெறுவீர்கள்- இன்ஷா அல்லாஹ். இப்போது நான் இறைஞானத்தின் இரண்டு மூன்று அடையாளங்களைக் கூறுகிறேன். ஏனெனில் அதிகமாக எடுத்துக் கூறுவதற்கு நேரமில்லை. இறைஞானத்திற்கான அடையாளங்கள் இரண்டு வகைப்படும். ஒன்று, உட்புறமானது; இன்னொன்று வெளிப்புறமானது. வெளிப்புறமானது என்னவென்றால், ஹதீஸில் வந்துள்ளது: நஃபில்களின் மூலமாக மனிதன் எவ்வளவு நெருக்கமானவனாக ஆகி விடுகின்றான் என்றால் இறைவன் அவருடைய கையாகவும், காலாகவும், நாவாகவும் ஆகி விடுகின்றான். ***(புகாரி .கிதாபுர் ரிகாக்).***

**இதிலிருந்து வெறும் கடமையானவற்றை மட்டும்**

**நிறைவேற்றுபவருக்கு இறைஞானம் கிடைப்பதில்லை; மாறாக நஃபில்களும் நிறைவேற்ற வேண்டியது அவசியமானதாகும் எனத் தெரிகிறது.** இதற்குப் பிறகு அவருக்கு எத்தகைய இறைஞானம் கிடைக்கிறதென்றால், இறைவன் அவருடைய கையாகவும், காலாகவும் மூக்காகவும் காதாகவும் நாவாகவும் ஆகி விடுகின்றான். இதன் கருத்து, அவர் செய்யும் வேலை இறைவனின் வேலையாக இருக்கிறது. அதாவது, எவ்வாறு இறைவனின் வேலை நிறைவேறியே தீர்கிறதோ, எவரும் அதைத் தடுக்க முடியாதோ அவ்வாறே அவருடைய வேலையையும் எவராலும் தடுக்க முடியாது; அவை கண்டிப்பாக நடந்தே தீர்கின்றன. அவர் ஒருவரைப் பிடிக்கும்போது பிறகு செல்ல விடுவதில்லை; ஒருவருடைய பேச்சைக் கேட்கும்போது அதை ஒப்புக்கொள்ள வைக்கிறார். எவர் மீது தனது கவனத்தை செலுத்துகிறாரோ அவருக்கு சீர்திருத்தம் ஏற்பட்டு விடுகிறது. மேலும் அவர் கூறுவதெல்லாம் உண்மையாக இருக்கிறது. ஏனெனில் ***மா யன்திகு அனில் ஹவா இன் ஹுவ இல்லா வஹ்யுன்ய் யூஹா*** (இவர் தனது சொந்த விருப்பத்தின்படி பேசவுமில்லை. இது இறைவனிடமிருந்து அறிவிக்கப்பெற்ற வஹியேயாகும் 53:3,4) என்பதற்குப் பொருத்தமானவராகி விடுகிறார். அவருடைய பிடி கடுமையாக இருக்கிறது. எவரை அவர் பிடிக்கிறாரோ அவர் தப்பிக்க முடியாது. **ஆக, இறைஞானம் பெறுவது என்பதன் பொருள், இறைவனின் பண்புகள் மனிதனிடம் பரவி விடுகின்றன.** மேலும் இறைவனின் செயல்களும் அவர் மூலமாக வெளிவரத் தொடங்குகின்றன. இறைவன் அவரை எப்படி நடத்திச் செல்கிறான் என்றால் அவரிடமிருந்து எப்படிப்பட்ட வேலையை வாங்குகிறான் என்றால், மக்கள் இறைவனின் தோற்றத்தைப் பார்த்து விடுகின்றனர். மேலும் அந்த தோற்றம் எப்படி இருக்கிறதென்றால், சில அறிவிலிகள் அவரை இறைவன் என்றே கூறத் தொடங்கி விடுகின்றனர்.

இந்த நிலை வரை சென்றடைவதற்கு சில உட்புறமான மாற்றங்கள் மனிதனிடம் ஏற்படுகின்றன. அவை என்னவென்றால், ஒன்று, அவருக்கு நன்மை, தீமை பற்றிய அறிவு கிடைத்து விடுகிறது. சில நேரத்தில் ஒரு விஷயம் வெளிப்படையில் தீயதாகக் தெரிகின்றது. ஆனால் அதைச் செய்யத் துவங்கும்போது அது தீயது எனத் தெரிகிறது. எனவே அவர் அதை விட்டு விடுகிறார். மேலும் அவர் சில நேரத்தில் ஒரு வேலையை தீயது என நினைத்து விட்டுவிடத் தொடங்குகிறார். ஆனால் இது நல்லதாகும் என அவருக்கு அறிவூட்டப்படுகிறது.

ஆக, **இறைஞானம் என்பதன் முதல் தரம் என்னவென்றால், எவ்வாறு இறைவனுக்கு நன்மை, தீமைக்கான ஞானம் இருக்கிறதோ அதேபோன்று அடியாருக்கு ஞானம் வழங்கப்படுகிறது.** ஆனால் மற்றவர்களுக்கு இது கிடைப்பதில்லை. மற்றவர்கள் தொழுத அதே தொழுகையையும், வைத்த அதே நோன்பையும்தான் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தொழுதார்கள்; வைத்தார்கள். ஆனால் அவர்களுக்குக் கிடைத்த அந்த படித்தரம் மற்றவர்களுக்கும் கிடைத்ததா என்ன? ஒருபோதும் இல்லை. இதற்குக் காரணம், பொதுவான மக்களுக்குத் தென்பட்ட நன்மைகளுக்குப் பின்னாலும் சில நன்மைகள் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்குத் தென்பட்டன. அவர்கள் அவற்றின்படியும் செயல்பட்டார்கள். அவ்வாறே பொதுவான மக்களுக்குத் தென்பட்ட தீமைகளுக்குப் பின்னாலும் சில தீமைகள் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்குத் தென்பட்டன. அவற்றிலிருந்தும் அவர்கள் விலகினார்கள். இதன் காரணமாகவே மற்றவர்களுக்குக் கிடைக்காத படித்தரம் அவர்களுக்குக் கிடைத்தது.

ஆக, வெளிப்படையான நன்மைகள் தீமைகள் ஆகியவற்றிற்குப் பின்னாலும் நன்மைகள், தீமைகள்

இருக்கின்றன. ஆனால் அவற்றை எடுத்துக் கூற முடியாது. எவருக்கு அதைப் புரிவதற்கான சிறப்பான தகுதி அல்லாஹ்வின் புறமிருந்து வழங்கப்படுகிறதோ அவரால்தான் புரிய முடியும். மேலும் இது ஒருமுறை கிடைத்து விட்டால் அதன்படி செயல்படுத்தப்படும்போது அது மேலும் அதிகமாகி விடுகிறது; மேலும் நாள்தோறும் அதிகமாகிக் கொண்டிருக்கிறது. இது இறைஞானத்தின் சிறிய தகுதி ஆகும்.

இதற்கு அடுத்த இரண்டாவது தகுதி என்னவென்றால், மறைமுகமான தீமைகள் வெளிப்படுத்தப்படுகின்றன. ஒருவிதமான தீமை எப்படிப்பட்டது என்றால் அதில் திரை வீழ்ந்து கிடக்கிறது. எனவே அந்தத் திரையை அகற்றாத வரை அது தெரிவதில்லை. ஆனால் இன்னொரு தீமை இருக்கிறது. அது முன்னால் இருக்கிறது; ஆனால் அது தெரிவதில்லை. உதாரணமாக, ஒருவர் பன்றி இறைச்சியை ஆட்டிறைச்சி எனக் கூறினால் என்ன தெரியும்? அல்லது இறைச்சி ஆட்டிறைச்சியாகவே இருந்தாலும், அதைத் தின்பது ஆகுமானதாக இல்லாமல் இருக்கலாம். இந்த மாதிரியான விஷயத்தைப் பற்றி எடுத்துக் கூற வேண்டும். இறைஞானம் பெற்றவர்களுக்கு முன்னால் இப்படிப்பட்ட விஷயம் வரும்போது அவர்களுடைய உள்ளத்தில் இதனால் குறிப்பிட்ட தூண்டுதல் அல்லது வெறுப்பு உருவாக்கப்படுகிறது. அதனால் அவர்கள் புரிந்து விடுகிறார்கள்.

ஒரு சம்பவம் கூறப்படுகிறது: ஒரு பெரியவர் பலருக்கும் முன்னால் சாப்பிட அமர்ந்தார். ஆனால் எதுவும் சாப்பிடாமல் எழுந்து சென்று விட்டார். இதைப் பார்த்து மற்றவர்களும் சாப்பிடுவதை விட்டு விட்டனர். மேலும் அவரிடம் சென்று எழுந்து வந்ததன் காரணத்தைக் கேட்டனர். அப்போது அவர், எனக்கு அந்த உணவை சாப்பிடுவதற்கு அதிக உந்துதல் ஏற்பட்டது; அதிலிருந்து அதில் ஏதோ குறைபாடு இருப்பதை

நான் உணர்ந்து கொண்டேன்; எனவே நான் எழுந்து வந்தேன் எனக் கூறினார். எவர்களின் உள்ளம் கட்டுப்பாட்டில் இருக்கிறதோ அவர்கள் இந்த வழிமுறையினால் பாதுகாப்பாக வைக்கப்படுகின்றனர் - அவர்கள் முஸ்லிம்களாக இல்லாவிட்டாலும் சரியே. அவர்கள் தமது உள்ளத்தின் ஆர்வத்தினால் இது தீயது எனப் புரிந்து கொள்கின்றனர். ஆனால் எவர்கள் இதை விட உயர்ந்த தகுதி வாய்ந்தவர்களாக இருக்கிறார்களோ அவர்களின் உள்ளம் நல்லதாக இருக்கின்றது. அதற்கு முன்னால் தீமை எந்தக் கோணத்தில் எடுத்து வைத்தாலும் உடனே அது கீழ்வரும் உருதுக் கவிதைக் கேற்ப இவ்வாறு கூறிவிடுகிறது: அதன் பொருள்: 'இனி நீ என்ன ஆடையை அணிய விரும்புகிறாயோ அணிந்து கொள்; நான் உன்னையும் உனது செயலையும் அடையாளம் கண்டு விட்டேன்.'

மேலும் இதுவே இறைஞானத்தின் இறுதி படித்தரமாகும். மனிதன் நன்மையை நன்மையாகவும் தீமையை தீமையாகவும் பார்த்து விடுகின்றான். அது எவ்வளவுதான் மறைவிலும் மறைவானதாக இருந்தாலும் சரியே. அப்படி இருப்பவர்களிடம், நீங்கள் யார் எனக் கேள்வி கேட்க வேண்டிய தேவை இல்லை. மாறாக, உலகம் தானாகவே அவரைக் கண்டு கொள்கிறது. இறைவன் உங்களுக்கு இந்த விஷயங்களின்படி செயல்படும் நல்வாய்ப்பை வழங்குவானாக. மேலும் தனது ஞானம் என்னும் அருட்கொடையை வாரி வழங்குவானாக. ஆமீன்.